Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

மார்ச்.05-11,2000

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

முரசு 347

## எதிர்க்கட்சியின் குத்துக்கரணம்

## வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்

நடிப்புக்கு முழுக்குப் போடும் நடிகை

தாளமுடியாத தலைவலியை தவிர்க்க வழிகள்



பந்தா பண்ணும் ஜோதிகா

# முரசம்

## உத்தரவாதம் என்ன?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இலங்கை இனப்பிரச்சனையில்
மத்தியஸ்தம் வகிக்க
மீண்டும் ஒரு வெளி நாடு
முன்வந்திருக்கும் தருணமிது.

இதற்கு முன்னைய
முயற்சிகளில்
மத்தியஸ்தராக
முன்னின்ற நாடு
இந்தியாவே.

அதனால் ஈட்டிய
அரசியல் தீர்வாக
மாகாண சபைகள்
அமைந்திருந்தன.

இதுவரை கண்ட
ஒரேயொரு தீர்வாகவும்
அதுவே இருக்கிறது.

அந்த மாகாணசபைகூட
தமிழ்பேசும் தரப்பினரின்
முழுமையான ஆதங்கங்களைத்
தீர்ப்பதாக இருக்கவில்லை.

விடுதலைப் புலிகளாலும்
அந்தத் தீர்வு
நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அந்த மாகாணசபை கூட
ஒன்றரை வருடங்களுக்குமேல்
வடக்குக் கிழக்கில்
நிலைக்க வில்லை.

அது கலைக்கப்பட்ட போது
முதலமைச்சரின் சம்மதமின்றி
மாகாணசபையைக் கலைக்க
முடியாதிருந்த அதிகாரத்தை
மாற்றியமைத்துக் கொண்டே
கலைக்கப் பட்டது.

ஆனால்,
எந்த மக்களின்
பிரச்சனைக்குத்
தீர்வுகாண
எந்த மாகாணசபை
உருவாக்கப்பட்டதோ,
அந்த வடக்கு-கிழக்கு
மாகாணத்தில் மட்டும்
மாகாண சபை
கலைக்கப் பட்டிருக்க,
ஏனைய சகல மாகாணங்களிலும்
அவை இயங்குகின்றன.

பிச்சையெடுத்ததோ ஆண்டி
அதைப் பிடுங்கித் தின்றதோ
பெருமந்தியென்ற
கதையாகிவிட்டது,
அன்று இத்தனை பெரிய
சர்ச்சைகளுக்கு மத்தியில்
உருவாக்கப்பட்ட
மாகாணசபையின் கதி.

இந்த உடன்பாட்டை நம்பி
ஆயுதப் போராட்டத்தைக்
கைவிட்டுவிட்டு
ஜனநாயக வழிக்குவந்த
தமிழ் இயக்கங்கள்
கையாலாகாத நிலைக்கே
தள்ளப்பட்டன.

இதேவேளை தமது
ஆயுதப் போராட்டத்தைத்
தொடர்ந்து முன்னெடுக்கும்
புலிகள் இயக்கத்திடமே
பேரம் பேசும் சக்தி
அதிகளவில் உள்ளது.

இனப்பிரச்சனைக்குத்
தீர்வு காண்பதற்கென
இலங்கை அரசாங்கத்தால்
இன்று முன்னெடுக்கப்படும்
பேச்சு வார்த்தைகள்
பாராளுமன்றத்
தமிழ்க் கட்சிகளுடனேயே
ஆராயப் பட்டுள்ளன.

அதையடுத்து ஐ.தே.க.வுடன்
ஆராய்வதற்காக
அரசாங்கம் அழைத்தாலும்
அந்தச் சந்திப்பில்
பங்கு பற்ற
ஐ.தே.க. மறுத்துவிட்டது.

அது,
இப்போது அரசாங்கம்
முன்வைக்கும் தீர்வு-
முன்னையதைவிட
மாற்றப்பட்டுள்ளதாகக்
குற்றம் சாட்டி
அதனைப் படிப்பதற்கு
கால அவகாசம்
கேட்டுள்ளது.

இந்த சமிக்ஞை
தமிழ்க் கட்சிகளுடனான
பேச்சுவார்த்தைகளில்
ஈட்டப்பட்ட
ஒருசில உடன்பாடுகளையும்
ஐ.தே.க. நிராகரிக்கலாமென்ற
சந்தேகத்தையே
ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்க்கட்சிகளுடன் கூட
முக்கியமான விடயங்களில்
இணக்கம் இன்னும் ஈட்டப்படவில்லை.

இந்த நிலையில்
இனப்பிரச்சனைக்குத்
தீர்வு காணும்
பக்குவத்தை
சிங்கள அரசியல்
இன்னும் ஈட்டவில்லை.

தமக்குள்ளேயே
இணக்கம் காண முடியாத
சிங்களக் கட்சிகள்,
தமிழ்த் தரப்பினரோடு எப்படி
பொது இணக்கத்துக்கு
வரப் போகிறார்கள்?

இதற்கு மத்தியில்தான்
நோர்வே அரசாங்கத்தின்
மூன்றாம்தரப்பு மத்தியஸ்தம்
ஏற்பட்டுள்ளது.

அவ்வாறான மத்தியஸ்தம்கூட
புலிகளோடு நடத்தவுள்ள
பேச்சுவார்த்தைக்கு
எடுத்துச் செல்வதற்கான
அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம்
இன்னும் தயாராகவில்லை.

அதில் இருபெரும்
பிரதான கட்சிகளுக்கும்
இணக்கம் தோன்றவில்லை.

இந்த நிலையில் அரசாங்கம்
மூன்றாந்தரப்பு
மத்தியஸ்தத்தின்
முன்னிலையில்
புலிகளுடன்
எதைப் பேசப் போகிறார்கள்?
அவற்றுக்கு
என்ன உத்தரவாதங்களைக்
கொண்டிருக்கப் போகிறார்கள்
என்பதே கேள்வி.

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்



## உத்தமனார் வேண்டுவது...?

"குழந்தாய்...! இறைவனின் கருணை எவ்வாறானது என்று அறிவாயா? அது சிறு குழந்தையிடம் இருக்கும் மிட்டாயைப் போன்றது. அந்த மிட்டாயைத் தரும்படி சிலர் குழந்தையிடம் கெஞ்சுகின்றனர். ஆனால் குழந்தையோ மிட்டாயை அவர்களுக்குக்கொடுப்பதில்லை. ஆனால் அதே குழந்தை தனக்குப் பிடித்தவர்களிடம் மிட்டாயைத் தந்து விடுகிறது.

ஒருவன் இறையனுபூதி பெறுவதற்காகத் தன் வாழ் நாள் முழுவதையும் கடுந்தவத்தில் செலவிடுகின்றான். ஆத்ம சாதனை புரிகின்றான். ஆனாலும் அவனுக்கு வெற்றி கிட்டுவதில்லை. மற்றொருவன் எவ்வித முயற்சியுமின்றி இறையனுபூதி பெறுகின்றான். இது இறைவனுடைய கருணையைப் பொறுத்ததாகும். விரும்புபவர்களிடம் இறைவன் தன் கருணையைப் பொழிகின்றான். கருணைதான் மிக முக்கியமானதாகும்.

உன்னுடைய, சாதனை, செயல், சொல் ஆகியவற்றில் உண்மையானவனாக இரு. நீ பேறு பெற்றவன் என்பதை உணர்வாயு! உலகில் உள்ள அனைத்து உயிர்கள் மீதும் இறைவனுடைய கருணை எப்பொழுதும் பொழிந்து கொண்டிருக்கிறது. கருணையைக் கேட்க வேண்டிய அவசியமேயில்லை. தியானத்தை செவ்வனே செய். இறைவனின் இணையற்ற கருணையை புரிந்துக் கொள்வாய். உண்மை, அன்பு இதனையே கடவுள் விரும்புகிறார். அதுவல்லாத வெறும் வார்த்தைகள் இறைவனைத் தொடாது.

இவ்வாறு அன்னை சாரதாமணி தேவி உரைப்பதிலிருந்து இறைவன் அடியவனிடம் எதனை எதிர்பார்க்கிறான் என்பது தெளிவாகின்றதல்லவா?

தொகுப்பு: கொஸ்லாந்தையூர்-அஞ்சன்.

## இன பந்துக்களைப் பகைக்காதீர்

இறைவன், ஒருவருக்கு, மறுவுலகில் தண்டனையைத் தயார் செய்திருப்பதுடன், இவ்வுலகில் வெகு சீக்கிரமாக அவருக்குத் தண்டனையளிக்கின்ற பாவம்; அநீதி செய்தல், இரத்த பந்துக்களைத் துண்டித்து நடத்தல். ஆக இவ்விரண்டையும் தவிர வேறில்லை. (நபி (ஸல்) அவர்கள்)

சகல குற்றங்களுக்குரிய தண்டனையை இறைவன் மறுமை நாள்வரை, தாமதப்படுத்தி வைத்திருக்கிறான்; ஆனால், பெற்றோர்களுக்கு மாறு புரிந்ததின் தண்டனையையும், இன பந்துக்களைப் பகைத்துக் கொண்டதின் தண்டனையையும் வெகு விரைவில் தந்து விடுகிறான்.

ஒருநாள் பஜ்ருத் தொழுகைக்குப் பின், அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், சபையில் அமர்ந்திருந்தார்கள். அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து, "நாம் ஒரு துஆச் செய்வதற்கு நாடுகிறோம். ஆதலால் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறிகிறேன். உங்களில் எவரேனும் பந்துக்களைப் பகைத்துக் கொண்டவர் இருப்பின், அவர் உடனே இச்சபையை விட்டு வெளியேறி விடுவாராக! ஏனெனில், அத்தகையவர் விஷயத்தில் வானத்தின் கதவுகள் அடைபட்டு விடுகின்றன.! (அதாவது, அவரின் காரணத்தால் அனைவரின் துஆவும் அங்கீகரிக்கப்படாமல் ஆகிவிடும்" என்றார்கள்.

அறிவித்தவர் பஹ்ஜு இப்னு ஹகீம்(ரலி)

நன்றி . 'பொன்னான பொன் மொழிகள்' — வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

# கவிதைப் போட்டி இல.344



**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### பரிசுக்குரிய கவிதை

## திரும்பி விடுங்கள்

மாடியேறும் மழலைகளே - நீங்கள்
நாடிப்போகும் அப்பா அம்மா மாமா அங்கில்லை!
மூடிவிட்டனர் மண்ணிற்கு இரையாய்!
தேடி தேகம் தேயாமல் திரும்பிவிடுங்கள்!

செல்வி கோ.கிஷ்ஜனா- ஆரையம்பதி-02.

### பாதுகாப்பு

பாதங்களை பதித்து;
படிக்கட்டில்
ஏறுமுன்..!
நில்லுங்கள்!
கவனியுங்கள்!
முன்னேறுங்கள்!

என்.எஸ்.முஸம்மில்-புதிய காத்தான்குடி-06.

### மாறாத கதை

ஆயிரம் தேர்தல்கள்
வந்தாலும்...
இந்நாதியற்ற சிறுவர்களின்
நிலை மாறாது-துப்பாக்கி
வேட்டு என்றால் மீண்டும்...
இதே நிலை தான்.

ஏ.எல்.எம்.நிசாத்-காத்தான்குடி-06.

### வெற்றிப்படி

தோல்விப்படிகளிலும்
வெற்றிப்படியுண்டு!
தமிழா நீ
ஒற்றுமைக் கயிற்றை
பற்றிப்பிடித்தால்...!

கிண்ணியா ஏ. நஸ்புள்ளா.

### நஞ்சை விதைத்தவன்-முன்னவன்

முன்னவன் வழியைப் பின்னவன்
தொடருவதால்,
பிஞ்சுமனம் வஞ்சமாகின்றது.
வஞ்சகங்கள் வேதனைகளாகி
வாதனை புரிகின்றன.
கொஞ்சும் குழந்தைக்கு
நஞ்சை விதைத்தவன் முன்னவன்
அன்றே!

திருமதி கி.கதிர்காமத்தம்பி-கொட்டகலை.

### தேடல்

பொல்லாத உலகில்
பொற்காலம் வருமா?
எனத் தேடுகின்றோம்.
தினமும்.

பழ.பொன்னையா-களுவாஞ்சிக்குடி.

### படிப்பு

படிப்பு, படிகளை
துடிப்புடன் கடந்தால்
முடிக்கும் பணிகள்
முதுமையில் ஏராளம்!

நா.ஜெயபாலன்-பிபிலை.

### ஏமாற்றம்

சுமையோடு படிதாண்டும் பள்ளிச்
சிறார்களே!
துள்ளியோடிக் கீழே வந்துவிடுங்கள்!
தேடிமேலே செல்ல ஏதுமில்லை-மாடிப்
படியில் மீண்டும் வெடி ஏதும்
வெடிக்கலாம்!!!!

திருமதி கண்மணி கோபால்- ஆரையம்பதி-02.

### வேண்டுகோள்

அண்ணன் காட்டிய வழியிது
அதில் ஆயிரம் (தடை) படிகல்லப்பா,
அயராது முன்னேறினால்
அடைந்திடலாம் வெற்றியை!

சுகு செல்வராஜா-வட்டவளை.

### தேடல்

தீபம் இல்லாத இருட்டறையில்,
இந்த இரு இளம் உள்ளங்கள்,
யாரைத்தான் இந்நேரத்தில்
தேடி படி தாண்டியலைகிறதோ?

அ. சிராஜுல் ஹஸன்-கிண்ணியா-03.

### ஓடி (கூடி) விளையாடு

ஓடி விளையாடென்றார்;
ஓடாதே உடலைத்துளைக்கும்
சன்னமென் பாரின்று!
கூடிவிளையாடென்றார்;
கூடாதே அடைபடுவாய்
கூண்டுக்குள்ளென் பாரின்று!

ஏ. அஹ்மது ஜுனைது-ஏறாவூர்-06.

### அவல நிலை

கால்கள் தடுமாற,
திக்கற்ற நிலையில்,
திசைமாறும் உங்களுக்கு,
தீர்க்க தரிசனம் எப்போது கிடைக்கும்?

பசீரா எஸ். ஹமீட்-குருணாகலை.

### எங்கும் இன்னலே

ஏறினால் என்ன
இறங்கினால் என்ன
இருபுறமும் இருப்பது
இன்னல்களின் வாயில்கள்தான்!

ச.வித்யசாகரன்-மட்டக்களப்பு.

### ஓட்டம்

பாடசாலையில் துள்ளி ஓடுகிறீர்களா?
அல்லது, பாதகர்களின் பிடியிலிருந்து
தப்பித்து ஓடுகின்றீர்களா?

பி.புவனேஸ்வரி-கொழும்பு-13.

# கவிதைப் போட்டி இல.347



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 11.03.2000

கவிதைப் போட்டி இல.347
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்பின் முரசே!

ஜப்பானில் வாழ்கின்ற நான் ஒளிவு மறைவு இன்றிய யதார்த்தங்களை துல்லியமாகக் கூறுகின்ற உனது ஆக்கங்களாலும் உண்மைகளைச் சுவைபடக் கூறுகின்ற அனைத்து அம்சங்களாலும், நீ நீங்காமல் என் உள்ளத்தில் இடம் பிடித்துவிட்டதால், வாரா வாரம் தவறாமல் படித்து மகிழ்கின்றேன்.

வாரா வாரம் அற்புதமான தேன் தமிழில் வாரி வழங்கி வந்த வள்ளலான அற்புதராஜாவின் மரணச் செய்திகேட்டு திடுக்கிட்டுப் போனேன். என் அருமைக்காதலியாகிய தினமுரசை இனிக்காணக்கிடைக்காதோ என ஏங்கி சில வாரங்கள் தவியாத்தவித்தேன். மறுபிறவி எடுத்த உனது மலர்வால் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர் அற்புதராஜாவைப்படுகொலை செய்தவர்கள் தண்டிக்கப்பட்டே தீருவார்கள். என்னைப்போன்ற இலட்சோப இலட்ச வாசர்கர்களின் சாபக்கேடாவது அவர்களைச் சும்மா விடாது.

ஹலீம், ஜப்பான்.



இனிய முரசே! சபாஷ்!

பல வருடங்களாக சிரிப்பதையே மறந்து போயிருந்த என்னை வயிறு குலுங்க அல்ல அதற்கு மேலாக நினைத்து நினைத்து சிரிக்க வைத்து விட்டார் 'கனடாவில் காதிலைபூ கந்தசாமியார்' (வெற்றிலை சமாசாரம்) இப்படியே முன்னேறிச் செல்லவும். மேலும் வெலிக்கடை, களுத்துறை தமிழ் கைதிகளுக்கு நடந்த சம்பவங்கள் எம்மையெல்லாம் இரத்தம் உறைய வைத்துவிட்டன. தமிழ் மக்கள் விடயத்தில் இறைவனும் அவர்கள் பக்கம்போல் ஏன் அவர்கள் தம்மையே காப்பாற்ற முடியவில்லை. பிறகு எப்படி? ஒரு அன்பான வேண்டுதல். இனிமேலும், இனிமேலும் தமிழ்க் கட்சிகள் தமக்குள் ஒருவருக்கொருவர் பாரபட்சம் காட்டாது அனைவரும் ஒற்றுமையாக (மன்னிக்கவும்) செயற்பட்டு அவர்களின் விடுதலைக்கு உழைக்க வேண்டும் என்பதே எமது ஆவல் மட்டுமல்ல வேண்டுதலுமாகும். இல்லாவிட்டால் அவர்கள்....? வெளியே வருவது சந்தேகம்தான்....?

விக்கி முத்தையா, கனடா.

ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா நான் கடந்த 8 வருடங்களாக உங்கள் தினமுரசு பத்திரிகையை வாசித்துவருகிறேன். அதன் சிந்தனையும் செயலும் என்னை வெகுவாக கவர்ந்து விட்டன. அது போல் தான் என்னுடைய சிந்தனைகளும், என்னுடைய கதைகளும் கற்பனையும் முற்போக்கானவை. நான் எழுதினால் முரசுக்குத்தான் என் கதைகளை எழுதுவேன் என்று சபதம் எடுத்துள்ளேன். நான் மலையகத்தில் பிறந்தாலும் புதுமை பெண்ணாக வாழ்வேன். அதுபோல் தாங்கள் இருட்டில் இருக்கும் என்னை வெளிச்சத்திற்கு கொண்டு வருவீர்கள் என்று நம்புகிறேன். அத்தோடு முரசு படிப்பவர்கள் தான் அநேகம். என் கதைகள் மலையக மக்களின் நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக் கொண்டது.

ஐயா தற்போது பல கதைகள் என் கைவசம் உள்ளன. நீங்கள் சம்மதித்தால் இந்த வருடத்திலிருந்து என் கதைகளை முரசுக்கு அனுப்பிவைக்கிறேன்.

அத்தோடு நான் எழுதிய முதல் சிறுகதை மலையக சிறுகதை போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றுள்ளது.

புஸ்பராணி ராஜு, கந்தப்பளை.

உங்கள் ஆக்கங்களை முரசு எதிர்பார்க்கிறது. முதலில் அனுமதி பெற்றுத்தான் ஆக்கங்களை அனுப்ப வேண்டும் என்ப தில்லை. ஆக்கங்கள் தரமாக இருந்தால் பிரசுரிக்கப் படும்.

-ஆசிரியர்-

என் உயிரினும் மேலான முரசே!

உன் ஆணிவேர் அறுந்து விட்டதாக கொக்கரிப்பவர்களுக்கு அறுந்தது ஆணிவேரெனினும், தாங்கி நிற்பது விழுதுகள்தான் என்பதை உன் எழுச்சியின் மூலம் புரியவைத்துள்ளாய் நன்றி.

தமிழர்களுக்காக குரல் கொடுத்த அந்த மாமனிதன் அற்புதன் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அற்புதன் ஒரு புலியல்ல, யதார்த்தத்தைப் புரிந்து கொண்ட சிந்தனைவாதி. அவனை அழிப்பதன் மூலம் முரசையோ, அல்லது தமிழர்களின் உணர்வலைகளையோ அழித்துவிடலாமென எண்ணுபவர்களுக்கு வரலாறு தகுந்த பாடம் புகட்டும்.

எம்மைப் பொறுத்தவரை இழப்புக்கள் எமக்குப் புதிதல்ல. எதையும் தாங்கிக்கொள்வோம். கண்ணீர்விடப் போவதில்லை. மாறாக உரம் பெறுவோம். முரசை தாங்கி நிற்போம். அவளின் கருத்துக்களை உலகறியவைப்போம்.

ம.த. செங்குட்டுவன், சவுதி அரேபியா.

அன்பின் முரசே,

பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருத்தி. நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் என்னைக் கவர்ந்துள்ளன. ஆனாலும் இந்த சிறு வேண்டுகோளை கேட்கவும்,

வட பகுதியில் இருந்து எத்தனையோ இதயங்கள் அன்பு உறவினர்களை இழந்து எங்கு இருக்கின்றார்களோ என்று தெரியாமல் தவித்துக்கொணடு இருக்கின்றார்கள். அதனால் உங்களின் முரசில் அதற்கான ஒரு பகுதியை கொடுக்கலாம் தானே?

இந்த பத்திரிகை வெளிநாடு முழுவதும் போவதால், உங்களின் வாசகர்களுக்காக இந்த உதவியை செய்யலாம் தானே? என்னைப்போல் எத்தனையோ வாசகர்கள் தம் உறவுகளை தேட முடியாமல் வேதனையுடன் இருக்கின்றார்கள். இழந்த உறவுகளை சேர்க்க முரசு உதவும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன். இதை பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவும். முரசு மூலம் எங்களுக்கு இந்த உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் விடை பெறுகிறேன்.

திருமதி பி. அருள்தாஸ், பலாங்கொடை.

தங்கள் வேண்டுகோளை ஏற்கிறோம். இதற்கான அறிவித்தலை விரைவில் வெளியிடுகிறோம்.

-ஆசிரியர்-

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

# அமைதிப்பேச்சுக்கு அந்நியத் தலையீடு!

# அமைச்சர்களிடம் நிலவும் கருத்துமாறுபாடு!

**பிறநாட்டு தலையீட்டுடன் இந்நாட்டில் அமைதிக்கான பேச்சுவார்த்தையை நடத்துவதில் அமைச்சரவையிலேயே மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதாக அரசியல் நோக்கர்கள் அவதானித்துள்ளனர். இதேவேளை பௌத்த குருமாரும் கிறிஸ்தவ பாதிரிமாரும் இணைந்து அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் பேச்சு வார்த்தைகளுக்கு இணங்க வைக்கும் இணைப்பாளர்களாக செயற்படலாம் என்று புலிகளின் தலைவர் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.**

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டு அமைதியை நிலை நாட்டுவதற்கு பிற நாட்டினுடைய தலையீடு அவசியம் என்பதை அரசியல் சாணக்கியர்கள் தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றனர். இந்த நாட்டிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளும், மூன்றாவது நாட்டினுடைய மத்தியஸ்தம் இல்லாமல் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியாதென அறிவுறுத்தி வருகின்றன.

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்த வரை, உள்நாட்டுப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு அந்நியநாடு எதுவும் தலையிட வேண்டியதில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்து வருகிறது.

புதிய அரசியல் யாப்பை உருவாக்கிய வரான நீதித்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பிற நாடு ஒன்றினுடைய அனுசரணையுடன் அரசாங்கம் புலிகளுடனான பேச்சு வார்த்தை நடத்தலாம் என்ற கருத்தை ஆதரித்து வருவதாக அவரோடு நெருங்கிய தொடர்புடைய பலர் கூறுகின்றனர்.

இதேவேளை வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், உள்நாட்டு பிரச்சனையில் எந்த வெளிநாடும் தலையிட அவசியமில்லை என்ற கருத்தை பல காலமாக வலியுறுத்தி வருகிறார்.

நோர்வே நாட்டின் வெளிநாட்டமைச்சர் முன்னர் இலங்கை வருவதாக இருந்து, பின்னர் தனது வருகையை ஒத்தி வைத்தார். இவ்வாறு தனது பயணத்தை அவர் பின் தள்ளிப் போட்டமைக்கு, வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அப்போது நாட்டில் இல்லாமையே காரணம் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. நோர்வே வெளிநாட்டமைச்சர் திரு. நெற் வெல்லபெக் இலங்கைக்கு இலங்கை வெளிநாட்டமைச்சர், லக்ஷ்மன் கதிர்காமரின் அழைப்பின் பேரிலேயே வருவதாக பகிரங்கமாக அறிவித்து இருந்தார்.

அமைச்சர்கள் மத்தியில் அமைதி பேச்சு வார்த்தை தொடர்பாக அபிப்பிராய பேதங்கள் இருக்கும்போது நோர்வே போன்ற ஒரு நடுநிலை நாட்டின் அமைச்சர் எடுக்கும் முயற்சிகளுக்கு அமைச்சரவையின் பூரண ஒத்துழைப்பு கிடைக்குமா? என்ற சந்தேகத்தை அரசியல் நோக்கர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

இது இவ்வாறிருக்க, வணக்கத்துக்குரிய கம்புறுகமுவ வஜிர தேரர் அண்மையில் வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான தமிழ்ச் செல்வனை கண்டு வந்ததாக செய்தி ஒன்று கூறுகிறது.

அமைதிப் பேச்சுக்கான மத்தியஸ்தத்தை பௌத்த மத குருமாரும், ஏனைய மத குருமார்களும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், தான் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை என்று புலிகளின் தலைவர் பிரபாகரனே கருதுவதாகவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் தலைவர்களுக்கு பெண்கள் அமைப்புக்களின் வேண்டுகோள்!

இனப் பிரச்சனைக்கு ஒரு பொதுவான அரசியல் தீர்வு காண்பதற்கு இணைந்து செயற்படுமாறு அரசியல் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் மகஜர்களை இலங்கையிலுள்ள பெண்கள் அமைப்புக்கள் அனுப்பி வைத்துள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "இனப்பிரச்சனை காரணமாக தொடர்ந்து நடைபெறும் வன்செயல்களும், போரும் எமது மக்களுக்கும், நாட்டிற்கும் சொல்லொண்ணாத் துன்பங்களையும் பொருளாதார நஷ்டங்களையும் ஏற்படுத்தியுள்ளன. இக் கொடூரத்தினால் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டிருப்போர் பெண்களும் சிறுவர்களும்தான்.

எனவே போரை கூடிய விரைவில் நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வரல் வேண்டும்.

இனப்பிரச்சனைக்கு பொதுவான ஒரு அரசியல் தீர்வைக் காணுமாறு ஜனாதிபதிக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம். அரசாங்கமும் எதிர்க் கட்சியும் இணைந்து இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் உடன்பாடு காணவேண்டும். பேச்சு வார்த்தைகளுக்கான உத்தியோக பூர்வ குழுவில் யூ.என்.பி.யிலிருந்தும் பிரதிநிதிகளை உள்ளடக்குமாறு நாங்கள் ஜனாதிபதியை வேண்டிக் கொள்கிறோம். இனப் பிரச்சனைத் தீர்வு விடயத்தில் அரசும், எதிர்க் கட்சியும் உடன்பாடொன்றை எட்டும் பட்சத்தில் தான் ஆட்சியிலிருக்கும் எந்தவொரு அரசாங்கமானாலும் சரி இனப் பிரச்சனைத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவார்கள் என்பதில் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்வார்கள்.

இணைந்த செயற்பாட்டின் மூலமே எமது நாட்டையும் அதன் மக்களையும் அழிக்கின்ற இந்த முக்கியமான பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும்.

விடுதலைப் புலிகள் உட்பட எல்லா அரசியல் தலைவர்களையும் இந்நாட்டு தமிழ், சிங்கள,முஸ்லிம்,பறங்கியர் ஆகிய இன மக்களின் அதிக நன்மை கருதி இராஜதந்திர முறையில் செயற்படுமாறு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்!" என்று கூறப்பட்டுள்ளது.

ஐக்கிய இலங்கை சமசமாஜ பெண்கள் சங்கம், இலங்கைப் பெண்கள் முன்னணி, இலங்கை மஹஜனக் கட்சிப் பெண்கள் முன்னணி, தேச முன்னணிப் பெண்கள் அமைப்பு என்பன, அரசியல் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்த பெண்கள் அமைப்புக்களில் முக்கியமானவை ஆகும்.

## வெளியாரைத் தங்கவைக்க வேண்டாம்!

## மட்டக்களப்பில் படையினர் எச்சரிக்கை!

(நமது நிருபர்)

வழக்கமாக வீட்டில் தங்காத உறவினர்கள் எவரையும் தமது வீடுகளில் தங்குவதற்கு அனுமதிக்கவேண்டாமென்று படையினர் மட்டக்களப்பில் தமது படை முகாமை அண்டிய பகுதிகளில் வாழும் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புதியவர்களும், அறிமுகமில்லாதவர்களும் உங்கள் கிராமங்களில் நடமாடினால் அது பற்றி உடனடியாகப் பாதுகாப்புப் படையினருக்கு அறியத் தருமாறு படையினர் கேட்டுள்ளனர். அத்தோடு படை முகாம்களை அண்டிய பகுதிகளில் வசிக்கும் 18 வயதிற்கு மேற்பட்டோரின் பெயர்ப் பட்டியல்களைத் தமக்குத் தருமாறும் படையினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

சில பகுதிகளில் சுற்றிவளைப்பு நடத்திச் சிலரை அழைத்துச் சென்று தமது இராணுவ முகாம் சுற்றாடலைத் துப்பரவு செய்யும் கட்டாயப் பணியில் படையினர் ஈடுபடுத்தியுள்ளனர்.

தமது முகாம் காவலரண்களைப் பலப்படுத்தும் வேலையிலும் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

## மலையகத் தமிழ் பொலிஸாருக்கு இடமாற்றம்?

(நமது நிருபர்)

மலையகத்தில் கடமையாற்றும் தமிழ் பேசும் பொலிஸாருக்கு வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே மலையகப் பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் மீதான கெடுபிடிகள் தீவிரமாக்கப்பட்டிருக்கின்றன. சோதனை நடவடிக்கைகளும், கைதுகளும் அதிகரித்துள்ளன.

இந்நிலையிலேயே மலையகத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் பொலிஸார்மீது பாதுகாப்புத் துறை மேலிடம் சந்தேகம் கொண்டுள்ளதாலேயே திடீர் இடமாற்ற உத்தரவு பிறந்ததாகப் பேச்சு அடிபடுகிறது.

இந்த திடீர் இடமாற்றம் குறித்து பல தரப்பிலிருந்தும் ஆட்சேபனை எழுந்ததால் திடீர் இடமாற்ற உத்தரவு குறித்து மீள் பரிசீலனை செய்யப்படுவதாக இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீப சில காலங்களாக மலையகப் பகுதிகளில் புலிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளது. அதனாலேயே அங்கு கெடுபிடிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. அதன் பின்னணியிலேயே மலையகத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் பொலிஸாரின் இடமாற்ற உத்தரவும் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## அரசும் புலிகளும் உடனடியாகப் பேச வேண்டும்!

## மட்டக்களப்பில் தமிழ்க் கட்சிகள் பேரணி!

(நமது நிருபர்)

தமிழ் அரசியற் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து மக்களின் ஆதரவுடன் சமாதானப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளன.

பெருந் தொகையான பொது மக்கள் இந்தப் பேரணியில் பல்வேறு கோரிக்கைகளைத் தாங்கிய வண்ணம் கலந்து கொண்டார்கள். சமயப் பெரியார்கள் உட்பட மேற்சொன்ன தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள், அரச சார்பற்ற உதவி நிறுவனங்கள், பெண்கள் அமைப்புக்கள், வர்த்தகர்கள், ஓட்டோ சாரதிகள் சங்கம், மற்றும் வேறுபல தொழிற் துறைகளைச் சேர்ந்தவர்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு பின்வரும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டது.

* உடனடியாக நோர்வே அரசின் உதவியோடு அரசும் புலிகளும் பேச்சு வார்த்தைகளைத் துவக்க வேண்டும்.
* சமாதான முயற்சிகளுக்காகப் பாடுபட்டு வரும் நோர்வேயின் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் பேரினவாத சக்திகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
* கடந்த காலங்களில் ஆளும் கட்சியால் முன்வைக்கப்பட்ட தீர்வுகளை எதிர்க் கட்சிகள் சீர்குலைத்தது போலல்லாது அரசும் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க.வும் இணைந்து ஒருமித்த தீர்வைக் காண வேண்டும்.
* மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல் படுத்த உத்தேசித்துள்ள 'பாஸ்' முறையைக் கைவிடவேண்டும்.
* தமிழ் பேசும் மக்களிடையே நல்லெண்ணங் காட்டும் நடவடிக்கையாக நாடு பூராவிலும் தமிழ் பேசும் மக்கள்மீது மேற்கொள்ளப்படும் சகல வித மனித உரிமை மீறல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

"நாட்டின் தமிழ் பேசும் மக்கள் சார்பாக மேற்படி கோரிக்கைகளை முன்வைக்கின்றோம் எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு உடனடியாக அமைதிச் சூழ் நிலைக்கு வழி வகுக்குமாறு கோருகிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் EPDP, EPRLF, PLOTE, மற்றும் TELO சார்பில் அந்தந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

## மீன்பிடித்தடை தளர்த்தப்பட்டது

**யாழ்.** குடாநாட்டில் மாதகல் கடலில் திடீரென்று படையினர் மீன்பிடிப்பதற்குத் தடைவிதித்தனர். இதனால் ஏற்கனவே கடலில் வீசிப்பட்டிருந்த வலைகளையும் தொழிலாளர்களால் மீட்க முடியாமற் போனது. தங்கள் தொழிலைச் சீராக நடத்தி வருமானம் பெறமுடியாத நிலை ஏற்பட்டதுடன் பொருட்களையும் இழந்து இத் தொழிலாளர்கள் சொல்லொணாத் துயரடைந்தனர்.

கடந்த 15ம் திகதி ஈ.ம.ஜ.கட்சி செயலாளர் நாயகம் திரு.டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், மற்றும் சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளையும் கண்டு நிலமையை விளக்கினார். மீன்பிடிப்பதற்கான தடையை தளர்த்துவதென வாக்களிக்கப்பட்டபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டது. இறுதியாக 28ம் திகதி திங்கட்கிழமை கடலில் விடப்பட்ட வலைகளையும் பொருட்களையும் எடுத்துவர மீன்பிடித் தொழிலாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். மார்ச் முதலாம் திகதி முதல் இவர்கள் கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில் போதைப்பொருள் அதிகரிப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது போதைப்பொருள் பாவிப்போரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

மன்னார் நகரப்பகுதியை விட கிராமப் புறங்களிலேயே போதை வஸ்து வியாபாரம் களைகட்டிவருகிறது.

ஹெரோயின், கஞ்சா, அபின் போன்ற பொருட்கள் இப்பகுதிகளில் தாராளமாக புழக்கத்தில் உள்ளதால் மாலை நேரங்களில் போதைப் பிரியர்களின் அட்டகாசம் அதிகரிக்கிறது.

மாணவர்களும் இப்பழக்கத்திற்கு அடிமையாகி வருவதால் இது தொடர்பாக பாடசாலைகளில் கூடுதல் அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்குமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போதைப் பொருளைப்பாவிப்போரால் இவை இந்தியாவிலிருந்து கடற்பரப்பினூடாக மன்னாருக்கு கொண்டு வரப்படுவதாக நம்பப்படுகிறது.

போதைப் பொருள் பாவனை, விற்பனை என்பனவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மன்னார் மது வரித் திணைக்களம் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றி வருகின்ற போதிலும், இவ்வியாபாரம் சர்வ சாதாரணமாக நடைபெறுகிறது.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை மிகவும் தீவிரமாக கண்காணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## சல்லிக் கிராமத்தில் கடற்படையினர் நடத்திய வெறியாட்டம்

கடந்த வியாழக்கிழமை இரவு திருமலை சல்லிக் கிராமத்தில் கடற்படையினர் நடத்திய வெறியாட்டத்தில் பத்து வீடுகள் எரிக்கப்பட்டன. இரண்டு கடைகளும் ஒரு வேனும் தீக்கிரையாகின. வெறி கொண்ட நிலையில் இரவிரவாக ஆடிய ஆட்டத்தால் மக்கள் பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை ஒரே இரவில் இழந்துவிட்டு நடுத் தெருவுக்கு வந்துள்ளனர்.

ஜனவரி 24ம் திகதி இரவு 9.30 அளவில் கவிதா ஸ்டோர்ஸ் சந்தியில் விடுதலைப் புலிகளும் கடற்படையினரும் எதிரெதிரே சந்தித்துக் கொண்டதால், வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இதில் சப் லெப்டினன்ட் ஆர்.எ.வசந்த புஷ்பகுமார (26 வயது) உயிரிழந்தார். கே.கே.ஏ.என்.பெரேரா என்பவரும் டி.எஸ்.கே. குணதிலக என்பவரும் காயமடைந்தனர்.

இதனால் வெகுண்டெழுந்த கடற்படையினர் மயில்வாகனம் நவரத்தினம் என்பவரது கடை, வீடு, ராசதுரை செகராசா, சரவணமுத்து பரம்சோதி, திருமதி மூர்த்தி சரோஜா, திருமதி பிரபாகரன் உதயபவளம், முருகேசு ரவீந்திரன், மார்க்கண்டு வண்ணக்கிளி, செல்வவிநாயகம் சண்முகநாதன், ரட்ணம் ஜீவநாதன் ஆகியோரின் வீடுகள், சிவபாதசுந்தரம் சுபாசன் என்பவரது வீடு, வேன் என்பவற்றை எரியூட்டி நிர்மூலமாக்கியுள்ளனர்.

இதனையடுத்து சாம்பல்தீவு, சல்லி ஆகிய இரு கிராமங்களையும் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்களும், பாடசாலை மாணவர்களும் ஒன்று திரண்டு, உடனடியாக இது சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரி திருக்கோணமலை நிலாவெளி வீதியிலுள்ள பிள்ளை குளப்பாலம் என்ற இடத்தில் சனிக்கிழமை காலை தெருவில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினர்.

பகல் 11 மணியளவில் ஸ்தலத்துக்கு வந்த பிரதேசச் செயலரும் பாதுகாப்பு அதிகாரிகளும் அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூறிக் கலைந்து செல்ல வைத்ததுடன், பிற்பகலில் உடனடியாகக் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தி அடாத்தாக நடந்த கடற்படையினர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் முடிவை மேற்கொண்டதுடன், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது பாதுகாக்கப்படும் எனவும் மக்களின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளனர்.

படையினரின் வெறியாட்டத்தினால் சேதமாக்கப்பட்ட சொத்து மற்றும் பொருட்களின் விவரம்:

வீடுகள்-10, சில்லறைக் கடைகள்-02, தையற்கடை01,போக்குவரத்து வாகனம்-01, மோட்டார் சைக்கிள்கள் 02,சைக்கிள்கள்-16.

இவை தவிர பள்ளிப் பிள்ளைகளின் பாடப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள் யாவும் எரிக்கப்பட்டுள்ளன. தேசிய அடையாள அட்டைகள் பறிக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ.திரு இரா.சம்பந்தன், இது தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் புகாரிட்டுள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி திருமலைப் பொறுப்பாளர் எடுத்த நடவடிக்கையினால், அடையாள அட்டைகளைப் பறிகொடுத்தவர்களும், பொருட்களை இழந்தவர்களும் பதிவு செய்வதற்காக உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் தனிக் கருமபீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## மன்னார் ஆசிரியர்களுக்கு பெருநாள் முற்பணம் தரப்படவில்லை

(மன்னார் நிருபர்)

மன்னார் வலய கல்வித் திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு இவ்வருட பெருநாள் முற்பணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் கடந்த டிசம்பர் ஜனவரி மாதங்களில் இம் முற்பணம் வழங்கப்பட்டு விட்டன. ஆனால் மன்னார் வலயத்திற்கு மட்டும் முற்பணம் வழங்க மாகாண சபையிடம் நிதிப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதா என ஆசிரியர்கள் கேட்கின்றனர்.

மன்னார் வலய கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பகுதி பொறுப்பற்ற முறையில் இயங்கி வருவதாகவே ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த டிசம்பர் 21 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் கடமைக்குச் சென்ற ஆசிரியர்களுக்கு கடந்த வாரம் தான் கொடுப்பனவு வழங்கப்பட்டது. அந்தளவு கணக்குப் பகுதி 'சுறுசுறுப்புடன்' இயங்கி வருகிறது.

மாதாந்த சம்பளமும் மாதத்தின் கடைசிப்பகுதியில்தான் வழமையாகவே வழங்கப்படுகிறது. ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்பட்டு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தரம் உயர்வு என்பவற்றுக்கான கொடுப்பனவுகள் நிலுவைகள் வழங்குவதில் நீண்ட கால தாமதம் ஏற்படுவதால் கணக்குப் பகுதியில் கோவை மலை போல் குவிந்து காணப்படுகின்றன.

அதிகளவு ஆளணி கணனி வளம் கொண்ட கணக்குப் பகுதி இனியாவது சுறுசுறுப்புடன் செயற்படுமா என ஆசிரியர்கள் ஆதங்கத்துடன் கேட்கின்றனர்.

## வன்னிப் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் எங்கே?

## ஆசிரியர் சங்கம் கேள்வி

## செயற்குழுவில் 9 அம்ச கோரிக்கை நிறைவேற்றம்

(காரைதீவு நிருபர்)

"நாட்டில் வன்னி உட்பட இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச பாடசாலைகளுக்கு கற்பித்தலுக்கான உபகரணங்கள் அனுப்பப்படுவதில்லை. கடந்தாண்டு யுனிசெவ் ஸ்தாபனம் அனுப்பிய கலண்டர்,அலுமாரி போன்ற பல்வேறு பொருட்கள் இன்னும் அங்குப் போய்ச் சேரவில்லை. இந்நிலையில் கல்வியில் சமவாய்ப்பென்பது வெறும் மேடைப்பேச்சே. இதனால் தமிழ் மாணவர்கள் பாதிப்படைந்து வருகின்றனர். உடனடியாக அப்பகுதிகளுக்கு கற்பித்தலுக்கான உபகரணங்கள் பாடநூல்களை அனுப்பி வைக்குமாறு அரசைக் கோருகின்றோம்"

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அதி உயர்பீட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திருமலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் சங்கத்தலைவர் எஸ்.குமரகுருதாஸன் தலைமையில் இச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கொழும்பு மட்டக்களப்பு, திருமலை மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இங்கு 9 அம்சக் கோரிக்கைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சங்க பொதுச் செயலாளர் த.மகாசிவம் இக்கோரிக்கைகளடங்கிய மகஜரை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கவுள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து துணைத்தலைவர் த.பஞ்சலிங்கம், நிதிச் செயலாளர் ஜே.யேசுதாசன் மாவட்ட தலைவர் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

## சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவும் முப்பத்தெட்டு



வருட இனிய நிறை விழாவும்

வவுனியா சேமமடுக்குளம் இரண்டாம் படிவத்தை நிரந்தர வதிவிடமாகவும் தற்போது கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு பூலோகசிங்கம் வள்ளியம்மை (தம்பையா) தம்பதிகள். தங்களின் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவையும் முப்பதெட்டு வருட இல்லற இனிய நிறை விழாவையும் 15.02.2000 அன்று காலை கொழும்பு ஜிந்துப்பிட்டி வினாயகர் சிவன், அம்பாள், வள்ளி, தெய்வானை, சமேத ஜெயந்தி நகர் சிவசுப்பிரமணிய ஆலயத்தில் விசேட அபிசேக பூசையும் நவக்கிரக பெருங்கிருதி ஓமமும், திருமாங்கலியாணமும் நவாலியூர் பிரதிஷ்ட சிரோன்மணி பிரம்ம ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களினால் மிகவும் சிறப்பாக நடாத்திவைக்கப்பட்டது. விழாத் தம்பதிகளை கோவில் அரக்காவலர் உயர்திரு வி.டி.வி. தெய்வநாயகம் பிள்ளை அவர்கள் நல்லாசி வழங்கி கௌரவித்தார்.

பிரான்சில் வசிக்கும் பத்மநேசன் யுகந்தி தம்பதிகள், பத்மரூபன் ரேணுகா தம்பதிகள், ஜெர்மனியில் வசிக்கும் திருநாவுக்கரசு பத்மாவதி தம்பதிகள், கனடாவில் வசிக்கும் பிரதீபன் பத்மசுபாஜினி தம்பதிகள், ரஷ்யாவில் வசிக்கும் அருந்தவராசாவும், மற்றும் பத்மசீலன் ஜெயராணி தம்பதிகள், பத்மதாசன், பேரப்பிள்ளைகளான திரொபதா, திசானா, தயாளினி, நேயுதா தர்ஷ்வினி, சஞ்சயன், ஆகியோரும் வைக்கோசில் கடமைபுரியும் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ குலதெய்வம் வைரவக்கடவுளின் துணையுடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல் : பூ.பத்மதாசன்
வைற்கோஸ் இன்ரநஸனல்
U.G. 50, பீப்பில்ஸ் பார்க், கொழும்பு -11.




கலை அலங்கார வகுப்புக்கள்

* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி

Facial Bleaching முடிவெட்டுதல் போன்றவைகளையும் செய்து கொள்ள முடியும்.
வகுப்புக்கள் வார, வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

ஆரம்பம்:15-03-2000
சான்றிதழ்கள் வழங்கப்படும்

FASNAZ BEAUTY SALON

142, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை, கொழும்பு-06. தொலைபேசி: 589457

## நவசித்தர் மருத்துவம்



வாதம், நீரழிவு, பீனிசம், தீராததலைவலி, வெள்ளை படுதல், கிரந்திநோய், சுவாதம், முடியுதிர்தல் தாது நஷ்டம் இன்னும் அனேக நோய்களுக்கு வைத்தியம் செய்வதோடு, கிரகதோஷங்கள், ஆவிகளின் தொல்லை, எதிரிதொல்லை, விரும்பியவரை வசப்படுத்த, வேண்டாதவரை விலக்க, கல்வி, தொழில் முன்னேற்றமடைய, வீடு வளவு காவல் செய்ய, குடும்பப்பிரச்சனை தீர சக்திவாய்ந்த மூலிகைகளின் மூலம் பராசக்தியின் அருளால் மாந்திரீக மருத்துவமும் செய்யப்படும். மட்டக்களப்பு, சித்த, ஆயுள்வேத பரம்பரை மருத்துவர்.

T.M.PILLAI, "YOHANANTHA VAITHIYASALAI"
118/B, MAIN STREET, PANDIRUPPU - 01, KALMUNAI. SRI LANKA.

புத்தாயிரமாம் ஆண்டில்

**Bright Book Centre (Pvt) Ltd**

கல்விப் பணிகளில் இணைந்து உங்கள் தகைமைகளையும் வேலையையும்பெற்றுக்கொள்ள வாழ்த்துகிறது

Bright - இன் தபால் மூலக் கல்வித்திட்டம்

* 90 Days Spoken English
* Spoken Sinhala
* Spoken Tamil
* Business English
* Method of Computerised Book Keeping & Accountancy (MCBA)
* Nursery Teacher Training Coures (NTTC)

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, First Floor, C.C.S.M. Complex
Colombo - 11. T.P. 434770


## 1வது பிறந்த நாள் வாழ்த்து



### தர்மிதா தர்மராஜ் (05.03.2000)

Canada Scarborough Chichester Place ல் வசிக்கும் தர்மராஜ்-ஜெயகலா (தாஸ்-பபி) தம்பதியினரின் செல்வப்புதல்வி தர்மிதா தனது முதலாவது பிறந்த நாளை 05.03.2000 அன்று தமதில்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா (கனடா), அம்மம்மா (கொழும்பு) அப்பம்மா, மாமிமார், மாமா, ரஜித்தா மச்சாள் (கொழும்பு) சசிமாமா, அன்ரி மச்சாள்மார், எம்மா, சாரா, ஷோபியா (நோர்வே), பெரியப்பா, பெரியம்மா, லக்ஷன் அண்ணா, அஸ்வினா அக்கா (கனடா), குட்டிமாமா, அன்ரி (கனடா) தர்ஷி சித்தா, கிஷா சித்தா (கொழும்பு), சின்னம்மப்பா, சின்னம்மம்மா, ராஜ்மாமா, திவாமாமா (ஏழாலை) மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஆசைக்குட்டி தர்மியை பிள்ளையார் அருளால் பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : திருமதி ஜே.சத்தியமூர்த்தி
தர்ஷி சித்தா, கிஷா சித்தா,
No.21/2, HARMERS AVENUE,
WELLAWATTE, COLOMBO 06, SRI LANKA.


## விற்பனைக்கு

எங்களிடம் உள்நாட்டில் உற்பத்தியாகும் பின்வரும் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மிளகு, கராம்பு, ஏலம், கோப்பி, கறுவா,

மேலதிக விபரங்கட்கு :-
M.H.L. MOHAMED OR ALIKHAN.
DIAMOND FOODS.
166, MALIBAN STREET, COLOMBO - 11.
TELE : 333001, 336046, 321410, 321400.

## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

கொழும்பில் மார்ச் 20-27 வரை சந்திக்கலாம்

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338163-336165, 338166, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

கல்முனையில் மார்ச் 05, 06ம் திகதிகளில் சந்திக்கலாம்

T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329

வவுனியாவில் மார்ச் 12,13ம் திகதிகளில் சந்திக்கலாம்

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn, 2ம் குறுக்குத் தெரு, ஞானவைரவர் கோவில் ஒழுங்கை, T.P.024-22074, 21405,21406

கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.


## 3ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

மலர்வு 07-04-1984



உதிர்வு 21-01-2000

### அமரர் தாட்சாயினி மன்மதராசா

மன்மதராசா ஜெயயோகராணி தம்பதிகளின் செல்வ மகள் செல்வி.தாட்சாயினி 21.01.2000. அன்று சுவிற்ஸர்லாந்து MONTREUX வில் காலமானார். உன் மறைவால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் உன் பெற்றோர். உன் தங்கை மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் உனக்காகச் சிந்தும் இரத்தக் கண்ணீர்.

இவரின் ஈமக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் T.P. மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும் எங்களின் நன்றி.

தகவல் : பெற்றோர், சித்தப்பா (சுவிஸ்)
T.P NO. 021-9611560
T.MANMATHARAJAH
CORSAZ - 16
1820 - MONTREUX.


## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

SHAKTHY SARAVANA,
48/12, SRI WIMALASARA ROAD, KALUBOWILA, DEHIWALA.
T.P.: 723646. நேரில்-காலை 8மணி முதல் மாலை 2 மணிவரை

வியாழன் விடுமுறை



## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்

நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTD ஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆட்களுக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரிகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571, 431137, 470615, 342463, 342464, 344831, 344832 இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.


கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
Dr. P. K. Samy (J.D.G.A.N) JP

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk
இன்னும் எமது சேவைகளை அறிய எமது இன்டர்நெட் வெப் தளத்தை நாடவும்
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami
வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.


## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

03.03.2000 திதி

மலர்வு 05-07-1938



உதிர்வு 13-02-1999

### அம்பலப்பிள்ளை நாகலிங்கம் (சிவாஜி)

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்குப் பகுதியில் உள்ள மாவை கொல்லல்கலட்டியில் பிறந்து வளமான வாழ்க்கை அமைத்து, பின் திருகோணமலையில் அன்பின் இருப்பிடமாய் குடும்பத்தின் குத்துவிளக்காய் திகழ்ந்து, அன்பு, அறிவு, ஞானம் என்பவற்றை ஊட்டி வளர்த்து மங்காப்புகழுடன் மறைந்த எம் தெய்வமே! நீங்கள் எங்களைவிட்டு பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்பும் பாசமும் உள்ள மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல் : மகன்
No.607, Galle Road, Colombo-06.

# எதிர்க்கட்சியின் குத்துக்கரணம்

# வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்

இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அரசியல் முயற்சியாக அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் தொடர்பான ஆராய்வுகள், அரசாங்கம் வகுத்த தொடர் வழிப்படி நிகழ்ந்தேறுகையில் திடீரென ஏற்பட்ட தடங்கல் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வாங்கலாகும்.

இத் தீர்வுத் திட்டத்தை, பொதுஜன ஐக்கிய முன்னணிக்குச் சார்பான அரசியல் கட்சிகளுடன் பேசி, பின் பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகளுடன் பேசி, அடுத்து ஐ.தே.கவுடன் பேசி, இறுதியில் புலிகளுடன் பேசுவதாக அரசாங்கம் இத் தொடர்வழியை அமைத்திருந்தது.

இவ் வழி ஓர் அக்கறைமிக்க முயற்சியாகப் பார்க்கப்பட்டாலும், பயனளிக்குமா என்ற சந்தேகத்தை நாம் ஏற்கெனவே ஆராய்ந்திருந்தோம்.

அதாவது இதில் இறுதியாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதாக அமைத்துள்ள திட்டம் அறிவுபூர்வமானதாக அமைந்துள்ளதா என்ற கேள்வியையே இங்கு நாம் கேட்டுப் பார்க்க வேண்டியுள்ளது.

முதலில் புலிகளுடன் பேசிவிட்டு அவர்களைத் திருப்தி செய்யக்கூடிய தீர்வையிட்டு தமக்குள்ளும், மற்றைய கட்சிகளுடனும் பேசி இணக்கம் காணுவதே உண்மையில் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய அணுகுமுறை விவாதமாகவே பேச்சுவார்த்தைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இது அடிப்படையில் புலிகள் ஒரு மாற்றுத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க மாட்டார்களென்ற எடுகோலுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இறுதியாகப் புலிகளுடன் பேசும் சந்தர்ப்பத்தில் புலிகள் ஒரு மாற்றுத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்துவிட்டால் நிலைமை என்னாவது?

அப்படியானால் அரசாங்கத்தின் முழு ஏற்பாடுமே மாறிவிடுமே?

தீர்வு குறித்த அமைப்புச் சட்டமாகவே மாறி கொள்கை, கோட்பாடுகள், மற்றும்அடிப்படைகள் யாவும் முதலிலிருந்து ஆராயப்பட வேண்டியவையாகிவிடுமே!

'இல்லையில்லை', அந்தத் தீர்வுத் திட்டத்தை நாம் ஆராய முடியாது என அரசாங்கம் எப்படி மறுக்க முடியும்?

அப்படியானால், புலிகளின் தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் விரித்துவைத்து ஆராய்ந்துவிட்டு பின்னர் ஏனைய கட்சிகளிடம் மீண்டும் எடுத்துச் செல்ல நேரிடும்.

அப்போது அவை, "முன்னர் ஒன்றைக் கொண்டு வந்தீர்கள், இப்போது வேறு ஒன்றைக் கொண்டு வருகிறீர்கள்!" என்று குறை கூறினால் அதன் தவறு அரசாங்கத்தையே சாரும்.

எனவே, இந்த நான்குகட்ட பேச்சு இணங்காத பட்சத்தில் அவர்கள்மீது பழியைப் போட வாய்ப்பாக அமைகிறது.

அதாவது, இந்த நான்குகட்ட ஏற்பாட்டில் தமிழ்க் கட்சிகளுடன் பேசிய பின்னும் விடுதலைப் புலிகளுடன் பேச முன்னரும் ஐ.தே.க. வுடன் பேச ஏற்பாடாகியுள்ளது.

இவ்வாறு தமிழ்க் கட்சிகளோடு பேசி இணங்கப் பெற்ற விடயங்களை ஐ.தே.க. மறுத்தால், தீர்வு ஏற்படத் தடையாக உள்ளவர்களாக ஐ.தே.க.மீது தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து குற்றம்சாட்டக்கூடியதாக இருக்கும்.

அதேவேளை விடுதலைப் புலிகளும், ஐ.தே.க. மறுக்கும் விடயங்களைச் சுட்டிக் காட்டிப் பேசுவர். அதனால் ஐ.தே.க. ஒரு தடைக்கல்லாக வெளியுலகுக்கு வெளிக் காட்டப்படும்.

இதேபோல் புலிகள் இறுதியில் இத் தீர்வு முயற்சியில் இணங்க மறுத்தால் அரசாங்கமும் ஏனையோர் யாவரும் பொதுவாக இணங்கிக் கொண்ட விடயங்களைப் புலிகளே மறுக்கிறார்களெனக் கூறி அவர்கள்மீது பழியைப் போட வாய்ப்பாக இது அமையும்.

எனவே புலிகளை நிராகரித்த ஒரு தீர்வுக்கு அரசாங்கம் சென்றாலும் அதற்கு ஒருவித அங்கீகாரத்தை ஈட்டிக்கொள்ளக் கூடிய வழிமுறையாக இது அமைகிறது.

மாறாக, முதற் கட்டத்தில் புலிகளுடன்

இப்படியான வகையில் நகர்ந்து கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை ஐக்கிய தேசியக் கட்சியின் இடத்துக்கு வந்துள்ள இத் தருணத்தில்தான் அது இன்னொரு குழப்பத்தைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அதாவது ஐ.தே.க. பேச்சுவார்த்தைகளுக்காக குறிப்பிட்டபடி ஜனாதிபதியைச் சந்திக்க மறுத்து விட்டது.

அது, அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு ஆலோசனைகளில் பெருமளவு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றைப் படிக்க தமக்கு கால அவகாசம் தேவையென்றும் காரணம் கூறியதுடன்,தானும் தனது ஆலோசனை முன்வைக்கப்போவதாகவும் தெரிவித்தது.

இதன் மூலம் ஐ.தே.க அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ள தெளிவான செய்தி என்னவென்றால் "உங்கள் சொற்படி நடக்கவேண்டிய பள்ளிப் பிள்ளைகளல்ல நாம்" என்பதாகும்.

அரசாங்கம் விதித்த நாளில் ஓடிச் சென்று பேச்சுவார்த்தை மேசையில் அமராது அதை சுலபமாக உதாசீனம் செய்து தான் விரும்பியவாறு பேச்சுக்களில் கலந்துகொள்ளவும், தாம் விரும்பிய விடயதானங்களை முதன்மைப்படுத்தவும் அது ஒரு சாதுரியமான ராஜதந்திர நடவடிக்கையாக இதனை மேற்கொண்டது.

தான் போட்ட ரோட்டில்தான் வண்டி

உடன்பாடு காண முடியாத நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்பதே ஐ.தே.க.வின் குறியாக இருக்கிறது.

எனவே, அரசாங்கம் வகுத்த வழியில் விடயங்களை ஒடவிட்டால் அதில் அரசாங்கம் எப்படியும் பெருமளவு உடன்பாடுகளை ஈட்டி விடலாமென்பதால்தான் வேறொரு 'சில்லையும்' உருட்டிவிட அது முற்பட்டுள்ளது.

அதனை ஒரு அபத்தமான காரியமாகப் புலப்படாத வண்ணம் மிகத் தந்திரோபாயத்துடன் அக்கறை மிகுந்த ஆலோசனைகளாக, தமிழ்த் தரப்பையும் சில விடயங்களில் ஈர்க்கக்கூடிய ஆலோசனைகளாக அது வெளிப்படுத்தியுள்ளது. (ஐ.தே.க.வின் இப் புதிய ஆலோசனைகள் பற்றி அடுத்தவாரம் ஆராய்வோம்)

ஆனால் எவ்வாறோ, இந்த அரசியல் தந்திரங்கள் ஒரு விடயத்தைத்தான் திரும்பவும் உணர்த்துகிறது.

அதாவது இன்னும்கூட இனப் பிரச்சனையின் தார்ப்பரியத்தை உண்மையாக உணர்ந்து கொண்டு அர்த்தபூர்வமான அரசியல் தீர்வைக் காணவேண்டுமென்ற உணர்வு சிங்கள, 'கட்சி அரசியலில்' தோன்றவில்லையென்பதே.

முன்னைய காலத்தில் இந்த ஏட்டிக்குப் போட்டியான இனவாதச் செயற்பாடு அப்பட்டமாகத் தெரிந்தது. ஆனால் இப்போது அது நவீன மயப்படுத்தப்பட்ட பக்குவமான வகையில் நாசூக்காக மேற்கொள்ளப்படுவதே இங்குள்ள வித்தியாசம்.

முன்னர் ஆளும் கட்சி ஏதாவது தீர்வை முன்னவைக்கவோ, உடன்படிக்கைக்குச் செல்லவோ முனைந்தால் எதிர்க்கட்சி அதை

யாய் இருக்குமென்பதே இங்குள்ள தர்க்கம்.

இதற்கு இரண்டு அடிப்படை வாதங்கள் உள்ளன. ஒன்று, இனப்பிரச்சனை சமாதானமான முறையில் தீர்க்கப்பட வேண்டுமானால் அதற்குப் புலிகள் இணங்கவேண்டுமென்பதே ஓர் அடிப்படையான உண்மை. ஏனெனில் இன்று யுத்தம் புரியும் மறுதரப்பினராக உள்ளவர்கள் புலிகளே.

யுத்தம் புரியும் தரப்பினரான புலிகளை விடுத்து ஏனைய எத்தரப்பினரோடு பேசினாலும் யுத்தம் நிற்கப் போவதில்லையென்பது வெளிப்படை.

அதனால் அவர்கள் எத்தகைய தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டு, அவற்றை ஈட்ட முயற்சிப்பதே சரியான அணுகுமுறை.


அதற்கு அவர்களுடன்தான் முதலில் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்.

அப்படியல்லாமல் மற்றையோரோடு பேசி இணக்கம் கண்டவற்றை இறுதியில் புலிகளுடன் பேசுவது என்ற வழிமுறையில் சென்றால், மற்றைய கட்சிகள் இணங்க மறுத்த விடயங்களையிட்டு என்ன செய்வது என்ற நிலை தோன்றும். அவை இணங்க மறுத்த விடயங்களைப் புலிகள் வலியுறுத்தும்போது, அவை இணங்கிய விடயங்களையும் புலிகள் போதாதெனக் கூறும்போது இவ்வளவு கட்சிகளோடும் பேசிய பேச்சுக்கள் அடிபட்டுப் போய்விடுமல்லவா?

இப்போது புலிகள் கோருவதை அரசாங்கம் வழங்க முன்வந்தாலும் ஏனைய கட்சிகள் அவற்றைத் தம்மால் ஏற்றுக் கொள்ளப் படாதவையென நிராகரிக்கலாமல்லவா?

அப்படி அவை நிராகரிப்பின், இந்த நான்கு கட்டப் பேச்சுவார்த்தை ஏற்பாட்டிற்கு அர்த்தமில்லாது போய்விடுமல்லவா? அடுத்த அடிப்படையான வாதம் யாதெனில் இப் பேச்சுவார்த்தைகளுக்கான கைப்பொருள் அரசாங்கம் முன்வைக்கின்ற தீர்வுத் திட்டமாகவே உள்ளது.

இந்தத் தீர்வுத் திட்டத்தின் மீதான




வார்த்தை ஒழுங்கில் அடிப்படையான தவறு இருக்கிறது. இந்த அடிப்படையான தவறைத் தன்வசம் வைத்துக்கொண்டு அது தோல்வியடையாதென அரசாங்கம் நம்பியிருக்க முடியாது.

ஆனால், அரசாங்கம்இப் பேச்சுவார்த்தை ஒழுங்கை இவ்வாறான கட்டங்களில் அமைத்ததற்கும் காரணமில்லாமல் இல்லை.

இவ்வாறு அமைத்ததன் மூலம் அதற்கு ஐ.தே.க.வை ஒரு இக்கட்டான பொறிக்குள் சிக்கவைக்க முடிகிறது. அடுத்ததாக புலிகள்

பேசிவிட்டு பின்னர் ஏனைய கட்சிகளுடன் பேசுவதாக பேச்சுவார்த்தையை ஒழுங்கு படுத்தியிருந்தால் பொறிக்குள் விழுவது அரசாங்கமாகத் தான் இருந்திருக்கும்.

ஏனெனில் முதலில் அரசாங்கம் தயாரித்துள்ள தீர்வுத் திட்டத்தின் வழியில் பேச்சு வார்த்தை நிகழ்வது சாத்தியமற்றுப் போகலாம்.

அடுத்ததாக, புலிகள் முன்வைக்கும் விடயங்களுக்கு அரசாங்கம் முதலில் பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்கு உள்ளாகும். புலிகளால் நிராகரிக்கப்படும் விடயங்களுக்கு அரசாங்கம் மாற்றுத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகும். அத்தோடு இதில் புலிகளுடன் பேசப்பட்ட வற்றுக்கு ஏனைய கட்சிகளின் இணக்கத்தைப் பெறவேண்டிய பொறுப்பும் அரசாங்கத்தின்மீது விழும்.

இத்தகைய ஒரு நிலையில் அப் பேச்சுவார்த்தையில் வெற்றி கிட்டாவிடின் அதன் பழிக்கு அரசாங்கம் பாத்திரமாக வேண்டி ஏற்படும்.

எனவேதான் அரசாங்கம் சாதுரியமாக இந்த நான்கு கட்டப் பேச்சுவார்த்தையை ஒழுங்கு படுத்தி இறுதியாகப் புலிகளுடன் பேசுவதாக ஏற்பாடு செய்துள்ளது.

ஓடவேண்டும் என்ற அரசாங்கத்தின் நினைப்பை ஐ.தே.க.வின் அரசியல் நகர்வு சவால் விடுவதாயுள்ளது.

இப்படி அரசாங்கத்தின் அழைப்பில் கலந்து கொள்ளாததை அது நிரந்தரப் பகிஷ்கரிப்பாகக் காட்டிக் கொள்ளாததால், அரசாங்கத்திற்கு இந் நடவடிக்கைமீது பாரிய குற்றச்சாட்டைச் சுமத்தவும் முடியாததாக அது செய்துவிட்டது.

அரசாங்கத்தின் விருப்பப்படி விடயங்கள் ஓடுவதைத் தடுக்கவும், அதேவேளை தன்னை தீர்வு முயற்சிக்கு எதிரானதாகக் காட்டிக் கொள்ளாமலே சிங்கள மக்களின் பாதுகாவலனாகவும் வெளிப்படுத்தவும் கூடிய வகையில் ஐ.தே.க. நகர்த்தும்அரசியல் செயற்பாட்டின்

**-நரன்-**

அடுத்த வடிவம்தான், அது இப்போது முன்மொழிந்திருக்கும் அரசியல் திட்டத்துக்கான ஆலோசனைகள்.

இதில் பார்க்கக்கூடிய மறுதல் என்னவென்றால், அரசாங்கம் முன்வைத்த அரசியல் திட்ட ஆலோசனைகளில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகக் காரணம் காட்டி பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள மறுத்த ஐ.தே.க, தானும் அவ் அரசியல் திட்ட ஆலோசனைகளிலிருந்து பெரிதும் மாறுபடும் ஆலோசனைகளைத் தான் இப்போது முன்வைத்துள்ளது என்பதேயாகும்..

ஆக, இங்கே 'மாறுபடுவது' உண்மையில் ஐ.தே.க.வுக்குப் பிரச்சனையாக இருக்கவில்லை. அதற்குப் பிரச்சனை எதுவென்றால், உடன்பாடு ஏற்படுவதே அரசாங்கத்தால் ஒரு

அப்பட்டமாகத் தெருவில் இறங்கி எதிர்த்து முறியடிக்கும்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை சிறீலங்கா சுதந்திரக்கட்சி செய்தபோது ஐ.தே.க. அதற்க எதிராகப்பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தி முறியடித்தது.

பின்னர் டட்லி-செல்வா ஒப்பந்தத்தை ஐ.தே.க செய்ய முன்வந்தபோது, அதே எஸ்.எல்.எப்.பி, "டட்லி வடே மசாலவடே" என்று சிறிமாவோ தலைமையில் ஊர்வலம் நடத்தி முறியடித்தது.

ஜே.ஆர் மாகாண சபை உடன்படிக்கையைக் கொண்டுவர நேர்ந்தபோதும் எஸ்.எல்.எப்.பி. எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இவ்வாறு ஒன்று செய்தால் மற்றையது எதிர்க்கின்ற 'கட்சி அரசியலில்' இனப் பிரச்சனை பகடைக்காயாக உருட்டப்பட்டது.

இன்றும் அதே விடயம்தான், ஆனால் 'நான் அப்படியல்ல' என்ற ஒரு போலித்திரையைப் போர்த்திக்கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

இங்கு, ஐ.தே.க.வுக்கு அரசாங்கத்தை முறியடிப்பதில் குறியேயன்றி, தீர்வை ஈட்டுவதில் அக்கறை தெரியவில்லை.

அதனால் முன்னைய காலம் போல் அப்பட்டமாகத் தன்னை வெளிப்படுத்தாமல் வேறு ஓர் உத்தியைப் பாவித்து 'மாற்று ஆலோசனைகள்' என்றபுது வழியில் இதைச் சாதிக்க முற்படுகிறது.

சாத்தியமாகக்கூடிய வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்காமல் தமது எதிர்க் காயை நகர்த்துவதையிட்டே அது சிந்திக்கிறது.

ஆக, 'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறும் கதைதான்' திரும்பவும் நிகழ்வதாகத் தெரிகிறது.

---

## அண்டை மண்டலத்தில்....

## தமிழ்நாடு இடைத் தேர்தல் ஒரு கண்ணோட்டம்

# அம்மையாருக்கு அடிக்குமேலடி!

தமிழ்நாட்டில் மூன்று தொகுதிகளில் இடைத்தேர்தல்கள். அவற்றில் இரண்டில் ஜெயலலிதாவுக்குப் படுதோல்வி. இன்னொரு முடிவு இன்னமும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் அதிலும் தோல்விதான் என்பது பொதுவான கணிப்பு. என்ன செய்யப் போகிறார் ஜெயலலிதா?

அதுமட்டுமா? தேர்தல் முடிவுகள் வெளியான நாளில்தான் உச்சநீதிமன்றத்திலிருந்து அவருக்கு இன்னொரு பேரிடிவிழுந்தது. டான்ஸி நில பேர ஊழல் வழக்கிலிருந்து அவரை சென்னை உயர்நீதிமன்றம் விடுவித்ததை நிறுத்திவைத்து, அவரும் விசாரிக்கப்படவேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஓர் இடைக்காலத் தீர்ப்பளித்தது. ஜெயலலிதாவிற்கு எதிரான வலுவான வழக்குகளில் இதுவும் ஒன்று என்றே நம்பப்படுகிறது.



மக்கள் மன்றத்தின் ஆதரவிருந்தால் எந்தச் சிக்கலிலிருந்தும் தப்பிக்கலாம்தான். ஆனால் அதுவும் நடப்பதாகத் தெரியவில்லையே! சட்டமன்றத்தேர்தல்களுக்கு 15 மாதங்களே இருக்கும் வேளையில் இடைத்தேர்தல்களில் இப்படியொரு தோல்வியினை சந்தித்திருப்பது ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியிருக்கிறது.

நெல்லிக்குப்பம், அறந்தாங்கி, மற்றும் திருச்சி-2ல் தேர்தல்கள் நடைபெற்றன. இவற்றில் அறந்தாங்கியிலும், திருச்சியிலும் தி.மு.க அணி வெற்றிபெறும், நெல்லிக்குப்பத்தில் அ.இ.அ.தி.மு.க.விற்கு நல்ல வாய்ப்பிருக்கிறது என்றே நம்பப்பட்டது.


காரணம் மூன்று மாதங்களுக்கு முன்னால்தான் நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல்களில், கடலூரில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் அதில் உள்ளடங்கிய நெல்லிக்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 5,000 வாக்குகள் முன்னணியில் இருந்தார். ஆனால் தனித்துப்போட்டியிட்ட தமிழ் மாநில காங்கிரஸ் (த.மா.கா) அங்கு மட்டும் 11,000 வாக்குகள் பெற்றிருந்தது. த.மா.கா., அ.இ.அ.தி.மு.க.வை ஆதரிக்க முன்வந்ததால், குறிப்பாக த.மா.கா. அணியின் ஓர் அங்கமான விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பு முழுமுச்சாக அ.இ.அ.தி.மு.க.வை ஆதரித்ததால், அக்கட்சிக்கு வெற்றி வாய்ப்பிருக்கும் என்று கணக்கிடப்பட்டது.

ஆனால் நடந்ததென்ன? தி.மு.க. வேட்பாளர் 14,000க்கும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். தலித் மக்கள் இயக்கமான விடுதலைச்சிறுத்தைகள், தங்கள் இனத்தாரின் வாக்குகளை ஏன் பெறமுடியாமல் போயிற்று? அ.இ.அ.தி.மு.க.வும் ஒரு வன்னியரையே நிறுத்தியதாலா?

தமிழ்நாட்டின் வடபகுதியில்தான் நெல்லிக்குப்பம் இருக்கிறது. அங்கு வன்னியர்களும் தலித் மக்களும் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இருவரும் மோதிக்கொண்டு வேறு இருக்கிறார்கள். இந்நிலையில் வன்னியருக்கு வாக்களிக்க தலித்துக்களுக்கு மனமில்லை போலும்.

அதேநேரம் விடுதலைச்சிறுத்தைகள் ஆதரவு அ.இ.அ.தி.மு.க.விற்குப்போனதால் வன்னியர்களெல்லோரும் தி.மு.க. பக்கம் வந்துவிட்டனரோ? எப்படியோ, வன்னியர்கள்மீது தனக்குள்ள செல்வாக்கினை நிலைநிறுத்துவிட்டார், தி.மு.க.வை ஆதரித்த பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராம்தாஸ். த.மா.கா. ஆதரவுகிடைத்த தைரியத்தில் பா.ம.க.வை புறந்தள்ளிய ஜெயலலிதாவும், தான் ஆதரிக்கும் கட்சிக்கே வெற்றி என்று நிரூபிக்க முயன்ற மூப்பனாருக்கும் இவ்வளவு அதிகவித்தியாசத்தில் தோல்வி என்பது பெரும் அதிர்ச்சிதான். ஆனால் அதைவிடவும் முக்கியம்- வடபகுதியில் இந்த வெற்றிக்குப்பின் வன்னியர்கள் தலித்துக்கள் மீது தாக்குதல்தொடுப்பார்களா, நன்றிக்கடன்பட்ட தி.மு.க. அரசு அவர்கள் செயல்களைக் கண்டும் காணாமலிருக்குமா?

மாநிலத்தின் மத்திய பகுதியில் இருக்கும் அறந்தாங்கியோ முன்னாள் அ.இ.அ.தி.மு.க. அமைச்சர், எம்.ஜி.ஆர்- அ.தி.மு.க.வின் தலைவர் திருநாவுக்கரசின் கோட்டை என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அக்கட்சிவேட்பாளர் 26,000க்கும் அதிகமான வாக்குவித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.



இந்த முடிவுகள் தி.மு.க.ஆட்சிக்குக் கிடைத்த அங்கீகாரமா? அல்லது பிப்ரவரி இரண்டாம் நாளன்று, ஓர் ஊழல் வழக்கில் ஜெயலலிதாவிற்கு ஓராண்டு சிறைத் தண்டனைகிடைத்ததை எதிர்த்து கலவரம் செய்த அ.இ.அ.தி.மு.க.வினர், தருமபுரியில் ஒரு பேருந்திற்குத் தீயிட, மூன்று கல்லூரி மாணவிகள் கருகினார்களே! அந்த அடாத செயலுக்கு மக்கள் காட்டிய எதிர்ப்பா?

**கானகன்**

1996ல் படுதோல்வியைச் சந்தித்தபிறகு மீண்டும் மனதிடத்துடன் களத்தில் இறங்கி, வலுவானதொரு கூட்டணியை உருவாக்கி, இரண்டே ஆண்டுகளில் நாடாளுமன்றத் தேர்தல்களில் வியத்தகு வெற்றியை ஈட்டி, அகில இந்தியாவின் கவனத்தையே ஈர்த்த ஜெயலலிதாவின் இன்றைய நிலை பரிதாபத்திற்குரியதுதான். ஆனாலும் நாளை நடப்பதை யாரறிவார்? பாரதிய ஜனதாவின் தவறுகள், கலைஞரின் உடல்நிலை என்று எவ்வளவோ விஷயங்களிருக்கின்றனவே!

~ஸ்பெஷல் ரிப்போர்ட்~

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

**சத்தியன்**

புலிகள்-பிரேமதாசா கூட்டு என்பது மிக வெளிப்படையாக ஒரு வியாபார ஒப்பந்தம் போலவே இருந்தது.

இருவருக்கும் அடிப்படையில் இந்தியாவை வெளியேற்றவேண்டிய தேவை இருந்தது.

அதை வெளியேற்றிய பின் அத் தேவை முடிந்தது. ஒப்பந்தமும் முடிந்தது.

அதற்குப் பின்னாலும் அந்த உறவு நீடிப்பதற்கான அவசியமெதுவும் வகுக்கப் படவில்லை.

புலிகளைப் பொறுத்தவரை தமது போராட்டத்தில் ஏற்பட்டிருந்த பாரியதோர் தடைச்சுவரைக் கடப்பதற்காக ஊன்றிப் பாயும் மூங்கில் தடியாகவே இது இருந்தது.

மதிலைப் பாய்ந்தபின் தடியையேன் காவவேண்டும்?

இவர்கள் எதிர் நோக்கியது இரண்டு விடயங்கள்.

ஒன்று, இராணுவரீதியாக இந்தியப் படைகள். மற்றையது, அரசியல் ரீதியாக தமக்கு மாற்றான தலைமையை உருவாக்க முற்படும் ஈ.பி.ஆர்.எல்.எப்பின் மாகாண அரசு.

இந்த இரண்டையும் வெற்றி கொள்வதற்கு இரண்டு ஆபத்தான காரியங்களைத் துணிந்து ஏற்றனர்.

ஒன்று, இதுவரை யாரைப் பிரதான எதிரியாகக் கருதித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தனரோ, அதே இலங்கை அரசுடன் இணைந்து செயற்படும் சர்ச்சைக்குரிய முடிவு.

இத்தகைய ஒப்பந்தத்தால், யாருக்கெதிராக ஆயுதம் தூக்கினரோ அவர்களிடமிருந்தே ஆயுதம் பெற்றனர்.

இதிலே அவர்களைத் துரோகிகளாக அடையாளப் படுத்தக்கூடிய அரசியல் ஆபத்தை எதிர் கொண்டிருந்தனர்.

எனினும், அவர்கள் தம் எதிர்கால நடவடிக்கைகளால் நிலைமையைத் தம்பக்கம் திருப்ப முடியுமென்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்; திரும்பவும் செய்தனர்.

இரண்டாவதாக, தனக்குச் சவாலான அரசியல் தலைமையான ஈ.பி.ஆர்.எல்.எப்பின் மாகாண சபையைக் கலைப்பதற்கான அழுத்தத்தைக் கொடுத்தனர்.

இதிலேயும் அவர்கள் இன்னோர் விட்டுக் கொடுப்புக்குப் பொறுப்பேற்க வேண்டியிருந்தது.

அதாவது, மிகுந்த சிரமத்தின் மத்தியில் உருவாக்கப் பட்ட மாகாண சபையைக் கலைத்து விடுவதால் இதுவரை ஈட்டிய இறுதித் தீர்வும் இல்லையென்று ஆகிவிடுமே என்ற கேள்விக்குப் பதில்தர வேண்டியிருந்தது.

இதிலே இருந்த முக்கிய அம்சமென்னவென்றால் முதலமைச்சரின் ஆலோசனையின்றி மாகாண சபையைக் கலைப்பதற்கான அதிகாரம் அப்போது மத்திய அரசிடம் இருக்கவில்லை.

இது அச் சபைக்குப் பாதுகாப்பாக அமைந்திருந்த ஏற்பாடாகும்.

இந்த ஏற்பாட்டை அகற்றச் செய்து மாகாண சபையைக் கலைக்கும் படி மத்திய அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பது எமது உரிமையொன்றை நாமே பறிகொடுப்பதாக ஆகிவிடுமல்லவா, என்ற பிரச்சனை.

ஆனாலும் புலிகள் அதனைச் செய்தனர். அவர்களுக்கு இச் சபையைக் கலைப்பது ஒன்றே பிரதானமாக இருந்தது.

ஏனெனில் அது அவர்கள் விடுத்த மாற்றுத் தலைமையொன்றாகத் தலையெடுக்கும் சவாலை அவர்களுக்கு விடுத்திருந்தது.

தமிழீழப் போராட்டத்தின் தலைமைப் பாத்திரத்தை எந்த விலைகொடுத்தும் தமது கையில் தக்கவைப்பது விடுதலைப் புலிகளுக்கு அத்தியாவசியமானதாக இருந்தது.

அதனால் அவர்கள் மாகாண சபைக்கிருந்த அதிகாரம் ஒன்று இழக்கப் படுவதைப் பொருட்படுத்தவில்லை.

அதைவிட அவர்கள், இந்த மாகாண சபையையே தமிழ் மக்களுக்கான தீர்வாக ஏற்கத் தயாராக இல்லை.

ஒரு பொலிஸ் நிலையத்தைத் தாக்கும்போது அங்கிருக்கும் கட்டடம் உடையத்தான் செய்யும். எமக்குப் பயனுள்ள அந்தக் கட்டடம் உடைந்துவிடுமே என்று பார்த்து தாக்குதலை நடத்தாது விட்டு விடுவது முட்டாள்தனமென்பது புலிகளின் கருத்து.

கட்டடத்தைப் பின்னரும் கட்டிக்கொள்ளலாம். இலக்கை எய்துவிடுவதே எல்லாவற்றிலும் முக்கியமானது என்பதுதான் அவர்களின் கொள்கை. அந்த வகையிலேயே மாகாண சபை ஆட்சியை அவர்கள் கலைக்கச் செய்தனர்.


இந்த இரண்டு முக்கிய விடயங்களையும் நிறைவேற்றியதையடுத்து பேச்சுவார்த்தையின் சூழலை அவர்கள் இயன்ற மட்டும் பயன்படுத்த விளைந்தனர்.

ஒரு புறத்தில், பாலசிங்கம் உட்பட்ட புலிகளின் பிரதிநிதிகள் கொழும்பில் ஹோட்டல்களில் அரச விருந்தினர்களாகத் தங்கியிருந்து பிரேமதாசாவோடு பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதே வேளை, அரசியல் வேலைகளைப் பரந்த அளவில் மேற்கொள்ளுமுகமாக தமிழ்ப் பிரதேசங்கள் எங்கும் கிளைகள் பரப்பினார்கள். தமக்கான ஒரு தேர்தல் கட்சியொன்றைக்கூடப் பதிவு செய்து கொண்டார்கள்.

பாரிய அளவில் வயற்காணிகளைப் பெற்று விவசாயம் செய்தார்கள்.

இதனைக் கண்ட பலரும்கூட இந்த அமைதி நிலைக்குமென்று நம்ப விளைந்தனர்.



புலிகளின் தலைவர் பிரபாகரனின் எண்ணம் என்னவென புலிகளில் பல்வேறு தலைமை மட்டங்களால் கூட அனுமானிக்க முடியவில்லை.

சூழ்நிலைகளைப் பயன்படுத்திக்கொள்வது புலிகளின் கெட்டித்தனம். அதே வேளை சூழ்நிலைகளுக்குள் சிக்காதிருப்பதும் புலிகளின் கெட்டித்தனம்.

கொழும்பிலிருந்த் வாய்ப்பைப் பயன்படுத்தி இன்னொரு பிரதான அரசியல் சவாலையும் அவர்கள் முறியடித்தார்கள்.

அதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் படுகொலை.

விடுதலைப் புலிகளின் தலைமைக்கான இன்னொரு சவாலாக விளங்கிய தலைவர் அமிர்தலிங்கம்.



புலிகளின் எண்ணப்படி செயற்படுத்த முடியாத, தமிழர்களின் தலைமையை வேறு வகையில் பிரதிநித்துவப் படுத்துகின்ற, செல்வாக்கு மிக்க அரசியல் தலைவராக விளங்கிய அவர், ஆயுதப் போராட்டத்தை தமது அரசியலுக்கு உட்படுத்த முனைவதாக புலிகள் உணர்ந்தனர்.

அதே வேளை, தமக்கு மாற்றான அரசியல் திட்டங்களுக்கு இந்திய அரசுடன் ஒத்துப்போகக்கூடிய ஆபத்தான தலைவரென்ற சந்தேகமொன்றும் அவர்களிடமிருந்தது.

இந்திய அரசின் தூண்டுதலின் பேரில் ஈ.பி.ஆர்.எல்.எப்புடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, புலிகள் பகிஷ்கரிக்கும்படி பகிரங்கமாகக் கோரிய பாராளுமன்றத் தேர்தலிலே போட்டி போட்டதையும் தமக்கு எதிரான அரசியல் நடவடிக்கையாகவே புலிகள் கருதினர்.

ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தபோது

அதன்மீது தலைமை செலுத்த முற்பட்டதில் அமிர்தலிங்கத்தின்மீது ஏற்பட்ட சில கசப்புணர்வுகளும் புலிகளுக்கிருந்தது.

இவற்றுக்கான தண்டனை வழங்கும் வாய்ப்பு ஒன்றைப் புலிகள் உணர்ந்தனர்.

கூட்டணியோடு பேச்சுவார்த்தை நடத்த விரும்புவது போல் பாசாங்கு செய்தனர்.

இளைஞர்களோடு ஈடுபாடு கொண்டிருந்த யோகேஸ்வரன் போன்ற கூட்டணித் தலைவர்கள் நம்பிக்கையூட்டியதால் அமிர்தலிங்கமும் பேசத்தயாரானார்.

ஒருசில பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் தம்மால் ஆபத்தில்லை என்ற நம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு, தக்க தருணத்துக்காகக் காத்து நின்றனர்.

இதிலே ஏமாந்த கூட்டணியினரின் முட்டாள்தனத்தின் உச்சம் யாதென்றால், பேசவந்த புலிகளிடம் ஆயுதம் களைய முற்பட்ட காவல் பொலிஸாரை அவர்களே தடுத்ததுதான்.

ஆயுதத்தோடு வர அனுமதி வழங்கி, பிஸ்கெற் கொடுத்து உபசரித்த பின் அவர்களாலேயே சுடப்பட்டு இறந்ததுதான் இவர்களின் முட்டாள்தனம்.

சூட்சுமமான இராஜதந்திரியான அமிர்தலிங்கம் கூடப் புலிகளிடம் ஏமாந்தார்.

அவரோடு, யோகேஸ்வரனும் கூடவே கொல்லப்பட, சிவசிதம்பரம் மட்டும் சூட்டுக்காயங்களோடு உயிர்தப்பினார்.

தமக்கிருந்த மற்றோரு சவாலை சூழ்நிலையைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் வெற்றிகொண்ட விதம் இது.

இதேவேளையில், தமிழ் நாட்டில் நிலவிய சாதக சூழ்நிலையை உடனடியாகப் பயன்படுத்தவும் அவர்கள் தவறவில்லை.

முதலமைச்சர் கருணாநிதி புலிகளுக்குச் சாதகமான நிலைப்பாட்டை எடுத்திருந்த வாய்ப்பான காலம் அது.

இந்தத் தருணத்தில் இந்தியா சென்றிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப்.பினர் ஒரிஸாவில் முகாமிட்டிருந்தாலும் அதன் தலைவர்கள் தமிழ்நாட்டிலும் நடமாடினர்.

உளவறிய ஏற்பாடுசெய்துவிட்டு இலக்குவைத்துக் காத்திருந்தனர் புலிகள்.

பத்மநாபா தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். உயர்மட்டத்தினரின் கட்சிக்கூட்டமொன்று நடந்து கொண்டிருந்தபோது திடீரெனத்தாக்கினர்.

பத்மநாபா உட்பட யோகசங்கரி, கிருபாகரன் போன்ற முக்கிய தலைவர்களுடன் 13 போர் பலியானார்கள்.

பத்மநாபாவின் சரிவு விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த அதி முக்கியமான மற்றோரு வெற்றி. ஏனெனில், ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்குள்ளே அரசியல் தலைமை கொடுக்கக்கூடிய ஆளுமைமிக்க தலைவராக விளங்கியவர் பத்மநாபா; விடுதலைப் புலிகளுக்கான பாரிய சவாலாக இருந்து வந்தார். அவரின் வீழ்ச்சி ஈ.பி.ஆர்.எல்.எப். பை படுபாதாளத்தில் வீழ்த்தி விட்டது.

பத்மநாபா உயிரோடிருக்கும்வரை ஈ.பி.ஆர்.எல்.எப். புத்துயிர் பெறக்கூடிய அச்சுறுத்தலொன்று புலிகளுக்கு இருந்து வந்தது. இப்போது அது நீண்ட காலத்துக்கு முடக்கப் பட்டுவிட்டது.

இந்தியச் சூழலைப் பயன்படுத்த புலிகள் நகர்த்திய அடுத்த திட்டம்தான் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதுதான் உலகமே திடுக்கிட்ட ராஜீவ் கொலை! அது அடுத்த இதழில்....

(இன்னும் நகரும்)

அலசுவது - இராஜதந்திரி

# மோசமாகிச் செல்லும் மனித உரிமை மீறல்கள்

## விநோதமான 'கடிதப் பரிவர்த்தனை' அரசியல்

அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் உலகில் மோசமான அடிப்படை மனித உரிமை மீறல்களைக் கொண்டிருக்கும் பதினைந்து நாடுகளில் ஒன்றாக இலங்கையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருபுறம் அரசாங்கமும், மறுபுறத்தே தமிழீழ

விடுதலைப்புலிகளும் கடந்த ஆண்டில் (1999) பாரதூரமான அடிப்படை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் உருப்பெற்ற காலம் முதல் இன்றுவரை அடிப்படை மனித உரிமை மீறல்கள் அளவு- கணக்கின்றி இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

தற்போது வெளியாகியுள்ள அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் மட்டுமல்ல, ஏற்கனவே பல தடவைகள் சர்வதேச அமைப்புக்கள் பலவற்றினாலும் இலங்கையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் பெருமளவில் இடம்பெறுவது சுட்டிக்காட்டப்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக்கட்சி 1977ம் ஆண்டுமுதல் 1994ம் ஆண்டுவரை இலங்கையில் ஆட்சியிலிருந்தது. இக்காலப் பகுதியிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையும் அறிமுகமாகியிருந்தது.

இந்த ஆட்சி முறை அமுலுக்கு வந்ததையடுத்தே இலங்கையின் ஆட்சியதிகார விடயங்கள் புதிய பரிமாணங்களைப் பெற்று, அராஜகம் தலைவிரித்தாட ஆரம்பித்தது.

அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்பது இலங்கையைப் பொறுத்தவரை இனரீதியாகவே ஆரம்பமாகியிருந்ததென்றே குறிப்பிடமுடியும்.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்ற பின்னர், இலங்கைத் தமிழர்கள் படிப்படியாகவே தாம் கொண்டிருந்த உரிமைகளை இழக்கலானார்கள்.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்கள் மட்டுமல்ல, மலையகத்தில் பெருந்தோட்டச் செய்கையின் பொருட்டு பிரிட்டிஷாரினால் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழ் மக்கள்கூட மிகமோசமான முறையில் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்குட்பட்டிருக்கவே காணப்படுகின்றனர்.

1977ம் ஆண்டுமுதல் 1994ம் ஆண்டுவரை காணப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் உள்நாட்டு யுத்தத்தினால் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருந்த அதேசமயம், தென்னிலங்கையில்கூட மோசமா அளவில் பெருந்தொகையானோர் ஐ.தே.க அரசின் அடக்கு முறைகளுக்குள்ளாகியிருந்தனர்.

ஐ.தே.க ஆட்சியில் நாடுதழுவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் போயிருந்தனர். தென்னிலங்கையில் ஆறுகள், குளங்கள், கடற்கரையோரங்கள் என்பவற்றில் இளைஞர், யுவதிகள் கொலை செய்யப்பட்டுப் போடப்பட்டிருந்தனர். வீதியோரங்களில் பலர் வாகன டயர்களிலும் போடப்பட்டுக் கொளுத்தப்பட்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் விதத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த தேர்தல் பிரசாரங்கள்கூட, அடிப்படை மனித உரிமை மீறல்களைச் சுட்டிக் காட்டுவதாகவே விளங்கியிருந்தது.

இருந்தபோதிலும் 1994ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த போதிலும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் எவ்வகையிலும் குறைந்து விடாமலேயே இருக்கின்றன. இதனையே அமெரிக்க வெளிநாட்டமைச்சு அறிக்கைகூட தற்போது சுட்டிக் காட்டியிருக்கின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் தென்னிலங்கையைவிட வடக்கு-கிழக்குப் பகுதிகளிலேயே பெருமளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

யாழ் குடாநாட்டில் நடத்தப்பட்ட 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, அங்கே பெருமளவிலான மக்கள் காணாமல் போயுள்ளனர். அத்துடன் இன்றுவரை ஆட்கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம், மிரட்டல்கள், கொலைகள் எனப் பல்வேறு வடிவிலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டு வருவதை அறிய முடிகின்றது.

இலங்கையின் இன்றைய நிலபரத்தை எடுத்து நோக்கும் பட்சத்தில் அரசியலைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை தொடர்ந்து அமுலில் இருந்தே வருகின்றது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில்கூட புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை முடிவுக்குக் கொண்டு வரப்படும், என்று பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தெரிவித்தனர்.

ஆயினும் அரசியலமைப்பு விவகார அமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அண்மையில் தமது பாராளுமன்ற உரையின்போது, அடுத்த ஆறு ஆண்டு காலம் வரை, அதாவது தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவுறும் வரை- நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படமாட்டாதெனத் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளருக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையில் நிறையவே விருப்பமிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சியைப் பொறுத்தவரை அதன் உறுதிப்பாட்டுக்கு தற்போதைய அரசியலமைப்பிலுள்ள அம்சங்களுடன் இராணுவ பலமும் உறுதுணையாகவே இருந்து வருகின்றது.

ஏனெனில் அரசியல் ரீதியான தீர்மானங்களை மட்டுமல்ல, இராணுவ ரீதியான முடிவுகளைக்கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதியே மேற்கொண்டு வருகின்றார். முப்படைகளினதும் பிரதம தளபதியாகவும் அவரே இருந்து வருகின்றார்.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு நிலபரத்தை தொடர்ந்தும் இராணுவ ரீதியாகக் கையாளும் விதத்திலேயே அடுத்த ஆறு ஆண்டுகளுக்கும் தற்போதைய ஜனாதிபதி ஆட்சியை நீடிக்க சந்திரிக்கா அரசு விரும்புவதை ஊகிக்க முடிகின்றது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சு இலங்கையை அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்ற நாடுகளில் ஒன்றாக கருதுவதற்கு, உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளே பிரதான காரணமாக இருக்கின்றன.

யுத்த அநர்த்தங்களே மானிட மேம்பாட்டை உருக்குலைத்து விட்டுள்ளதுடன், மனித உயிர்களையும் பெறுமதியற்றதாக்கி விட்டுள்ளன.

அடிப்படை மனித உரிமைகள் சாசனத்தில் தனிமனித கௌரவம், தனித்துவம் என்பவை மிக உயர்வாகவே பேணப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலகில் ஜனநாயக ரீதியிலான ஆட்சியைக் கொண்டுள்ள தேசங்களில் அடிப்படை மனித உரிமைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையில் இடம்பெறுவது ஜனநாயக ஆட்சி முறையா? அல்லது சர்வாதிகாரமா? என்ற கேள்வியை எழுப்புவதாகவே நாட்டு மக்கள் மீதான அராஜக நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

கடந்தவாரம் வடக்கே வன்னிப்பகுதி முழு நாட்டினதும் கவனத்தைப் பெற்றிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள பதினைந்து யுத்தக் கைதிகள் தமது விடுதலை வேண்டி உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தனர்.

உண்ணாவிரதமிருந்த யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்கு அவர்களது உறவினர்களை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வருவதற்கு புலிகள் அனுமதித்திருந்தனர்.

இதனையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையோடு உண்ணாவிரதக் கைதிகளின் உறவினர்கள் வன்னி சென்று தம்மவர்களைப் பார்வையிட்டிருந்தனர்.

இச் சந்திப்பு யுத்தத்தின் கொடுமை எத்தகையது என்பதையே புலப்படுத்தியிருந்தது.

உண்ணாவிரதக் கைதிகளைப் பார்வையிடச் சென்றோரில் நான்கு வயதுக் குழந்தையொன்றும், 87 வயது மூதாட்டி ஒருவரும் இடம்பெற்றிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முடிவில்லாது செல்லும் யுத்தம் உறவுகள், பந்தபாசங்களை பல்வேறு வகையிலும் மிக ஆழமாகவே பிரித்து வைத்துள்ளது.



ஒரு சாராரையோ அல்லது ஒரு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களையோ மட்டுமல்ல, நாட்டிலுள்ள அனைவரையுமே இன்றைய யுத்த நிலபரம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெரிதும் பாதித்துவிட்டுள்ளது.

வன்னி சென்ற யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தம்மவர்களைச் சந்தித்த பின்னர் அங்கிருந்தும், பிரிவுத் துயருடனேயே திரும்பியிருந்தனர்.

இதேவேளை தென்னிலங்கையில் பல நூற்றுக் கணக்கான தமிழ் கைதிகள் எவ்வித விசாரணைகளுமின்றி சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டு இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டு வருவதையும் அறிய முடிகின்றது.

1983ம் ஆண்டு இனக் கலவரத்தின்போது கொழும்பிலுள்ள வெலிக்கடைச் சிறையில் தமிழ் கைதிகள் மிருகத் தனமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

அன்றிலிருந்து ஆரம்பித்த தமிழ் கைதிகள் மீதான அடாவடித்தனங்கள் இன்றுங்கூடத் தொடர்ந்து வருவதையே களுத்துறைச் சிறைச்சாலையில் அடிக்கடி இடம்பெற்று வரும் சம்பவங்கள் வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

சட்டத்தின் முன் நிறுத்தப்படாமலும், பாதுகாப்பற்றவிதத்திலும் வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் நிலை வேதனைக்குரியதாகவே இருக்கின்றது.

எனவே வன்னியில் இருக்கின்ற யுத்தக் கைதிகள், தென்னிலங்கையில் இருக்கும் தமிழ்க் கைதிகள் ஆகியோர் மட்டுமல்ல. இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுமே யுத்த நிலபரத்தின் கெடுபிடிகளால் ஏதோ ஒரு விதத்தில் கட்டுண்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இதன் காரணமாகவே அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் அறிக்கைகூட உலகில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள பதினைந்து முக்கிய நாடுகளில் இலங்கையும் ஒன்றெனக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் அரசியலாளர்கள் சமாதான சகவாழ்வு, ஜனநாயக பாரம்பரியங்கள் பற்றி நிறையவே பேசலாம். ஆனால் ஒரு முற்றுமுழுதான ஜனநாயக நாடாக மாறுவதற்கு இலங்கை மேலும் நெடுந்தூரம் செல்ல வேண்டுமென்பதையே இலங்கை பற்றிய வெளியாரின் மதிப்பீடுகள் கோடிட்டுக் காட்டியுள்ளன.

அரசியல் கோதாவில் கடந்த வாரங்களில் ஆளுந்தரப்புக்கும், எதிர்க் கட்சிக்குமிடையே நிலவிய இழுபறி நிலை, இனப்பிரச்சனைத் தீர்வு, உத்தேச அரசியல் யாப்புச் சீர்திருத்தம் என்பவற்றில் இருதரப்புமே முரண்டு பிடிக்கும் என்பதையே புலப்படுத்தியிருந்தது.

இதன் மூலம் நாட்டு நிலபரம் நாளுக்குநாள் மோசமாகிச் செல்வதையும் பொருட்படுத்தாது தமது சொந்த நலன்களிலேயே இரு சாராரும் விழிப்பாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவரும் தமக்கிடையேயான வாதப் பிரதிவாதங்களையோ அல்லது கருத்துப் பரிமாறல்களையோ பாராளுமன்றத்திலேயே வைத்துக் கொள்வது வழக்கம்.

ஆனால் எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் இல்லாதவாறு, இலங்கையில் மட்டுமே கடிதங்கள் மூலமாகவே ஆளுங் கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவரும் வாதப் பிரதிவாதங்களை நடத்திவரும் விநோதமான அரசியலை நோக்க முடிகின்றது.

இன்றைய அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்க் கட்சித் தலைவரால் பாராளுமன்றில் பிரதமரை மட்டுமே சந்திக்க முடியுமே தவிர ஆட்சித் தலைவரான ஜனாதிபதியை எதிர்கொள்ள முடியாதுள்ளது.

எனவே எதிர்க் கட்சித்தலைவரும், ஜனாதிபதியும் ஒருவரையொருவர் கடிதங்கள் மூலமாகவே அணுகி வருகின்றனர்.

கடந்த ஒரிருவாரங்களாக இக் கடிதப் பரிவர்த்தனை மூலமாகவே மேற்படி இருவருக்குமிடையே கருத்து மோதல்கள் சூடு பிடித்துமிருந்தன.

முக்கியமான அரசியல் தீர்மானங்களை எடுக்க வேண்டிய ஒரு கால கட்டத்தில் ஆளுங் கட்சித் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவரும் நடத்துகின்ற இக் 'கண்ணாமூச்சி' ஆட்டம் முழு நாட்டையுமே ஏளனஞ் செய்வதாகவே இருக்கின்றது.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 99

### கடந்தவாரம்

அமீன் ஃபுளோராவை தன் மனைவியருள் ஒருத்தியாக சட்டப்படி ஏற்றுக் கொள்ள விரும்பினான். அவளுக்காக ஒரு மாளிகை கட்டித் தருவதாகவும் வாக்களித்தான். தனக்காக ஃபுளோரா எத்தனை பிள்ளைகளை வேண்டுமானாலும் பெற்றுத் தரலாம் என்றும் கூறினான். அவளால் அமீனின் கோரிக்கையை ஏற்றுகொள்ள முடியவில்லை. அமீன் அழைக்கும் போதெல்லாம் வருவதாகக் கூறுகிறாள்.

எண்டபே விமான நிலையத்தில் இஸ்ரேலியர்கள் நடத்திய அதிரடி நடவடிக்கைக்கு உகண்டா இராணுவத்திலுள்ள சில அதிகாரிகளும், சில அமைச்சர்களும்கூட ஒத்தாசை புரிந்துள்ளனர் என்று அமீனிடம் புகார் கூறப்படுகிறது. இதனால் வெகுண்ட அமீன் முதலில் இரு அமைச்சர்கள்மீது தன்னுடைய பழித் தீர்க்கும் முயற்சியை மேற்கொள்ள திட்டமிடுகிறான். இனி...

# இடி அமீன்

'உகண்டா மக்களிடம் போதுமான தேசிய உணர்வு கிடையாது. சுதந்திர நாடாக இருந்தும்கூட மக்களிடம் அந்நிய மோகம்தான் மலிந்து கிடக்கிறது. இதனால் உகண்டா மக்கள் அந்நிய மோகத்திலிருந்து விடுபடுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்!' என்று இடி அமீன் திட்டமிட்டான்.

அந்நிய மோகம் நாட்டில் மலிந்து கிடப்பதற்கு முழுமுதற் காரணமாக விளங்குவது அந்நியர்களால் உகண்டா மக்களிடம் புகுத்தப்பட்ட மத நம்பிக்கை தான், என்று அமீன் நம்பினான். பிரதானமாக அமீனின் சிந்தனைகளை கிறிஸ்தவ மதப் பிரிவுகளே உறுத்தின. ஆகவே அம்மதங்களை ஒழித்து உகண்டா முழுவதையுமே ஒரு முஸ்லிம் நாடாக மாற்றி விட வேண்டும் என்று கருதினான். இந்த எண்ணம் அமீனிடம் நீண்ட காலமாகவே முளைவிட்டிருந்தது.

இஸ்ரேலியர்களிடம் விமானக் கடத்தல் முறியடிப்பு தொடர்பாக அடி வாங்கியதைத் தொடர்ந்து இத்தகைய எண்ணம் அமீனிடம் பூதாகரமாக வளரத் தலைப்பட்டு



தயங்கினான்; உரிய தருணம் வரும் வரைக்கும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தான்.

உகண்டாவை ஒரு முஸ்லிம் நாடாக மாற்றிவிட வேண்டும் என்று இடி அமீன் கருதுவதற்கு மற்றொரு வலுவான காரணமாக அமைந்திருந்தது. அந்நாட்டைச் சுற்றியிருந்த அரபு உலகமே. எண்ணெய் வளத்தால் ஏராளமான செல்வத்தைப் திரட்டி கொண்டிருக்கும் அரபு நாடுகளின் பொருளாதார உதவி, உகண்டா ஒரு முஸ்லிம் நாடாக இருக்குமானால் பெருவாரியாகக் கிடைக்கும் என்று அமீன் கருதினான்.

உகண்டாவின் கிறிஸ்தவ தேவாலயம் 1977ம் ஆண்டு நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட விரிவான திட்டங்கள் போடப்பட்டிருந்தன. இதற்கான நிதி வசூலிக்கப்பட்டது.



அமீன் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் கிட்டிவிட்டது. நூற்றாண்டு விழாவுக்காக பணம் சேகரிப்பதை சுட்டிகாட்டி "கிறிஸ்தவ அமைப்புகள், தேவாலயங்களில் வியாபாரம் செய்ய முற்பட்டு விட்டன!" என்று பகீரங்க மாகவே குற்றம் சாட்டினான். "இத்தகைய வியாபாரத்துக்கு இந்த நாட்டில் நான் இடமளிக்க மாட்டேன்!" என்று அறிக்கை மேல் அறிக்கை விட்டான்.

இதனைத் தொடர்ந்து, மிஷனரிமார் பலரை நாட்டை விட்டு வெளியேற்றினான். இவர்களுள் இருபது கத்தோலிக்கப் பாதிரிமாரும் அடங்குவர்.

கத்தோலிக்க தியாகிகளுக்கான தேவாலயம் ஒன்று 1975ம் ஆண்டு கம்பலாலில் திறந்து வைக்கப்பட்டது. இந்த வைபவத்தில் வத்திக்கானில் இருந்து வந்த பாப்பரசரின் பிரதிநிதியும் கலந்துக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் கலந்துக் கொண்ட இடி அமீன், வழமைக்கு விரோதமாக அரபு ஷேக் மாதிரி உடையுடுத்தியிருந்தான். அடுத்த வருடம்-1976ம் ஆண்டு அமீன் வத்திக் கானில் பாப்பரசரையும் தரிசித்திருந்தான். இவ்வாறு இருந்தும்கூட கத்தோலிக்க திருச்சபை மீதும் அவனுடைய குரோதம் வெளிப்படையாக பிரதிபலிக்க ஆரம்பித்தது.

கிறிஸ்தவர்கள்மீது அமீன் பாரபட்சமான நடைமுறைகளை விரிபுபடுத்த ஆரம்பித்ததும், கிறிஸ்தவ தேவாலயங்களில் பலத்த எதிரொலியை ஏற்படுத்தியது. தேவாலயங்களில் நடைபெறும் பிரார்த்தனைகளில் நாட்டின் தலைவருக்கு நல்லாசிகளை வழங்கும்படியும் பாக்கியங்கள் சேர்க்கப்பட்டு வந்தன.

அமீனுடைய கிறிஸ்தவ மதத்துக்கு எதிரான போக்குகளின் இப்பிரார்த்தனைகளில் நாட்டினுடைய தலைவருக்கு நல்லாசி வழங்குமாறு ஆண்டவரை பிரார்த் திக்கும் வாசகங்கள் நீக்கப்பட்டுவிட்டன.

விட்டது. அமீனுடைய திட்டங்களுக்கு உகண்டாவில் முட்டுக் கட்டையாக விளங்குவது கிறிஸ்துவ மதத்தின் பல்வேறு பிரிவுகளும் என்பது அமீனின் அடிவருடிகளின் எண்ணம். அவர்கள் கிறிஸ்தவப் பாதிரிமார்களையும் மதபோதகர்களையும் பற்றி அவதூறான கருத்துக்களையே அமீனிடம் கூறி வந்தனர்.

நாட்டில் நடைபெறும் பல அந்தரங்க நடவடிக்கைகள் அவ்வப்போது வெளியுலகுக்குத் தெரிந்து விடுகிறது. இதன் பயனாக அந்தந்த நாட்டுத் தொடர்பு சாதனங்கள் இடி அமீன் பற்றிய கார சாரமான விமர்சனங்களை வெளியிட்டு வந்தன. இதற்கு முழுமுதற் காரணம் கிறிஸ்தவ தேவாலய அமைப்புகளே என்று திடமாகக் கருதத் தலைப்பட்டான்.

ஏற்கனவே உகண்டாவின் பொருளாதாரம் சீர்குலையக் காரணம் ஆசிய நாட்டவர்களே என்று முடிவெடுத்து '24 மணி நேரத்தில் ஆசிய நாட்டவர்கள் உகண்டாவைவிட்டு வெளியேற வேண்டும்!' என்று கட்டளையிட்டான். போதுமான எதிர்ப்பு இல்லாமல் இத்திட்டம் கச்சிதமாக முடிவடைந்து விட்டது.

ஆசிய நாட்டவர்களுக்கு விதித்த சட்டத்தை நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு விதிக்க முடியாது என்பதற்கு வலுவான பல காரணங்கள் இருந்தன. உகண்டாவில் வாழ்ந்த ஆசியர்கள் எப்போதும் 'இரு தோணிகளில் கால் வைத்தவர்கள்' போன்ற நிலையில் இருந்தார்கள். அவர்கள் பாரிய அளவில் வர்த்தகத்தில் முதலீடு செய்தும், உகண்டாவில் காணி, பூமி, வீடு வாசல், தோட்டம் துரவு போன்றவற்றை வாங்கி வாழ்ந்து வந்த போதும் பெரும்பாலானோர் உகண்டாவின் குடிமக்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கவில்லை. அவர்களிடம் தத்தமது நாடுகளுக்கான கடவுச் சீட்டுக்களே இருந்தன. இன்னும் கணிசமான தொகையினரிடம் பிரிட்டிஷ் கடவுச் சீட்டுக்கள் இருந்தன. எனவே அவர்களை நாட்டைவிட்டு அப்புறப் படுத்துவது சர்வதேச நிலையில் பலத்த விமர்சனத்துக்கு இடம் தரவில்லை.

உகண்டாவிலுள்ள கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில், உகண்டாவின் குடி மக்களில் கணிசமான தொகையினர் கிறிஸ்தவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுடைய மூதாதையர்களும் கிறிஸ்தவர்களாகப் பன்னெடுங்காலம் வாழ்ந்தவர்கள்.

சில மத போதகர்களும் பாதிரிமாரும் மட்டும் தான் வெளி நாட்டுகளிலிருந்து தற்காலிகமாக உகண்டாவில் தங்கியிருந்தனர். அவர்களை வெளியேற்றினாலோ அல்லது கிறிஸ்தவத்தில் நம்பிக்கை விசுவாசத்துடன் இருப்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்தாலோ அதனால் நிச்சயமாக சர்வதேச மட்டத்தில் பெரும் தாக்கம் ஏற்படத்தான் செய்யும். ஆகவே கிறிஸ்தவ மக்கள்மீதோ, மிஷனரிமார் மீதோ நடவடிக்கை எடுக்கச் சற்றுத்

### தருவது அழகன்

இச் செயல் இடி அமீனுக்கு 'எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது' போன்ற நிலையை ஏற்படுத்தி இருந்தது.

இக்கால கட்டத்தில் கிறிஸ்தவ தேவாலயங்கள் சகலவற்றுக்கும் சென்று வழிபடும் மக்கள் தொகை கணிசமாக அதிகரித்தது. நாட்டின் தலைவருக்காக பிரார்த்திக்கும் வாசகங்கள் நீக்கப்பட்டமைதான் ஆலயங்களுக்கு மக்கள் அதிகமாக வருவதற்கு காரணம் என்று ஒருசிலர் குறிப்பிட்டபோதும் அது மட்டுமல்ல காரணம். உகண்டா மக்கள் அப்போதிருந்த மனோநிலையில் ஆண்டவரைத் தவிர, மனிதர்கள் எவரையும் நம்ப முடியாதவர்களாக ஆகியிருந்தனர்.

எங்கும் பஞ்சம், பசி, பட்டினி; அத்தியாவசிய பொருட்கள் பற்றாக்குறை; உயிருக்கு உத்தரவாதமில்லாத தன்மை ஆகியவற்றுக்கு எல்லாம் நாட்டு மக்கள் ஆண்டவரிடமே முறையிட வேண்டிய நிலையில் இருந்தார்கள்.

(இடி தொடரும்)

## ஹவாய் தீவில் காதலர்கள்



டென்னிஸ் வீரர் ஆன்ட்ரே அகாஸியும், டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராஃபும் காதலித்து வருவது எல்லாருக்கும் தெரியும். இப்போது இவர்கள் இருவரும் பிரிக்க முடியாத அளவுக்கு படுநெருக்கமாக இருந்து வருகிறார்கள்.

அண்மையில் இவர்கள் இருவரும் ஹவாய் தீவுக்கு ஜாலியாகப் பயணம் செய்திருந்தார்கள். அங்கு இருவரும் உல்லாசமாக இருந்திருக்கிறார்கள். இவர்களின் வரவால் ஹவாய் கடற்கரையே கதிகலங்கியிருக்கிறது.

இதனால் அதிகம் இலாபம் அடைந்திருப்பவர்கள் யார் தெரியுமா? புகைப்படக்காரர்கள் தான். இவர்களின் காதல் லீலைகளை சுட்டுதள்ளி விட்டார்கள் புகைப்படக்காரர்கள்.

காதல் போதையில் காதலர்கள் கட்டுண்டு கிடந்ததால் புகைப்படக்காரர்களை இவர்கள் கவனிக்கவே இல்லையாம்.

## அதிஷ்டக்காரக் 'குடி'மகள்

அயர்லாந்து நாட்டின் தலைநகர் டப்ளினில் உள்ள பாரில் ஒரு பெண் உட்கார்ந்து மது அருந்தினார். போதையின் உச்சத்தில் இருந்த அப்பெண் நடக்க முடியாமல் பாத்ரூம் சென்றார்.

அங்கு அப்படியே விழுந்து விட்டார். பாருக்குள் யாரும் இல்லையென நினைத்து பாரை மூடி விட்டுச் சென்று விட்டார்கள்.

மறுநாள் பாரைத்திறந்தும் இந்தப்பெண் கோபமாக இருந்தார். அப்படியே போய் நீதிமன்றத்தில் போய் வழக்குத் தொடுத்து விட்டார். எப்படி?

பாருக்கு வருபவர்களை பத்திரமாகக் கவனிக்க வேண்டியது பார்க்காரர்களின் கடமை. கடமையைச் சரிவரச் செய்யாததால் தனக்கு நஷ்டஈடு தரவேண்டும் என்று வாதிட்டார்.

பெண் தரப்பு நியாத்தைக் கேட்ட நீதிமன்றம் அப்பெண்ணிற்கு 5 ஆயிரம் டொலர் (சுமார் 3இலட்சத்து 60ஆயிரம் ரூபாய்) கொடுக்கும் படி பாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இப்போது சொல்லுங்கள் அதிஷ்டக்கார 'குடி' மகள் தானே?

## தோல்வியின் காரணம்

இந்திய கிரிக்கெட் அணி அடிமேல் அடி வாங்கிக் கொண்டிருந்தாலும் இந்திய கிரிக்கெட் இரசிகர்கள் ஆறுதல் அடையும் சில செய்திகளும் வந்த வண்ணம் தான் இருக்கின்றன.

அவற்றில் ஒன்று, இந்திய அணி அவுஸ்திரேலியாவில் வாங்கிய பெரிய அடிக்கு எல்லாரும் இந்திய அணியைத் திட்டித்தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நியூஸிலாந்து அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் றிச்சர்ட் ஹாட்லீ இந்திய கிரிக்கெட் அணிக்கு ஆதரவாகப் பேசியுள்ளார்.

"இந்திய வீரர்களுக்கு ஏற்ற உணவு அவுஸ்திரேலியாவில் கிடைக்கவில்லை அதனால் தான் அவுஸ்திரேலியாவில் அவர்கள் தோற்றார்கள்" என்றுள்ளார் ஹாட்லி.

அடுத்தது, இந்த மிலேனியத்தில் சூப்பர் விளையாட்டு வீரர்கள் என சர்வதேச மட்டத்தில் தெரிவு செய்திருக்கிறார்கள். இதில்



முதல் 5 இடங்களுக்குள் டெண்டுல்கரும், கவாஸ்கரும் இடம்பெற்றிருக்கிறார்கள் என்பது தான்.

## சீரியஸான சிறுவர் பாடல்கள்

சிறுவர் பாடல் இப்போது சீரியஸ் ஆகிவிட்டது. பாடசாலைகளில் சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பிரபல பாடல்கள் இரண்டு.

ஒன்று 'டுவிங்கிள் டுவிங்கிள் லிட்டில் ஸ்டார்'. மற்றது 'பாபா பிளாக்ஷிப்'. இதில் இரண்டாவது 'பாபா பிளாக்ஷிப்' பாடலுக்கு இலண்டனில் கறுப்பு இனத்தவரிடம் இருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இந்தப் பாடலில் 'பிளாக்ஷிப்' என்ற வார்த்தை ஏன் வருகிறது? 'வைட்ஷிப்' என்று வரக்கூடாதா? என்று போராட்டம் தொடங்கியது. இப்போது இந்தப் பாடல் தடை செய்யப்பட்டுவிட்டது.

## அழகிகள் தெரிவு



சென்ற நூற்றாண்டின் சிறந்த அழகிகள் யார் என் அறிய 'இந்திய ரைம்ஸ் டாட்கொம்' என்ற இன்டர்நெட் நிறுவனம் வாசகர்களிடையே முதல் பத்து அழகிகளைத் தெரிவு செய்து அனுப்பும்படி கேட்டது.

விடுவார்களா வாசகர்கள்? அழகிகள் சம்பந்தப்பட்ட விஷயமல்லவா? ஆளாளுக்கு பத்துப்பதினைந்து லிஸ்ட் தெரிவு செய்து அனுப்பிவிட்டார்கள்.

இறுதியில் அதிகமான வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட முதல் 10 பேர் அடங்கிய லிஸ்ட் இது,

1. ஐஸ்வர்யா ராய், 2. மாதுரி டிக்ஷித்,
3. மதுபாலா, 4. காயத்ரிதேவி,
5. ரேகா, 6. ஜீனத் அமன்,
7. டிம்பிள் கபாடியா, 8. சோனாலி பாண்ட்ரே,
9. லிஸா ரே, 10. ஊர்மிளா மடோன்கர்.

ரம்பா, சிம்ரான் பெயர்கள் வராததால் தமிழர்கள் வாக்களிக்கவிலையோ என எண்ணத் தோன்றும்.

மேற்சொன்ன பத்துப்பேரையும் தெரிவு செய்தவர்கள் எத்தனை பேர் தெரியுமா? ஒரு இலட்சத்து 25 ஆயிரம்பேர்.

## ஜாலியான முடிவெட்டு

இலண்டனில் உள்ள பக்கிம்ஹாம்ஷயர் என்ற இடத்தில் 'மீப் பிள்ஸ்' என்ற சலூனில் ஒரு நாள் திடீரென்று ஆண்கள் கூட்டம் அலைமோதியது.

ஏன் அன்று தான் ஆட்கள் எல்லாரும் முடி வெட்டுவார்களா? என்றால் அதுதான் இல்லை.


காரணம், மீப்பிள்ஸ் சலூனில் அன்று முடிவெட்டுயது ஒரு பெண்மணி. அத்தோடு அன்று ஒரு ஜாலியான விஷயம் நடந்தது.

அன்றையதினம் வாடிக்கையாளர்களை மகிழ்விக்க அம்மணி மேலாடை அணியாமல் முடிவெட்டினாராம்.

எல்லாம் ஒரு ஜாலிக்காகத்தான் இந்தக்கோலத்தில் முடி வெட்டுவதாக அதற்குக் காரணம் கூறினாராம் கேரி மொர்நாக் என்ற அந்தப் பெண்.



இந்த விஷயம் ஜாலியானது என்று பொலிஸாருக்கத் தெரியவில்லைபோலும். விஷயம் கேள்விப்பட்டதும் அவர்கள் ஓடி வந்து சலூனை ஒரேயடியாக மூடி விட்டார்களாம்.



## தொலை காட்சி பேசி



→ **கொ**ரியாவில் சம்சுங் நிறுவனம் புதிதாக சந்தையில் வெளியிட்டுள்ள தொலைக்காட்சியுடன் கூடிய தொலைபேசி இது.

பிரிட்டனில் சுரேயிலுள்ள சேர்பிட்டோனில் சம்சுங் தொழிற்சாலை உள்ளது. ஆனால் இந்த மோட்டோரோலா அளவு சாதனத்தை இங்கு விற்பனைக்கு விடாதிருக்கிறார்கள். இச்சாதனம் இங்கு விற்பனைக்கு வருமானால் இதற்கு நல்ல சந்தை வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும்.


பட உதவி :
ஆர். மாதவன், இலண்டன்.

## பிரமாண்ட ட்ரகன் நடனம்

↑ **தா**ய்வான் நாட்டு தலைநகர் தைபேயில் சமீபத்தில் விழா ஒன்று நடந்தது. இந்த விழாவின்போது கண்கவர் ட்ரகன் நடனம் பிரமாண்டமாக நடைபெற்றது.

தாய்வான் நாட்டின் ஜனாதிபதி மாளிகையின் முன் நடைபெற்ற இந்த பிரமாண்ட ட்ரகன் நடனத்தில் மூவாயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

படத்தில் இரண்டு ட்ரகன் உருவங்கள் உள்ளன. இந்த ட்ரகன்கள் ஒவ்வொன்றினதும் நீளம் 144 மீட்டர் ஆகும்.



## நவீன போர் விமானம்

← **அ**மெரிக்காவின் கலிஃபோர்னியா மாநிலத்தில் எட்வேர்ட்ஸ் விமானப்படை தளத்திற்கு அருகில் பறக்கும் எஃப் 22ன் ராப்டர்ஸ் ரக விமானம்.

இந்த நவீன ரக போர் விமானம் முழுக்க முழுக்க கம்பியூட்டர் உதவியுடன் இயங்குகிறது.

இந்த நவீன ரக விமானங்களில் பத்து விமானங்களை வாங்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி கூறியிருக்கிறார். இந்த விமானம் ஒன்றின் விலை 40 கோடி அமெரிக்க டொலர். நம்நாட்டு மதிப்பில் 2 ஆயிரத்து 920 கோடி ரூபாய்.



## குடும்பப்பாசம்

↑ **அ**மெரிக்காவின் சான் பிரான்ஸிஸ்கோ ஒரு பிரபலமான சுற்றுலா ஸ்தலம். இங்கு வருடந்தோறும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் இங்குள்ள கடற்கரைக்கு பெருமளவில் கூட்டம் கூட்டமாக கடல் நாய்கள் வருகின்றன.

இதைப் பார்ப்பதற்கென்றே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் சான் பிரான்ஸிஸ்கோ நகருக்கு வருகின்றார்கள்.

இந்தக் கடல் நாய்கள் மிகவும் குடும்பப்பாசம் கொண்டவை. இவை தனித்து இருந்தால் இறந்து விடும். படத்தில் இவைகள் கடற்கரையில் ஒன்றின் மேல் ஒன்று படுத்து உறங்குகின்றன.



## நடமாடும் கணனி

→ **இ**து கணனியுகம். புதிதுபுதிதாக பலப்பல வடிவங்களிலும் அளவுகளிலும் கணனிகள் படையெடுக்கின்றன.

'டிரான்ஸ்மெட்டா குருசோ மைக்ரோ பிரோசெகர்' என்ற புதிய முறை மூலம் இயங்கும் நடமாடும் கணனியை கலிஃபோர்னியாவிலுள்ள டிரான்ஸ்மெட்டா கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த டேவிட் டிற் செல் இக் கருவியை செய்தியாளர்களிடம் அறிமுகப்படுத்துகிறார்.



## மிகப்பெரிய நாய்

**கு**ட்டி நாய்க்கு அருகில் இராட்சத உருவத்தில் நிற்பது துருவக்கரடி என்று நீங்கள் நினைத்தால் அது தப்பு.

அதுவும் நாய்தான். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? அண்மையில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடந்த நாய்க்கண்காட்சிக்கு இந்த மெகா சைஸ் நாயும் வந்திருந்தார். நாய் இனங்களில் மிகப்பெரியது சென்ட் பெர்னார்ட் இனம். இதன் எடை 250 இறாத்தல்களுக்கு அதிகமாகத்தான் இருக்கும்.

இந்த நாயாரும் சென்ட் பெர்னார்ட் இனத்தைச் சேர்ந்தவர் தான். கண்காட்சியில் இவரும், குள்ள இன நாயாரும் அருகருகே பார்வைக்கு வைக்கப்பட்டனர்.


## தகவல் பெட்டி

↓ **மு**றையான பயிற்சியின் மூலம் தண்ணீரில் பலமணிநேரம் மல்லாந்து படுத்தவாறு மிதக்க முடியும் என்பதை பலர் சாதனையாகச் செய்து காட்டிய வண்ணம் உள்ளனர்.

இந்தியாவில் உள்ள கேரள மாநிலத்தைச் சேர்ந்த 32 வயதான முகம்மது என்பவர் தண்ணீரில் மிதந்து கொண்டே பத்திரிகை படிப்பது, உணவு அருந்துவது போன்றவற்றைச் செய்கிறார்.

இதே போல் உடலின் பாதிப் பகுதியை தண்ணீருக்கு மேல் உயர்த்தி தண்ணீரில் நிற்கவும், மல்லாந்து படுத்த நிலையில் பம்பரம் போல் உடலைச் சுழற்றுவது போன்ற சாதனைகளையும் செய்து வருகின்றார்.

## மிதக்கும் மனிதர்





## குடுமி வளர்க்கும் நாசர்

'வீரலுக்கேத்த வீக்கம்' படத்தை அடுத்து வி.சேகரின் புதிய படம் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'.

இதில் நாசர்-குஷ்பு, கரண்-ரோஜா, வடிவேலு-கோவை சரளா என 3 ஜோடிகள் நடிக்கிறார்கள். முதல் இரு ஜோடிகள் முதன் முறையாக இணையும் படம் இது. கதைப்படி நாசர், கரண், வடிவேலு மூவரும் சகோதரர்கள் கூட்டுக் குடும்பமாக வாழ்வதால் ஏற்படும் நன்மைகளை விளக்கும் படம் இது. இந்தப் படத்திற்காக நாசர் குடுமி வளர்த்து வருகிறார்.

## காதோடு சொல்லுகி...

சிறிது காலம் தானுண்டு தன் வேலையுண்டு என்றிரு... நடிகர் நடித்த அரசியல் படம் வெற்றி பெற்றதால், ஆக்... அட்டகாசம் பண்ணத் தொடங்கி விட்டாராம். எல்லா விஷ... வருகிறாராம். அவரை வைத்து படமெடுக்கும் இயக்குநர்க... வைக்கிறார்களாம்.

வராக நதிக்கரையோர நாயகியும் சிம்ம நடிகையின் ... அண்மைக்காலமாக நெருக்கமோ நெருக்கமாம். இரவு ... தேக்களில் கலந்து கொண்டு உற்சாக பானம் அருந்தி ஆ... கிறதாம் இந்த ஜோடி.

மூவேந்தர்களில் ஒருவரின் பெயரைக் கொண்ட இ... பிரதன நடிகருக்கும் லடாயாம். இயக்குநர் தற்போது இ... படப் பாடலின் முதல் வரிப் படத்தில் நடிக்கும் புது... மூக்கை நுழைப்பதே லடாய்க்குக் காரணமாம்.

மூன்றெழுத்து 'சி' நடிகருடன் இரகசிய வாழ்... நடிகையின் தங்கை. குடும்ப வாழ்க்கை போர... நடிக்க வந்துவிட்டார் தங்கை நடிகை.

அரசியல் படம் எடுத்து ... இயக்குநர் மீது ஆளும் கட்சி... இருக்கிறதாம். இதை ... கட்சியின் குடும்ப ... விளம்பரத்தைக் ... இயக்குநர்.

கரண் - கௌசல்யா
படம்: ராஜகாளியம்மா

## மினி சினி

'சேது' படத்தின் பெரு வெற்றியால் விக்ரமின் மார்க்கெட் உயர்ந்துள்ளது. இவர் மலையாளத்தில் நடித்துள்ள 'ரெட் இண்டியன்' என்ற படம் அதே பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

சத்யராஜ்-ரோஜா இணைந்து நடித்து முடிவடையும் தருவாயில் உள்ள 'புரட்சிக்காரன்' படத்தில் கௌரவ வேடத்தில் குஷ்புவையும், விவிங்ஸ்டனையும் நடிக்க வைத்துள்ளனர்.

சாதனைப் படம் தந்த கர்வம் கொஞ்சமும் இல்லாமல் அடுத்த பட வேலையில் இறங்கி விட்டார் 'சேது' பாலா. அவர் ஒரே ஒரு படத்தை மட்டும் ஒப்புக் கொண்டுள்ளார். இதில் சூர்யா நாயகன்.

'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார் 'ஒருவன்' பட நாயகியான இந்தி நடிகை பூஜா பட்ரா. இதற்காக இவர் 20 இலட்சம் இந்திய ரூபாய் வாங்கியுள்ளார்.

'கண்ணுக்குள் நிலவு' படத்தை இயக்கிய மலையாள இயக்குநர் பாஸில், இப்போது மலையாளப்படமொன்றை இயக்கி வருகிறார். மோகன்லால் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தின் பெயர் 'புரபவர்'.

'திருநெல்வேலி' படத்தில் அறிமுகமான உதயா தனிக்கதாநாயகனாக நடிக்கவிருக்கும் படத்தை சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. ஆர்.வி.உதயகுமார் இயக்கவிருக்கும் படத்தில் வித்தியா நாயகியாக நடிக்கிறார்.

பிரபு தேவா-அப்பாஸ் இணைந்து நடித்து வெற்றி பெற்ற 'வி.ஐ.பி' படம் இந்தியில் மொழி மாற்றப்பட்டு வருகிறது. அண்மையில் வெளியான 'வி.ஐ.பி' இந்திப் பாடல்கள் பெரும் ஹிட்டாகியுள்ளன.

'அலைபாயுதே' படத்தில் அறிமுகமாகும் சின்னத்திரை நட்சத்திரம் ஸ்வர்ணமால்யாவுக்கு சூர்யா, சரண், மலையாள இயக்குநர் கமல் ஆகியோர் இயக்கும் படங்களில் நடிக்க வாய்ப்புக்கள் வந்துள்ளன.

பிரசாந்த் நாயகனாக நடிக்கும் 'அப்பு' படத்தில் பிரகாஷ் ராஜ் அலி வேடத்தில் நடிக்கிறார். அலி என்றால் நகைச்சுவைக்காகப் படங்களில் காட்டப்படும் அலிகள் போல் அல்லாது வில்லத்தனமான அலி வேடமாம்.



[illegible] - ரம்பா
படம்: [illegible]

## நாயகிகள் மாற்றம்

இயக்குநர் சுந்தர்.சி இயக்கும் 'ஸ்ரீராமஜெயம்' படத்தில் நடிக்க இருந்த ரம்பாவை நீக்கி விட்டார். இப்போது ரம்பாவுக்குப் பதிலாக தமிழில் படங்கள் எதுவுமின்றி இருக்கும் சங்கவியை நடிக்க வைத்துள்ளார்.

அதே போல சுந்தர்.சி இயக்கும் பெயரிடப்படாத புதிய படத்தில் கார்த்திக் நாயகனாகவும் அவருக்கு ஜோடியாக ரம்யா கிருஷ்ணனும் நடிப்பதாக இருந்தது.

இதிலும் இப்போது மாற்றம். ரம்யா கிருஷ்ணனை நீக்கி விட்டு வாய்ப்பின்றி இருக்கும் மந்திராவை ஒப்பந்தம் செய்துள்ளார்.

இப்படி முதலில் ஒப்பந்தம் செய்த நாயகிகளை மாற்றி விட்டு, மார்க்கெட் இல்லாத நாயகிகளை நடிக்க வைக்க என்ன காரணம் சுந்தர்.சி?

## விவியின் சிபார்சு

'வானத்தைப்போல' படத்தில் லிவிங்ஸ்டனுடன் இணைந்து நடித்தவர் அஞ்சு அரவிந்த். படப்பிடிப்பின் போது இருவருக்கும் இடையே நட்பு ஏற்பட்டது.

விளைவு, லிவிங்ஸ்டன் நாயகனாக நடிக்கும் 'நினைவெல்லாம் நீ' படத்தில் இரண்டு நாயகிகளில் ஒருவராக நடிக்கிறார் அஞ்சு அரவிந்த். லிவிங்ஸ்டனின் சிபார்சினால் தான் இந்த வாய்ப்பு அஞ்சுவுக்குக் கிடைத்துள்ளது.

## குஷ்புவின் ...



விஜயகாந்த் - வினிதா
படம்: வானத்தைப்போல

## நட்சத்திரக் காதல்

என்.ஆர்.ஐ.ஃபிலிம் புரடக்ஷன் என்னும் புதிய நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'நட்சத்திரக் காதல்'.

முற்றிலும் புதுமுகங்களான அஜய், பாவனா, சுபாஷினி, அசோக்ராஜ், ஜெயராம் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

அசோக் நாயுடு ஒளிப்பதிவு செய்ய, ராஜேஷ் ராமநாதன் இசையமைக்கும் இப்படத்திற்கு கதை-திரைக்கதை - வசனம் எழுதி இயக்குகிறார் நாயகம்.

## தயாரிப்பில் கார்த்திக்

'பூவரசன்' 'உதவிக்கு வரலாமா' ஆகிய படங்களை தன் மாஜி மனேஜர் சுபார் பெயரில் தயாரித்த கார்த்திக் மனேஜரைக் கழற்றிவிட்ட பின் சில காலம் படமொன்றும் தயாரிக்கவில்லை.

இப்போது மறுபடியும் சொந்தத் தயாரிப்பில் ஈடுபடத்தொடங்கி விட்டார். வேறு யார் பெயரிலும் தயாரிக்காமல் தனது பெயரிலேயே தயாரிக்கவுள்ளார்.

கார்த்திக் தயாரிக்கும் இப்படத்தில் அவரே நாயகனாகவும் நடிக்கப்போகிறார். இப்படத்தை 'பூவேலி', 'ரோஜாவனம்' போன்ற படங்களை இயக்கிய செல்வா இயக்குவார் எனத் தெரிகிறது.

# அக்காவைத் தொடர்ந்து...

சினிமா கைகொடுக்காத விரக்தியில் பல வருடங்களுக்கு முன் சின்னத் திரையில் நடிக்கச் சென்றவர் அக்கா ஹரிதா. இப்போது சின்னத்திரையில் கொடிகட்டிப் பறப்பவர்களில் இவரும் ஒருவர்.

சினிமாவில் ஓரிரு படங்களில் துண்டு துக்கடா வேடங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார் இவரது தங்கை ரவளி. இவரும் அக்காவைத் தொடர்ந்து சின்னத்திரையில் நடிக்க முடிவு செய்து விட்டார்.



# சிகரம் வழியில் இமயம்

தனது மகன் மனோஜை வைத்து 'தாஜ்மகால்' படத்தை இயக்கிய பாரதிராஜா அடுத்து ஒரே சமயத்தில் 3 படங்களைத் தயாரிக்கவுள்ளார்.

இந்த மூன்றில் ஒரு படத்தைக் கூட பாரதிராஜா இயக்கப் போவதில்லை. இதில் ஒரு படத்தை சரண் இயக்குகிறார். ஏனைய இரு படங்களை பார்த்திபன், சுந்தர்.சி இயக்குவார்கள் என்று தகவல்.

இயக்குநர் சிகரம் பாலசந்தர் வழியைப் பின்பற்றுகிறாரோ இயக்குநர் இமயம் பாரதிராஜா?

முகப்பில்

உதய்

சொர்ணா

பாக்யராஜ்



# திரையுலகை மறுபக்கம் 138

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# இயக்குநருடன் கட்டிப்புரண்டு சண்டை போட்ட அப்பா நடிகர்

இளம் இயக்குநர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து வெற்றிப் படங்களாகத் தயாரித்து வருபவர் அந்தத் தயாரிப்பாளர்.

கடந்த வருடம் இரண்டு நாயகர்களை வைத்து புதிய இயக்குநர் இயக்கத்தில் ஒரு படத்தைத் தயாரித்தார். படம் வெற்றி பெற்றது. எனவே அடுத்த படவாய்ப்பு ஒன்றையும் அந்தப் புதிய இயக்குநருக்கே வழங்கினார் தயாரிப்பாளர்.

கண் தானத்தை மையமாக வைத்து முதலில் இயக்கிய படத்தில் வரும் ஒரு பிரபலமான பாடலின் முதல் வரியை புதிய படத்திற்கு வைத்தார் இயக்குநர்.

படத்தில் நடிக்கும் நடிக, நடிகையர்களைத் தேர்வு செய்யும் வேலையில் இறங்கினார் இயக்குநர்.

## 'பார்ட்டி' வைத்தார்

இந்நேரத்தில் தயாரிப்பாளரை வீட்டிற்கு அழைத்து 'பார்ட்டி' கொடுத்தார் நட்சத்திர தம்பதி நடிகர். பார்ட்டியின் போது தயாரிப்பாளரின் புதிய படத்தில் தனது மகனை கதாநாயகனாகப் போடு மாறு கோரிக்கை வைத்தார் அவர்.

நட்சத்திரக் குடும்பத்தில் 'பார்ட்டி'யால் குளிர்ந்து போன தயாரிப்பாளர் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

படத்தின் அறிவிப்பு வெளியானபோது படத்தின் பெயர் மாற்றப்பட்டிருந்தது. அத்துடன் நட்சத்திரக்குடும்ப வாரிசு நடிகருக்குப் பதிலாக இன்னொரு வாரிசு நடிகரின் பெயரும் இடம் பெற்றிருந்தது. தனது மகனுக்குப் பதிலாக வேறு ஒருவர் நடிப்பதற்குக் காரணம் இளைய அரசவின் பெயரைக் கொண்ட அந்தப் புதிய இயக்குநர் தான் என்று அறிந்து கொண்டார் அப்பா நடிகர்.

சம்பத்தில் எதையும் புதுமையாகச் செய்யும் நடிகர் ஒரு பார்ட்டி வைத்தார். அதில் விஜயகுமார் கலந்து கொண்டார். புதிய இயக்குநரின் முதல் படத்தில் புதுமை நடிகரும் நடித்திருந்ததால் புதிய இயக்குநருக்கும் பார்ட்டிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனவே அவரும் ஆஜர்.


## டென்ஷனானார்

பார்ட்டியில் இயக்குநரைப் பார்த்த அப்பா நடிகர் டென்ஷனாகி விட்டார். "நீயெல்லாம் ஒரு டைரக்டரா? இனிமேல் உனக்கு எவன் சான்ஸ் தருவான் என்று பார்த்து விடுகிறேன்" என்று கத்தியபடியே இயக்குநரின் சட்டையைப் பிடித்து அவர் முகத்தில் ஒரு குத்து விட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த இயக்குநர் அப்பா நடிகரை திருப்பி அடித்தார். சண்டை பெரிதாகியது. இருவரும் கட்டிப் புரண்டு சண்டை போட்டார்கள். பார்ட்டிக்கு வந்தவர்கள் இருவரையும் விலக்கி விட்டார்கள். இருப்பினும் அப்பா நடிகர் இன்னும் இயக்குநர் மேல் கோபமாகவே இருந்து வருகிறார்.

# நடிப்புக்கு முழுக்கு

'தாஜ்மகால்' படத்திற்குப் பின் வேறு எந்தப் படத்திலும் நடிக்கவில்லை ரேவதி. தேடி வந்த பல தொலைக்காட்சித் தொடர்களிலும் நடிக்க மறுத்து விட்டார். இனி நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு சமூக சேவையில் தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளாராம் ரேவதி.




# விமானக் கடத்தல் படம்

நாட்டில் நடக்கும் உண்மைச் சம்பவங்களைப் படமாக எடுத்து வந்த ஆர்.கே.செல்வமணி, இப்போது இதை கைவிட்டு விட்டார். இப்போது இதை அர்ஜுன் கையில் எடுத்துள்ளார். அண்மையில் இந்திய விமானம் கடத்தப்பட்ட உண்மைச் சம்பவத்தைப் படமாக எடுக்கத் திட்டமிட்டுள்ளார் அர்ஜுன்.

...ராளம்

...குஷ்பு கவர்ச்சியாக நடித்தே இல்லையாம். ... குஷ்புவின் கவர்ச்சியை முழுமையாக வெளிகாட்டும் பல்வேறு காட்சிகள் அமைந்துள்ள 'சில்லானுங்க'ன்' விரைவில் தமிழிலும் மொழிமாற்றப்பட்டு வரவுள்ளது.



...சாந்திற்கு ...சிம்ரான்

...இயக்கும் 'ஸ்டார்' படத்தில் ...ஐஸ்வர்யா ராய் நடிப்ப... அறிவிக்கப்பட்டது. இப்போது ... வேடத்தில் சிம்ரான் நடிக்...

...அதிஷ்டத்தின் மூலம் பணக்கார... நாயகன் அந்த அந்தஸ்தை எப்... 'கொள்கிறான்' என்பதுதான் ...த்தின் கதை.

...முழுவதும் நகைச்சுவை நாயகனாக ...கிறார் பிரசாந்த். படத்தில் இடம் ... பாடல்களும் வெளிநாடுகளில் பட... ...வுள்ளன.

...'புகார்' ஆகிய இந்திப்படங்களுக்கு ...இசையமைத்த பாடல் மெட்டுக்களை இந்தப் ...பயன்படுத்தியுள்ளார் ஏ.ஆர்.ரகுமான். ...களை கவிஞர் வைரமுத்து எழுதியுள்ளார்.

# மூன்று மொழிகளில் நாகலிங்கம்

'கடல் புறா' படத்தின் மூலம் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இசையமைத்து இயக்கி நடிகராக அறிமுகமானவர் பாபுகணேஷ்.

இவர் இப்போது கதை, திரைக்கதை, வசனம், எழுதி இயக்கி நடிக்கும் படம் 'நாகலிங்கம்'. தமிழ்-தெலுங்கு-கன்னடம் என மூன்று மொழிகளில் தயாராகிறது. இதில் பாபுகணேஷ் மற்றும் பப்லு, ரவளி, தீனா, கோவை சரளா, பாபிலோனா ஆகியோர் நடிக்கின்றனர்.

# மாளவிகாவின் மாற்றம்

குடும்பப்பாங்கான வேடங்களில் மட்டுமே நடிக்கும் முடிவுக்கு வந்திருக்கிறார் மாளவிகா.

படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்ய மாளவிகாவிடம் செல்பவர்களிடம் 'ஹோம்லியான வேடங்கள்' இருந்தால் சொல்லுங்கள் எனச் சொல்லிவிடுகிறார்.

கவர்ச்சி வேடங்களில் இனி நடிக்க வேண்டாம் என அவரது காதலர் அஜய் அன்புக்கட்டளை இட்டுள்ளார். அதுதான் மாளவிகாவின் மாற்றத்திற்குக் காரணம்.

# பந்தா பண்ணும் ஜோதிகா

தற்போது வெளியாகி ஓடிக்கொண்டிருக்கும் 'முகவரி' படத்தின் படப்பிடிப்புக்கள் நடைபெற்றபோது நடந்த சம்பவம் இது.

'முகவரி' படத்தின் இயக்குநர் துரையின் சகோதரியும் அவரது மகளும் படப்பிடிப்பைக் காண வந்திருந்தனர். அப்போது சகோதரி மகள் ஜோதிகாவுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள விரும்பி துரை மூலம் கேட்டார்.

அதற்கு ஜோதிகா, இன்னொரு நாளைக்கு வரச் சொல்லுங்கள் என்று சொல்ல அதிர்ந்து விட்டார் துரை.

அவரிடம் மட்டுமல்ல படப்பிடிப்புத்தளத்தில் உள்ளவர்களிடமும் ஜோதிகா பண்ணும் பந்தா தாங்கவில்லையாம்.

பத்திரிகையாளர்கள், மற்றும் ரசிகர்கள் வந்தால் கூட பிறகு வாருங்கள் என்று தான் பதில் சொல்கிறார்.

# வெற்றிகாண்போம்

கண்ணுறங்க மாட்டோம்-மனம்
சளைத்திருக்க மாட்டோம்!
குண்டுகள் பல வீசி-மக்கள்
உயிர்குடிக்கும் இனவெறியரின்
மதிகெட்ட செயலால்
மக்களை மாய்த்திடும் அவலம் கண்டு
கயவரின் சூழ்ச்சிகளை வென்று
இன்பம் காணும் மட்டும்
கண்ணுறங்க மாட்டோம்-மனம்
சளைத்திருக்க மாட்டோம்!
ccc
வீழ்ந்திருக்க மாட்டோம்-மனம்
சோர்ந்திருக்க மாட்டோம்!
சேற்றில் நடந்து நெல்-விளைந்து
அறுவடை நேரத்தில் விதை பிடுங்கும்
முன்
அக்கினியாய் போர் எனும் அரக்கன்
வந்தான்
இடம் பெயர்ந்தோம் அங்கு வயிறும்
காய்ந்தோம்
புதியதோர் பூமி தோன்றி வளம் பெற்ற
வையகம் உருவாகும் மட்டும்
வீழ்ந்திருக்கமாட்டோம்-மனம்
சோர்ந்திருக்க மாட்டோம்!
ccc
ஓய்ந்திருக்க மாட்டோம்-தலை
சாய்ந்திருக்க மாட்டோம்!
பத்தினியான மங்கைக்கு-பாய்ச்சப்பட்ட
இரத்தத்தால் கலந்ததோ வைரசு
குற்றமில்லை வஞ்சியவள் உருக்குலைந்து
துடிதுடித்து போனதேனோ?
வையகம் மாய்த்திடும் கொடிய நோய்
கொன்று குவிக்க மட்டும்
ஓய்ந்திருக்க மாட்டோம்-தலை
சாய்ந்திருக்க மாட்டோம்!
ccc
தங்கி நிற்கமாட்டோம்-பின்
தங்கி நிற்கமாட்டோம்!
நாகரீகத்தின் உயர்வினால்-நாம்
நலமற்று போனோம்-மதிகெட்டு
போனோம்
போதைவஸ்து மதுபானமென-உடலை
நாம் வருத்தினோம் கல்வியை
மறந்திட்டோம்
இளைஞர்களை அழித்திடும் சமுதாயத்தை
சீர்திருத்த மட்டும்
தங்கி நிற்கமாட்டோம்-பின்
தங்கி நிற்கமாட்டோம்!
ccc
மருண்டு நிற்கமாட்டோம்-கண்கள்
இருண்டு நிற்கமாட்டோம்!
இலஞ்சத்துக்கும் இனங்களுக்கும்
பேதம் பார்க்கும் இந்நாட்டில்
வீதிவழி செல்லமுடியா தமிழர் நாம்
முயற்சியால் உயர்ந்திட முடியா பாவிகள்
நாம்
பண்பு இல்லா தன்மை மாறி
இன்பம் காணும் மட்டும்
மருண்டு நிற்கமாட்டோம்-கண்கள்
இருண்டு நிற்கமாட்டோம்.

ப்ரியா, சிவபுரி,
கோட்டைக்கல்லாறு-02.

## இன்னிசை பாடிவரும்....

சாலையோரம்
தன்னந்தனியாய்-ஓர்
ஆலமரம்....!
***
குயிலொன்று கூடுகட்டி
கானம் பாடி
வாழ்ந்ததற்கு அடையாளமாய்
சிதைக்கப்பட்ட-அந்தச்
சின்னக்கூடு
அந்தரத்தில் ஆடுதங்கே...!
***
வேரில் சேமித்த
அந்தச் சின்னக்குயிலின்
நினைவுகளை
விழுதுகளாய் இறக்கி விட்டு...
வேதனையில் வெந்து
நிற்குதந்த ஆலமரம்....!
***
இலைகள் பழுத்த பின்பும்....
இற்று மண்ணோடு
போன பின்பும்...
காற்றுடன் மட்டும்-தன்
சோகங்களைக் கலந்து கொண்டு
***
குயில் வரும் மீண்டும்
என்று...
அதன் குரல் வரும்
திசையைப் பார்த்துக்
காத்திருக்கு ஆலமரம்!
***
குயில் வருமா?
இன்னிசைக் குரல் தருமா?
***

ம.பிரியா, கிழக்குப்
பல்கலைக்கழகம்.

## காதலியே என் கவிதையைப்பார்

மெல்லத் திறந்தெந்தன் வாயால்
இன்பத் தமிழ் கொண்டு வந்தேன்-காதல்
சொல்லத் துடித்திட்ட நெஞ்சில்
உந்தன் நிழல் தானே கண்டேன்
மல்லுக்கு நீ ஏனோ வாறாய்-எந்தன்
கவிதை பிடியாதோ தாயே-கவியில்
கல்லும் கரையாதோ, கேட்டால் என்ற
பொருளை அறியாயே நீயே!

காதலியே எந்தன் கவி பார்த்து-நீ
காவியில் நீந்துவதை விடுத்து-ஏன்
மோதுகிறாய் மேன்மை தனை விடுத்து-நீ
மேதாவியே என்ற நினைப்புனக்கு-இந்த
புவிபோற்றும் புலவர் பலர்-சொன்ன
மொழிகேட்க மாட்டாயோ-இல்லை
கவிஞர் புலவர்களின் கூற்றில்-என்ன
பிழை கண்டு விட்டாயோ.

கவிஞர் புலவரெலாம் தூசியல்ல-கவிப்
பொருளில் மயங்காத ஆளுமில்லை-இந்த
புவியில் பூத்திட்ட பூவே-என்
அருகில் மெருகோடு வாவேன்-என்
பாட்டில் பொதிந்துள்ள
பொருள் சொல்வேன்-இன்ப
காட்டில் உனைத் தள்ளி
நான் வெல்வேன்-நானும்.

மண்ணை மனங் கொண்டு
மருக் கொள்ள-அதை
பெண் என்று நானெண்ணி
மணங் கொள்ள-எந்தன்
கண்ணை உறுத்தியது
உன் விம்பம்-நீயும்
என்னை இழுத்து விட
பின் துன்பம்!

எம்.சுயர்சன், கோண்டாவில்.


# தமிழ் ஆவணங்கள் பாதுகாப்பு

## 'மைக்ரோ பிலிம்' பதிவு

உலகெங்கும் சிறுபான்மையாக வாழும் தமிழ் மக்களின் நலன் கருதி இது போன்ற ஆவணக் காப்பகம் பெரிதும் உதவும். இலங்கையில் வாழும் தமிழர்களின் நூற்றாண்டு வரலாறும் உலகத் தமிழர்களின் வரலாறும் நிரந்தரமாகப் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் அவற்றை நுண்படச் சுருள்களாக கண்டியில் மாற்றும் நிகழ்வும் வரலாற்றில் இடம் பெறும்.

இப்படி கண்டி உலகத் தமிழர் ஆவணக் காப்பகத்தில் 'மைக்ரோ பிலிம்' பண்ணும் செயல் நிகழ்வின் போது கலந்து கொண்டு பேசிய பேராதனைப் பல் கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் கூறினார்.

குரும்பசிட்டிக் கனகரத்தினம் தம்பதியினரால் கடந்த 45 ஆண்டுகளாகத் திரட்டப்பட்டு வந்த ஓலைச்சுவடிகள், வரைபடங்கள், பழம் பெரும் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் வரலாற்றுத் தகவல்களை இயற்கை அழிவில் இருந்தும் காப்பாற்றும் நோக்குடன் அவற்றை



படப்பதிவு நடைபெறுகிறது. திரு. கனகரத்தினம் இடதுகோடியில் காணப்படுகிறார். (கண்டி நிருபர்)

மைக்ரோ பிலிம் பண்ணும்முறையில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வின் போது கல்விமான்களான திரு.சோ.சந்திரசேகரன், கலாநிதி துரை மனோகரன், கலாநிதி கருனாநிதி, கலாநிதி வேல்முருகு உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன் பொருட்டு நொராட் ஸ்தாபனமும் லேக்ஹவுஸ் முதலீட்டு நிறுவனமும் உதவின.

கடந்த 23.01.2000 ல் இடம்பெற்ற இந்த ஆவணக் காப்பக நுண்படச்சுருள் மாற்றும் நிகழ்வு தொடர்ந்து ஆறு மாதங்களுக்குள் நிறைவுபெறும் என ஆவணக்காப்பக அமைப்பாளர் திரு. கனகரத்தினம் தெரிவித்தார்.

இப்பணிக்கு பல்கலைக்கழக மட்டத்திலும் போதிய ஒத்தாசைகளை வழங்க வேண்டுமெனவும் விடுக்கப்பட்ட வேண்டுகோள் பற்றியும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

இதேவேளையில் தொடர்ந்தும் அப்பணியை இட்டுச் செல்லுமாறும் கனகரத்தினம் தம்பதியர் அறிஞர் பெருமக்களினால் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

## தேன் கிண்ணம்

### வலிமை உண்டு!

வேதனைகளை
தென்றலாக்கி உழைக்கும்
தோட்ட தோழர்களே
சோதனைகள் வந்த போதும்
சாதனை யாக்கும்
சக்தி நமக்கிருக்கிறது
ஒரு பழியல்ல ஓராயிரம்
பழி சொல் வந்தாலும்
தாங்கும் மனம் மட்டும்
அல்ல. தடுக்கும்
வலிமையும் உண்டு!

யோகா, லுணுகல.

### இதயக் குரல்

உன் நினைவை
விட்டு அகல
எடுத்தேன்
பல முயற்சி
முடியவில்லை!
►►►
மனதில் தோன்றும்
இன்ப வெறியை
எடுத்தெறிய
முயன்றேன் பல முறை
முடியவில்லை!
►►►
கண் கொண்டு
உனை நான்
பார்த்தேன் பல முறை
நீ எடுத்தாய்
பல ரூபம்!
►►►
உன் சோதனைகளாலும்
நினைவுகளாலும்
கனவுகளாலும்
இழந்தேன் பல
என் வாழ்வில்!
►►►
இதயக் குரலென
இதை எண்ணி
இன்றே நீ
மாற்றிடுவாய்
உன்னை!

மடவளை
ஏ.எப்.அஹ்சான்.

# நில் கவனி முன்னேறு

மனம் ஒரு குரங்கு. அது எப்போதும் அலைபாய்ந்து கொண்டிருக்கும் என்பது பலருடைய கருத்து. ஆனால் அதைக் கட்டுப்படுத்தவும் முடியும் என்பதை மறந்து விட முடியாது. அடக்க நினைக்கும்போது, மனம் அலைபாயும். அதேமாதிரி அலைபாய விடும்போது அடங்கிப்போக நினைக்கும். இதுதான் மனதின் வினோதம்.

அபார சக்தியுடைய மனம் நம்பிக்கை, உற்சாகம் இரண்டையும் ஊட்டி வளர்க்கும் போது, பல அரிய சாதனைகளை நிகழ்த்தத் தயாராகிறது.

மனதை கடிவாளமிட்டு அடக்காமல், அதனுடன் நட்பு கொண்டு, நேசித்து, நல்ல காரியங்களுக்கு அதனைப் பயன்படுத்திக் கொண்டால் நினைத்ததை சாதித்து விடலாம்.

ஒரு விதத்தில் பார்த்தால் மனம் ஒரு குழந்தை போலதான். குழந்தைகள் எப்



போதும், துறுதுறுவென்று அங்குமிங்கும் ஓடி, பார்க்கும் பொருட்களைப் பற்றி அறியும் ஆவலில் வினா கேட்டு விடை அறியத் துடிப்பதுபோல் தான் மனமும். குழந்தைகளை அடித்து, பயமுறுத்தி ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பெற்றோர்களைப் போலவோ, ஆசிரியர்களைப் போலவோ இருக்காமல், குழந்தைகளின் விருப்பு, வெறுப்பினை அறிந்து, அன்பினால் அவர்களின் மன ஆற்றலை மலரச் செய்ய வாய்ப்புகளை உண்டாக்கித் தருவது பெற்றோர்களின் கடமை.

மனத்தின் இயல்பை அறிந்து அதன் போக்கிலேயே அறிவுபெறும் வாய்ப்பை உண்டாக்கித் தர வேண்டும். மனதிற்குகந்த ஆக்க வேலையில் ஈடுபடுவதால் அமைதியும், ஆக்கத் திறனும் கிட்டும் சிலர்செய்யும் தவறு இதுதான். அதாவது வேலை செய்யும் நோக்கமின்றி, மனதைக் கட்டுப்படுத்துவதையே வேலையாகக் கருதினால், அதனால் ஒரு பயனும் கிடைப்பதில்லை. மனதை அடக்கும் முயற்சியிலும் தோல்விதான் ஏற்படும்.

மனதை அடக்கும் நோக்கத்தில் மூளையை சிதறடிக்காமல் மற்றவர்குக்குப் பயன்படும் பணியில் மூழ்கி தங்களையே மறந்து அதில் லயித்துக் கிடக்கும் மக்களுக்கு ஜபமோ, தியானமோ தேவையில்லை. காலையில் யோகாப்பியாசம் செய்வது ஒன்றே நல்ல வழி.

தினமும் காலையில் கடமையைச் செய்யத்துவங்குவதற்கு முன்புசிறிது நேரம் இறைவனை எண்ணி வணங்கினால் மனதிற்கு அமைதி கிடைக்கும்.

பிடித்த வேலையைச் செய்யும் போது தான் மனத்திற்கு நிறைவும், மகிழ்ச்சியும் வருகிறது. பிடித்த வேலை, படிப்பை பெற முடியாதவர்கள் விரக்தியடைந்து விடாமல் கிடைத்ததை விரும்பக் கற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வதே சரியான வழி.

## பேனா நண்பர்கள்



பெயர்: ரி. சுமன்
வயது: 18
முகவரி: இல. 19/144,
பாம் வீதி, மட்டக்குளி,
கொழும்பு-15.
பொழுது போக்கு:
வானொலி.



பெயர்: எல். யோகராணி.
வயது: 18
முகவரி: 7ம் ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி.

# இந்தவாரம் உங்கள் பலன்

05.03.2000 முதல் 11.03.2000வரை

ஜோதிடர் 'கா்னா'

**மேடம் :**
தடுமாற்ற நிலைதளர்வு, பல விதமான முன்னேற்றமும் முயற்சிகளில் ஈடுபாடும் ஏற்படும். போக்குவரத்தில் கவனமாக இருக்கவும். பெண்களுக்கு வசதியான வாழ்வு அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 6, 10.

**இடபம் :**
நோய் நீங்கும். திருமண பேச்சுக்கள் கைகூடி வரும், தவறிப்போன பண, பொருட்கள் வந்து சேரும், தாய் வழி உறவினர்களின் வருகையும், உதவியும் காணப்படும். ரோகிணிகாரர் பணவசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : சனி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 07.
அதிஷ்ட திகதிகள் : 7, 11.

**மிதுனம் :**
தொழில் செய்வோருக்கு ஏற்றமான காலம். பெண்களால் பணவரவு உண்டு. ஆக்கத் தொழில் செய்வோருக்கு சிறப்பான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் : 6, 10.

**கடகம் :**
வழக்கு பிரச்சனைகள் குறையும். கல்வி துறைசார்ந்து நிற்போர் கல்வியில் முன்னேற்றமுண்டு. வாகன சுகம் கிட்டும். சில பெண்களால் பிரச்சனை ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை;எண் : 08.
அதிஷ்ட திகதிகள் : 8, 12.

**சிம்மம் :**
கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேறும். பணவசதிகள் கௌரவம் உயரும். கல்வி, பல விதமான முயற்சிகள் கைகூடும். ஆரம்பமாகிக் கொள்ளும் தடைகள் மறையும். சுபயோகமான நேரமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 5, 6.

**கன்னி :**
நோய் துன்பப்படுத்தும். பெரியோர்கள் முட்டுக்கட்டை போடுவார்கள். தனது மனதில் காணப்பட்ட வெறுப்பு நிலை, பணத்தட்டுப்பாடு ஏற்படும். எதிலும் நிதானம் தவறாது செயற்பட வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல் வர்ணம்; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 7, 9.

**துலாம் :**
தொழில் மந்தம். பலவிதமான யோசனை காணப்படும். எதுவாயினும் சமாளிக்க முடியும் என்ற மனநிலை தென்படுவதுடன் நற்பலன் செய்யும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 09.
அதிஷ்ட திகதிகள் :10, 12.

**விருச்சிகம் :**
புதிய உத்திகள் உதயமாகும். வழமைக்கு மாறாக பல வெற்றிகள் வந்து சேரும். உயர்கல்வி நிலை வளர்ச்சியுறும். உறவினர்களின் உதவியும் கிடைக்கும். அலைச்சல்களைத் தவிர்க்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண் : 04.
அதிஷ்ட திகதிகள் : 9, 11.

**தனுசு :**
பணவரவுண்டு. புதிய உறவினர்களின் வருகை தூர இடத்து பயணத்துக்கிடமுண்டு, புதிய பொறுப்புகள் ஏற்படும். மனதில் உள்ள பதற்ற நிலை நீங்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண் : 05.
அதிஷ்ட திகதிகள் : 9, 10.

**மகரம் :**
பயண ஏற்பாடு துரிதமடையும், பல நாட்கள் சுமையாக இருந்த விடயம் சுலபமாகத் தீரும். புதிய நண்பர்களின் உதவி கிடைக்கும். குழந்தைகளுக்கு மகிழ்ச்சியான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 6, 7.

**கும்பம் :**
நோய் துன்பம் தொல்லை தரும் பிரயாணம் சங்கடம் தரும். கணவருடன் கருத்து வேறுபாட்டுக்கிடமுண்டு. போசன சுகமின்மையுடன் பரீட்சை கல்வி நிலை என்பனவற்றில் கவனம் செலுத்தவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 8, 11.

**மீனம் :**
பெரியோர்களின் உதவி கிட்டும், புதிய ஸ்தானவசதி ஏற்படும். அத்துடன் பலன்படி பணபெருக்கமும் தூர இடத்து நற் செய்தியும் காணப்படும். கல்வி, தொழில்நுட்பவலு இவ்வாரம் உயர்வைக் கொடுக்கும். புதன் பணவரவு காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண் : 06.
அதிஷ்ட திகதிகள் : 10, 11.

# தாளமுடியாத தலைவலியைத் தவிர்க்கும் வழிகள்

**சா**தாரண தலைவலியானது தூக்கமின்மை, அசுத்தக் காற்றைச் சுவாசித்தல் பசி, மலச்சிக்கல், புகைபிடிக்கும் பழக்கம், அளவுக்கு மீறி தேனீர், கோப்பி அருந்துதல், அவசர உணர்வு போன்ற காரணங்களால் உட்கொள்வதுதான்.

மனஉளைச்சலும் தலைவலிக்கு இன்னொரு காரணம். இந்த அவசர யுகத்தில் ஒவ்வொரு நிமிடமும் மன உளைச்சல் ஏதாவது ஒரு காரணத்தால் ஏற்பட்டுக் கொண்டே



உண்டாகின்றன.

தலைவலி தாளமுடியாது போனால் சிலருக்கு முன் மண்டையில் நெற்றியில் கழுத்தில், பின் மண்டையில் முதுகுப்பகுதியில் முகநரம்பு புடைத்தல் போன்ற விளைவுகளோடு அந்தந்த இடங்களில் அதிக வலி உண்டாகும்.

தலைவலி புறத்தலைவலி, அகத் தலைவலி என இரு வகைப்படும்.

புறத்தலைவலியானது, பசி, மலச்சிக்கல், தூக்கமின்மை, காய்ச்சல் பார்வைக்கோளாறு, இரத்த அழுத்தம், மன உளைச்சல், தலையில் நீர் கோர்த்தல் முதலியவைகளால் உண்டாகும்.

அகத்தலைவலியானது தலையில் அடிபடுதல், மூளையில் கட்டி, இரத்தக் கசிவு ஆகியவற்றால் உண்டாகும்.

அநேகமானவர்களுக்கு பசியால்தான் அதிகமாகத்தலைவலி உண்டாகிறது. இதற்கு மருந்து வேளாவேளைக்கு தவறாமல் உணவு யிருக்கிறது.

எதற்கெடுத்தாலும் ஒரு அவசரம், வேகம், டென்ஷன், இந்தத் தலைவலி வராமல் இருக்க நிதானமாக செயற்படுவதும் எதையும் 'டேக் இட் ஈஸி' என எடுத்துக்கொள்வதும் தான் கை கண்ட மருந்து.

பசியினால் அடிக்கடி தலைவலிக்கு ஆளாகுபவர்கள் அகத்திக்கீரையை உணவில் நிறைய சேர்த்துக்கொண்டாலே போதும்.

சாதாரண தலைவலி என்றால் நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டுக் கொண்டாலே போய்விடும். நெற்றிப் பொட்டில் சுக்கை அரைத்துப் பற்றுப் போட்டாலும் தலைவலி அகன்று விடும்.

நல்லெண்ணெயில் இஞ்சியைத் தட்டிப் போட்டு லேசாகக் காய்ச்சி நெற்றிப் பொட்டில் தேய்த்தாலும் தலைவலி அகலும்.

தலைவலி நீங்க அடிக்கடி தலைவலி மாத்திரைகளை உட்கொள்வதும் நல்லதல்ல.

# எளிய மருத்துவக் குறிப்புக்கள்



★ சோற்றுக் கற்றாழையினுள் நுங்கு போல் இருப்பதைத் தீப்புண் மீது வைத்துக் கட்டி விட்டால் எரிச்சல் குறையும். குளிர்ச்சியாய் இருக்கும். கொப்புளம் உண்டாகாது.

★ கொதிக்கும் எண்ணெய் உடம்பில் பட்டு விட்டால், உடனே தோசை மாவை எடுத்து அதன்மீது தடவினால் கொப்புளங்கள் வராது.

★ வசம்பைத் தூளாக்கி தேனில் கலந்து சாப்பிட்டு வந்தால் வாய் நாற்றம் போய்விடும்.

★ வெந்தயத்தை தூளாக்கி காலையில் ஒவ்வொரு தேக்கரண்டி சாப்பிட்டு, தண்ணீர் குடித்து வந்தால் உடம்பின் உள் சூடு குறையும்.

★ மாதவிலக்கு தொடங்குகிற சில நாட்களுக்கு முன்பே உணவில் புதினாக் கீரையைச் சேர்த்து வந்தால் வயிற்று வலி வராது.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HE

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-03-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 28 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

**அ**ன்று ஜனாதிபதி கிளின்ரன் மிகவும் சோர்வுடன் காணப்பட்டார். ஓவல் அலுவலகத்தின் பின்புறமிருந்த பிரத்தியேகப் பகுதிக்குள் வரும்படி அழைத்தும் மோனிக்கா, முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு சற்று விறைப்பாகவே காணப்பட்டாள்.

உடல் உபாதை மட்டுமல்லாமல் உள்ளத்திலும் பெரும் சுமையுடன்தான் கிளின்ரன் அன்றிருந்தார். அவருடைய முதுகுப்புறம் நீண்டகாலமாக ஓர் உபாதை இருந்து வருகிறது. சில நாட்களில் வலி அதிகமாக அவஸ்தைப் படுவார். மருத்துவ வசதிகள் மலைபோல் குவிந்துகிடக்கும் அந்நாட்டில் எந்த மருத்துவராலும் ஜனாதிபதியின் முதுகுவலியைப் போக்கடிக்க முடியவில்லை. அன்றும் அவருக்கு முதுகுவலி கடுமையாக இருந்தது. இருப்பினும் ஓய்வு நாளான அன்று அலுவலகம் வர வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கிருந்தது.

பொஸ்னியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்காகச் சென்றிருந்த அமெரிக்கப் படையைச் சேர்ந்த ஒரு வீரன் மோதலின்போது உயிரிழந்துவிட்ட செய்தி அப்போதுதான் கிளின்ரனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவின் அனைத்துப் படைகளுக்கும் ஜனாதிபதியே தலைவர். பொஸ்னியாவில் அமைதி காக்க, ஜனாதிபதியே படைகளை அனுப்புவதற்கான பொறுப்பினை ஏற்றிருந்தார் என்பதனாலும் அந்த வீரனின் உயிரிழக்க கிளின்ரனே காரணம் என்பதனாலும் அவர் மனம் வேதனை அடைந்திருந்தது.

முதுகுவலியுடன் பொஸ்னியாச் சம்பவமும் சேர்ந்து கொண்டமையால் கிளின்ரன் அன்று விவரிக்க முடியாத துயரத்தில் மூழ்கியிருந்தார். இதனை உணராமல் கிளின்ரன் குஷியாகவே இருக்கிறார் என்ற எண்ணத்தில், ஓவலுக்குள் நுழைந்த மோனிக்கா, அன்று 'இரண்டில் ஒன்று பார்த்து விடுவது, என்ற தோரணையில் நின்றிருந்தாள்.

### விளையாட்டுப் பொம்மையாக....

கிளின்ரன் தன்னை, ஒரு விளையாட்டுப் பொம்மையாக எண்ணிக் கொண்டிருக்கிறாரா, அல்லது உண்மையிலேயே காதலிக்கிறாரா, என்பதை அவரிடம் அன்று திட்டவட்டமாகக் கேட்டு அறிந்துவிட வேண்டும் என்ற உறுதியுடன் இருந்தாள். தொலைபேசியில் தொடர்பு கொள்வதாகவும் அடிக்கடி தன்னை அழைத்து சல்லாபிப்பதாகவும் கூறிவிட்டு பல நாட்கள் பாராமுகமாக இருந்து விடுகிறார். மோனிக்கா அவருடைய அழைப்புக்காகப் பல நாட்கள் காத்திருந்து ஏமாந்து போனமையினால் ஏற்பட்ட மனத்தாங்கலே அவளுடைய இந்த முடிவுக்குக் காரணம்.

ஓவலின் பின்புறமாக வுள்ள-வழக்கமாக அவர்கள் இருவரும் கலந்துறவாடும்- அறைக்குப் போக அழைத்தும், மோனிக்கா ஆடாமல் அசையாமல், குனிந்த தலை நிமிராமல் நின்றது கிளின்ரனுக்கு என்னவோ போலிருந்தது. எப்போதும் புள்ளிமான் போல் துள்ளிக் குதித்துக் குதூகலமாகக் காணப்படும் இப்பெண், இன்று இப்படி இருக்கிறாளே, என்று சற்றுக் கலங்கிப் போனார். ஏதாவது உடல் நலக்குறைவாக இருக்குமோ என்றும் எண்ணினார். அவளருகில் வந்து முன்புறமாக நின்றவாறு தனது இரு கைகளாலும் அவளுடைய முகத்தை நிமிர்த்தினார்.



அன்று மோனிக்கா தனது தலை முடியைப் படிய வாரவில்லை. வெறுமனே கோதி ஒரு 'பிறெற்' மட்டும் கட்டியிருந்தாள். அவளுடைய வட்டவடிவமான முகத்துக்கு இதுவே தனிக் கவர்ச்சியைக் கொடுத்தது. கிளின்ரனின் கைகள் அவளுடைய முகத்தில் பட்டதும் அவளுடைய உள்ளக் கிடக்கையெல்லாம் பொலபொல வென்று வெளியேறின.

"உங்களுக்கு என்மீது உண்மையான அன்பில்லை. இத்தனை நாட்கள் என்னை ஏனென்று கூடத் திரும்பிப் பார்க்காமல் தவிக்க விட்டு விட்டீர்களே! நான் எவ்வளவு தவிப்பாக இருந்தேன்!" என்று திக்கித் திக்கிப் பேசினாள்.

### நீ ஒரு வெகுமதி!

கிளின்ரனுக்கும் மோனிக்காவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவளை வாரி அணைத்துக் கொண்டு முத்தமாரி பொழிந்தார். "கிடோ! என் நிலை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைத்தான். பல தரப்பட்ட வேலைப் பளுவால் சங்கடப்படும் எனக்கு நீ கிடைத்தது ஒரு பெரும் வெகுமதி யாக நான் கருதுகிறேன். இத்தனை துன்பங்களையும் நான் தனியனாகவே சுமந்தாக வேண்டிய நிர்ப்பந்தம். ஒரு பிரச்சனை தீர்ந்து விட்டது என்று எண்ணிக் கொண்டிருக்கையில், திடீரென்று பூதாகரமாக மற்றுமொரு பிரச்சனை எதிரே வந்து நிற்கும். எனக்கு எத்தகைய பிரச்சனைகள், சிக்கல்கள், சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதை எவரும் அறிய மாட்டார்கள்!" என்று கிளின்ரன், மோனிக்காவிடம் சொன்னார்.

அப்போதுதான் மோனிக்கா, தன் முன் நிற்பது உலகிலேயே மிகப்பெரும் சுமையைத் தன்மீது சுமந்து துடிக்கும் ஒருவர் தன் முன்னால் நிற்கிறார் என்பதை உணர்ந்தாள். கிளின்ரன் தொடர்ந்தார்:

"நாம் இருவரும் சந்திக்கும்போதுதான் நான் உண்மையில் மனச் சந்தோஷமும் நிம்மதியும் அடைகிறேன். ஏனைய நேரங்களில் உண்மையில் நான் தனித்துவிடப்படுகிறேன். வெளியுலகிலுள்ளவர்கள் நான் எப்போதும் ஆனந்தமாகவே இருக்கிறேன் என்றுதான் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இதோ இன்று வந்திருக்கும் செய்தி என் அடிமனத்தையே உலுக்கி விட்டது. எனது ஆணைப்படி பொஸ்னியாவுக்கு அமைதியை நிலைநாட்டச் சென்ற படைவீரன் ஒருவன் மாண்டு போனான். இதற்கு நான் தானே தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும்!" இவ்வாறு கிளின்ரன் கூறியதும் மோனிக்காவின் கண்கள் பனித்தன. 'தனது நாட்டு மக்களை இவ்வளவு தூரம் நேசிக்கும் இத்தகைய ஒரு மாமனிதரை எமது தலைவராகக் கொண்டிருக்கிறோமே!' என்று கருதலானாள். இதனைத் தொடர்ந்து தனது முத்தங்களைப் பொழிந்து கிளின்ரனை ஆசுவாசப்படுத்தினாள் மோனிக்கா. 'இத்தகைய ஒரு பொறுப்பு வாய்ந்த-தன்னைப் போல் பிறரையும் நேசிக்கும் சுபாவமுடைய ஒருவரை, எத்தனையோ பிரச்சனைகளைச் சுமந்து கொண்டிருப்பவரைச் சந்தேகித்து, அவரைப் புண்படுத்திவிட்டேனே!' என்று பச்சாதாபப்பட்டாள். அத்துடன் கிளின்ரனுடன் அவள் மேலும் உரிமையுடன் நெருங்குவதற்கும் தயாரானாள்.

## நான் ஒரு விளையாட்டுப் பொம்மையா?

### 25 வயது இளைஞர்

கிளின்ரனுடன் தான் நெருங்கிப் பழகும் போதெல்லாம் அவர் ஓர் இளைஞர் போலவே நடந்து கொண்டதையெல்லாம் எண்ணிப் பார்த்தாள். அவர் ஏற்கனவே அவளிடம் "உன்னோடு பழகும்போது நான் 25 வயதுடைய இளைஞனாகி விடுகிறேன்!" என்று கூறியதும் அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது.

### மற்றுமொரு கேள்வி!

பெப்ரவரி மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையன்று கிளின்ரன் அழைப்பை ஏற்று ஓவல் அலுவலகம் சென்ற மோனிக்கா, அன்றும் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டு அவரைக் கண் கலங்க வைத்துவிட்டாள். "நீங்கள் என்னுடன் காதல் லீலையில் ஈடுபடுவதற்காகத்தானே நாட்டம் கொண்டீர்கள்?" என்பதே அவளுடைய கேள்வி. கிளின்ரன் அவளைக் கட்டி அணைத்த வண்ணம், "ஒருக்காலும் நீ என்னை அப்படிக் கருதாதே! உன்மீது எனக்கு அபார அன்புண்டு. எனது மகள் செல்சியாமீது எத்தனை அன்பு செலுத்துகிறேனோ அந்த அளவு அன்பு உன்மீது எனக்குண்டு!" என்றார்.

அன்று வெகு நேரம் வரை இருவரும் மிக நெருக்கமாக இருந்து தங்களுடைய இளமைக் கால அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். ஹிலாரியைத் திருமணம் புரிவதற்கு முன்னர், தான் பல பெண்களுடன் வைத்திருந்த தொடர்புகளைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார். அவருடைய கதைகளிலிருந்து அவருக்கும் ஹிலாரிக்குமிடையில் போதுமான அளவு காதல் ஈடுபாடு இல்லை என்பதை உணர்ந்து கொண்டாள்.

அண்டி பிளெய்லருடன் தனக்கு இருந்த தொடர்பு பற்றியும் மோனிக்கா விவரமாக எடுத்துரைத்தாள்.

மோனிக்கா பல தடவைகள் வீட்டுக்குப் புறப்படுவதற்கு முயற்சித்தாள். ஆனால் கிளின்ரன் அவளை வெளியேறவிடவில்லை. அவள் இருக்கையை விட்டு எழுந்திருக்கும் போதெல்லாம் அவளைக் கட்டிப் பிடித்து அமர்த்தி விடுவார். இறுதியில் தான் அவளை வீட்டு தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்வதாக கிளின்ரன் கூறினார். அவரைச் சீண்டி விடுவதற்காக மோனிக்கா, "உங்களுக்குத்தான் என் வீட்டுத் தொலைபேசி இலக்கம் ஞாபகம் இருக்காதே!" என்றாள். ஆனால் கால தாமதம் எதுவுமில்லாமல், கிளின்ரன் அவளுடைய வீட்டில் அவளுக்குரிய இரு தனிப்பட்ட தொலைபேசி இலக்கங்களையும் அவளுடைய அலுவலக இலக்கத்தையும் மளமள வென்று சொன்னார்.

மோனிக்கா "O.K. You Pass!" என்றாள்; 'சரி நீங்கள் பரீட்சையில் சித்தி' என்ற பொருளில்.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஏ.எச். நஜிமுன் நிஸா,
860, ஜாமியா லேன், பாலையூற்று, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பாப்பா முரசு சிறுகதை

# கவியும் புவியும்

காட்டில் இரண்டு புலிக் குட்டிகள் இருந்தன.

இரண்டுமே ஆண் புலிக்குட்டிகள். மூத்த புலிக் குட்டியின் பெயர் கவி. இளைய புலிக்குட்டியின் பெயர் புவி.

கவி மிகவும் துணிச்சலானது. முரட்டுத்தனமானது. எப்பொழுதும் துருதுருவென்றிருக்கும்.

புவியும் துணிச்சலானதுதான். முரட்டுத்தனமானதுதான். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? ஆனால், அமைதியுடனும் சாதுவாகவும் இருக்கும். எதையும் யோசித்து நிதானத்துடன் செயல்படும்.



ஒருநாள் அவை இரை தேடியபடி வெகுதூரம் சென்றுவிட்டன.

அந்த இடத்தில்-

புலிகளைப் பிடிப்பதற்கான ஒரு கம்பிக் கூண்டை வைத்துவிட்டு, புலி ஏதேனும் வருகிறதா என்று மரத்தின் மேல் மறைந்திருந்தபடி இரண்டு வேட்டைக்காரர்கள் காத்திருந்தனர்.

கம்பிக் கூண்டிற்குள் ஆட்டின் மாமிசத்துண்டு வைக்கப்பட்டிருந்தது.

கவியும், புவியும் கவனித்தன.

கம்பிக் கூண்டுக்குள் மாமிசத் துண்டைப் பார்த்ததும் கவியின் நாக்கில் நீர் ஊறியது.

"புவி அருமையான இளம் மாமிசத் துண்டு. நம் நீண்ட நேர அலைச்சல் வீண் போகவில்லை!" என்றது கவி.

"அண்ணா! அவசரப்படாதே! சற்றுப் பொறு. அந்த மாமிசத் துண்டு கம்பிக் கூண்டிற்குள் இருக்கிறது. கவனித்தாயல்லவா?"

"ஆமாம்! கதவைத் தள்ளி உள்ளே போனால் மாமிசத்துண்டை எடுத்துக் கொண்டு வந்து விடலாம். என்னால் பசியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் போய் அதை எடுத்து வருகிறேன்!"

"அண்ணா! பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பது சரியாகத்தான் இருக்கிறது. அவசரப்படாதே! அந்தக் கூண்டினுள் போனால் நீ மாட்டிக் கொள்வாய்!"

"சரி! அப்படியே வைத்துக் கொள்! நான் மாமிசத்துண்டை எடுத்துக் கொண்டதும், நீ வெளிப்பக்கமிருந்து கதவைத் திறந்து விடு!"

"வேண்டாமண்ணா இந்த விபரீதம், நமக்கு உணவு கிடைக்காமல் போகாது. இந்த மாமிசம் வேண்டாம். வா... வேறு பக்கம் செல்லலாம்."

"தம்பி! நீ ஒரு சரியான கோழை. பயந்தாங்கொள்ளி. நீ இங்கேயே இரு. நான் மாமிசத்தை எடுத்துக் கொண்டு எப்படியாவது வந்து விடுகிறேன்."

புவி எவ்வளவு தடுத்தும் கேளாமல், கவி கூண்டை நோக்கிச் சென்றது. கூண்டை நெருங்கி அதை ஒரு முறை நோட்டம் விட்டது.

மாமிசம் அதை உந்தி இழுத்தது.

முன் காலால் கூண்டின் கதவைத் தள்ளி உள்ளே போனது கவி.

அந்தக் காட்சியை...

அருகிலிருந்த, மரத்தின் மேல் மறைந்திருந்த வேட்டைக்காரர்கள் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு வேட்டைக்காரர் அமைதியான குரலில், "புலிக்குட்டி! துருதுருவென்று அழகாக இருக்கிறது. இதை விற்றால் நிறையப் பணம் கிடைக்கும்!" என்றார்.

இருவரும் கூண்டையே கவனித்தனர்.

உள்ளே போன கவி, மாமிசத் துண்டைக் கவ்வி எடுத்துக் கொண்டு கதவின் அருகே வந்தது. அதற்குள் கூண்டின் கதவு 'படார்' என மூடியது. அதை எப்படித் திறப்பது என்று அதற்குத் தெரியவில்லை. மேலும் கீழும் பார்த்தது.

கதவைத் திறக்க முடியாமல் அது தவிப்பதைப் பார்த்த புவி, கூண்டின் அருகே ஓடி வந்தது.

அப்போது-

இரண்டு வேட்டைக்காரர்கள் மரத்தின் மீதிருந்து 'தொபீர்' என்று குதித்தனர்.

திடுக்கிட்டு அவர்களைப் பார்த்த புவி, சில விநாடிகள் நின்ற பிறகு பயத்தால் பின் வாங்கியது.

வேட்டைக்காரர்கள் ஓடிச்சென்று கூண்டின் கதவை கனத்த பூட்டால் பூட்டினர்.

சிறிது நேரத்தில் ஒரு வான்வர, அந்தக் கூண்டை அதில் ஏற்றிக் கொண்டு கிளம்பினர்.


ஆபத்தை உணர்ந்திருந்த கவி, தம்பி புவியைப் பார்த்து கண்ணீர் விட்டது.

"தம்பி! நீ நல்லது சொன்னாய். நான் கேட்கவில்லை. அதனால் துன்பத்தை அனுபவிக்கிறேன்!" என்று சொல்லி பொல பொல... வென்று கண்ணீரை வடித்தது.

**குழந்தைகளே! எந்த விஷயத்திலும் அவசரப்படாதீர்கள். கவர்ச்சியான பொருட்களைக் கண்டால் மனம் மயங்கி "இப்பவே வேண்டும்!" என்று அடம்பிடிக்காமல் யோசித்து முடிவு செய்யுங்கள்.**



## வழி காட்டுங்கள்



வெற்றிலை பாக்குத் தட்டைத் தேடிக் கொண்டிருக்கும் தாத்தாவுக்கு அது இருக்கும் இடத்திற்கு வழி காட்டுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **11.03.2000.**


வர்ணம் தீட்டும் போட்டி இல: **334**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 332

**பரிசுக்குரியவர்:**
ம. கவிதா,
விபுலாநந்த மத்திய கல்லூரி, காரைதீவு-01.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஆர். யதுர்சன், தாண்டிக்குளம், வவுனியா. | எ.ஃப்.எம். ஃபஸ்மில், சேர் ஃராசிக் பரீத் மகா வித்., பண்டாரவளை. |
| பி. ஜெயஅருள் நேசன், விபுலாநந்த மகா வித்தியாலயம், மல்வத்தை. | எல். ஜீவானந்தன், தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை. |
| என். நிபான், அநு/நேகம முஸ்லிம் ம. வித்., நேகம்பஹ. | நிரோஷ் ஜேம்ஸ், சென். பெனடிக்ட் கல்லூரி, கொழும்பு-13. |
| செல்வி ஆர். கமலினி, தமிழ் மகா வித்தியாலயம், வெளிமடை. | எஸ். பாத்திமா அஸ்கா, மட்/றகுமானியா வித்தியாலயம், ஏறாவூர். |
| தர்மிக்கா தர்மதாஸ், புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்னார். | எம். ஷாஜாத் முஹம்மத், மட்/மெத்தைப்பள்ளி வித். காத்தான்குடி. |



செவ்ரோடைன் என்பதைத்தான் எல்லாரும் எலிமான் என்று அழைக்கிறார்கள். மான் இனத்தில் மிகச்சிறியதாக இருக்கும்

## செவ்ரோடைன்


இது, மேற்கு ஆபிரிக்காவில் உள்ள காங்கோ காடுகளிலும், தெற்காசியாவின் சில பகுதிகளிலும் வாழ்கின்றன.

இலேசான மஞ்சள் நிறத்தோடு செம்பழுப்பு நிறமான உடலைக் கொண்ட இந்த எலி மான்களின் உடலில் வெள்ளைப்புள்ளிகள் காணப்படும். இதன் உயரம் 10 முதல் 12 அங்குலம் மட்டுமே. இவற்றின் நிறையே 5 முதல் 6 இறாத்தல்கள் மட்டும்தான்.

மெலிந்த கால்களை உடைய இப்பிராணி பயந்த கூச்ச சுபாவம் கொண்டது. இதற்குக் காரணம் பயம் தான். இவற்றிற்குக் கொம்புகளே கிடையாது. இதனால் இவை எதிரிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள முடியாது. தப்பியோட மட்டுமே முடியும்.

இவற்றிற்கு எதிரிகள் மிக அதிகம். காட்டுப் பூனைகள், பாம்புகள், உடும்புகள், என அனைத்து விலங்குகளுமே எலி மான்களை வேட்டையாடுகின்றன.

இவற்றை விட காட்டில் எலிமான்கள் இறைச்சிக்காக மனிதர்களால் வேட்டையாடப் பட்டும் வருகின்றன.



## செய்து பாருங்கள்

சிகரெட் பிடிப்பது உடல் நலத்திற்குத் தீங்கு. இருப்பினும் பலர் புகை பிடிக்கிறார்கள். நாம் வெற்று சிகரெட் பெட்டிகளை நமக்குப் பயன்படும் விதத்தில் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

வெற்று சிகரெட் பெட்டிகளை எடுத்து அதன் உள்ளே இருக்கும் அட்டையை எடுக்க வேண்டும். அந்த அட்டையின் பின்புறம் பசையைத் தடவி, அதைத் திரும்பவும் சிகரெட் பெட்டிக்குள் நுழைத்து அதை பெட்டியின் அடிப்புறத்துடன் ஒட்ட வேண்டும்.

இப்போது ஒட்டப்பட்டிருக்கும் சிகரெட் பெட்டியை கவருடன் சேர்ந்து ஒட்டிவிட்டு, இதன் உள்ளே பேனா பென்சில்களைப் போட்டு வைத்துக்கொள்ளலாம்.



# திக் திக் தொடர்

"ஒருத்தன் பேரு சபாபதி ஸார். இன்னொருத்தன் சுலைமான். ரெண்டு பேரும் ஒரு டெய்லரிங் மார்ட்ல வேலை பார்த்துக்கிட்டு இருக்காங்க.....!"

பக்கத்தில் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டுச் சொன்னார்:

"ஸார்....! இவன் சொன்ன அந்த டெய்லரிங் மார்ட்டுக்கு கான்ஸ்டபிளை அனுப்பி, அந்த ரெண்டு பேரையும் கூட்டிகிட்டு வரும்படியா சொல்லியிருக்கேன் ஸார். அவங்க வந்த பின்னாடிதான் இவன் சொல்றது உண்மையா பொய்யான்னு தெரியும்....!"

"லுக் மிஸ்டர் சார்லஸ்! வெறுமனே இன்வெஸ்டிகேஷன் பண்ணிட்டிருந்தா இந்த விவகாரத்தில் நமக்கு ஃப்ரூட்புல் ரிசல்ட் கிடைக்காது. சில அதிரடி நடவடிக்கைகளை நாம எடுத்தாகணும்...."

"இன் வாட் வே ஸார்....?"

"ப்ளீஸ். கம் டு மை ப்ளேஸ்! லெட் அஸ் டிஸ்கஸ்..."

"எஸ்... ஸார்..." ரிஸீவரை அதனிடத்தில் அமர்த்திவிட்டு, வியர்த்து வழியும்



கும்'ன்னு சொல்லிட்டோம். அன்னியிலிருந்து அதையே பிடிச்சுக்கிட்டான். பிரஸ் ரிப்போர்ட்டர் ஒரு பொண்ணாயிருந்தா அவளுக்குக் கூடுதல் மதிப்பு கிடைக்கும்ன்னு நினைச்சு, பெண் வேஷம் போட்டுக்கிட்டு அவன் ஏர்போர்ட் போனதை நாங்க சீரியஸா எடுத்துக்கலை ஸார். இப்படிப் போய் ஒரு விபரீதத்துல மாட்டிக்குவான்னு தெரிஞ்சிருந்தா, கண்டிப்பா தடுத்து நிறுத்தியிருப்போம்...."

சார்லஸ், ஒரு பெருமூச்சோடு பின்பக்கம் திரும்பி இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

"இவங்ககிட்டேயும் அந்த பாலசுப்ரமணியன்கிட்டேயும் ப்ரீப்பா ஸ்டேட்மெண்ட் எழுதி வாங்கிகிட்டு அனுப்பிடுங்க....!"

"எஸ் ஸார்....."

"பட்.... தினசரி காலை பத்து மணிக்கு மூணு பேரும் ஸ்டேஷனுக்கு வந்து கையெழுத்துப் போட்டுட்டுப் போகணும்... நம்ம சந்தேக லிஸ்ட்டிலிருந்து அவங்க பெயர்களை எடுக்கிறவரைக்கும் ஸ்டேஷனுக்கு வந்துட்டு போகச் சொல்லுங்க....!"

"எஸ்... ஸார்...."

சார்லஸ் ஜீப்பை நோக்கி நடந்தார். மனசுக்குள் ஒரு பெரிய கேள்விக்குறி முளைத்து கிளைகளைப் பரப்பிக் கொண்டு நின்றது.

'கமிஷனர் தீவிரவாதிகளுக்கு எதிராக ஓர் அதிரடி நடவடிக்கையை எடுக்கப் போவதாக டெலிஃபோனில் சொன்னார். அவர் எது மாதிரியான நடவடிக்கையை எடுக்கப் போவதாக டெலிஃபோனில் சொன்னார்? அவர் எது மாதிரியான நடவடிக்கையை எடுப்பார்....?'

யோசிப்பில் மூளை வலித்தது.

★★★

சர்க்யூட் ஹவுஸ்.

போலீஸ் காவல் நெருக்கமாய்த் தெரிய, உள்ளே இருந்து பாதுகாப்பான அறைக்குள் கிரிக்கெட் காப்டன் நரேஷ், கண்களில் நீர் நிரம்ப டெலிவிஷனில் அந்த நியூஸைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பக்கத்தில் மனைவி ஹம்ஸாவும் ஒரு வயது ஆண் குழந்தையும் நெருக்கமாய் உட்கார்ந்திருக்க, நரேஷின் மாமியார் லட்சுமி ராஜம் எதிர் சோபாவில் படுத்து கண் மூடியிருந்தாள்.

சின்னத்திரையில் இந்நியூஸ் ரீடர் கவலைக் குரலில் சொல்லிக் கொண்டிருந்தார்.

## 16

# 'சிகப்பு வணக்கம்'

இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே க்யூ பிராஞ்சை சேர்ந்த அதிகாரி ஒருவர், தயக்கமாய் செல்லுக்குள் நுழைந்து, சார்லஸுக்கு சல்யூட் வைத்துவிட்டு "ஸார்!" என்றார்.

"எஸ்...."

"கமிஷனர் உங்களை உடனடியாக டெலிஃபோனில காண்டாக்ட் பண்ணச் சொன்னாங்க ஸார்...!"

செல்லிலிருந்து சார்லஸ் சட்டென்று வெளியேறி, கம்யூனிகேஷன் அறையை நோக்கிப் போனார். எழுந்து நின்ற ஊழியர்களைப் பொருட்படுத் தாமல், டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டார்.

கமிஷனரின் ஹொட்லைன் டெலிஃபோன் எண்கள் டயலில் அழுத்தப்பட மறுமுனை நடுக்கமாய் முணு முணுத்தது. கமிஷனரின் குரல் கடுப்பாய்க் கேட்டது.

"எஸ்....!"

"ஸார்.... நான் சார்லஸ்....!"

"சார்லஸ்.....! உங்க இன்வெஸ்டிகேஷன்ல ஏதாவது ப்ரோக்ரஸ் இருக்கா....?"

"இதுவரைக்கும் இல்லை ஸார்....."

"இல்லைன்னு சொல்லிட்டா எப்படி? திங்க்ஸ் ஆர் கோயிங் இன் ஏங்க் மேனர்.

ஹாஸ்பிடலைஸ் பண்ணப்பட்ட பங்கஜைக் காப்பாற்ற எக்ஸ்பர்ட் டாக்டர் குழு ஒண்ணு எவ்வளவோ முயற்சி பண்ணியும் முடியலை. பங்கஜ் இப்போ உயிரோடு இல்லை. ஒரே நாள்ல கிரிக்கெட்போர்டு சேர்மன் ஆச்சார்யாவும், கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பங்கஜும் கொடூரமான முறையில் தீர்க்கப்பட்டிருக்காங்க. இந்த தீவிரவாத கும்பல் இனி அடுத்து, அணியின் காப்டன் நரேஷை ஹிட்லிஸ்ட்டில் வைத்திருக்கலாம். நடக்கிற சம்பவங்களைக் கைகட்டிப் பார்த்துக்கிட்டிருக்கவா நாம காக்கி யூனிஃபார்மைப் போட்டுகிட்டு இருக்கோம்...."

"ஸார்...! போலீஸ் எவ்வளவோ திறமையா செயல்பட்டும், அந்தத் தீவிரவாத அமைப்பை ட்ரேஸ் பண்ண முடியலை. நாம விரிச்ச வெச்ச வலையில், முரளி கோஷ்டியும், பெண் வேஷம் போட்ட ஒரு நபரும் மாட்டிகிட்டாங்க... பட் நடந்த கொலைகளுக்கு நாங்க காரணமில்லைன்னு ஆணித்தரமா அடிச்சுச் சொல்றாங்க. அவங்க கொடுத்த ஸ்டேட் மெண்ட்ஸிலும் பொய்யில்லைன்னு தெரியுது...."

முகத்தோடு திரும்பினார் சார்லஸ். அவர் திரும்புவதற்காகவே காத்திருந்த இன்ஸ்பெக்டர் சொன்னார்:

"ஸார்...! டெய்லரிங் மார்ட்டிலிருந்து அந்த சபாபதியும் சுலைமானும் வந்திருக்காங்க..."

சார்லஸ் இறுகிய முகத்தோடு முன்னால் இருந்த அறைக்குப் போக, மிரண்ட பார்வைகளோடு இரண்டு இளைஞர்கள் பெஞ்சில் உட்கார்ந்திருந்தார்கள். கலக்கமாய் எழுந்தார்கள்.

அவர்களைப் பார்வையில் நனைத்த சார்லஸ் கேட்டார்.

"லோக்கப்பில் இருக்கிற பாலசுப்ரமணியனைப் பார்த்தீர்களா?"

"பார்த்தோம் ஸார்...."

"கிரிக்கெட் ப்ளேயர்களைப் பக்கத்துல பார்க்கிறதுக்காகவும் அவங்ககூட நின்னு ஃபோட்டோ எடுத்துக்கிறதுக்காகவும்தான் பாலசுப்ரமணியன் பெண் நிருபரா வேஷம் போட்டுக்கிட்டு ஏர்போர்ட்டுக்கு வந்ததாகச் சொல்றான் உண்மையா?"

"உண்மைதான் ஸார்...!"

சார்லஸ் சுட்டு விரலை உயர்த்தினார். "இது ரெண்டு பெரிய ஆட்களோட மரண

**கிரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஸ்குமார்**

விவகாரம். பாலசுப்ரமணியனைக் காப்பாத்தறதுக்காக நீங்க ரெண்டு பேரும் பொய் சொன்னா, போலீஸ் எப்படியும் கண்டு பிடிச்சுடும். அதுக்கப்புறம் நீங்களும் சேர்ந்து உள்ளே போக வேண்டியிருக்கும்..."

"இல்ல ஸார்....! பாலசுப்ரமணியன் நீங்க நினைக்கிற மாதிரி தீவிரவாதி கிடையாது. அவன் ஓர் அப்பாவி ஸார். கிரிக்கெட் மேமேயும் கிரிக்கெட் ப்ளேயர்ஸ் மேலேயும் பயங்கர வெறி ஸார்! இந்தியாவில எந்த ஊர்ல கிரிக்கெட் நடந்தாலும் பார்க்கப் போயிடுவான்.

கிரிக்கெட் ப்ளேயர்ஸை நெருக்கத்துல போய்ப் பார்த்து அவங்ககிட்ட ரெண்டு வார்த்தையாவது பேசணும்னு அடிக்கடி சொல்லிட்டிருப்பான். அப்படிச் சொல்லும் போது நாங்கதான் ஒரு நாள் வாய் சும்மா இருக்காமே, 'நீ ஒரு பத்திரிகை ரிப்போர்ட்டரா இருந்துட்டா அந்த வாய்ப்பு கிடைக்

"இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பங்கஜ் அவர்கள், மர்மமான முறையில் கொலைசெய்யப்பட்டுள்ளார். கிரிக் கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவின் மரணத்தைத் தொடர்ந்து, நிகழ்ந்த இந்த இரண்டாவது மரணம், நாட்டையே உலுக்கியுள்ளது. கொடூரமான இந்தக் கொலைகளுக்கு ஒரு தீவிரவாத அமைப்பே காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்திய கிரிக்கெட் அணியைச் சேர்ந்த எல்லா வீரர்களுக்கும் சிறப்பான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. போலீஸ் கமிஷனர், மற்ற உயர் போலீஸ் அதிகாரிகளோடு கலந்து பேசி தீவிரவாதக் கும்பலைப் பிடிக்க ஒரு புது வியூகம் வகுத்து....."

சின்னத்திரை பேசிக் கொண்டிருக்க, நரேஷின் மனைவி ஹம்ஸா, சட்டென்று திரும்பி கணவனின் தோளைத் தொட்டாள்.

"என்னங்க..."

"ம்...."

அவள் குரலில் இப்போது குளிர். மூக்கை அவஸ்தையாய்த் தேய்த்தாள்.

"ஏதோ கெட்ட ஸ்மெல் வரலை....?"

நரேஷ் வியப்பாய் தன் மனைவியைப் பார்த்தான்.

"ஹம்ஸா.... நீ என்ன சொல்றே?"

"ஆமாங்க... நல்லா ஸ்மெல் பண்ணிப் பாருங்க. ஏதோ மூக்குக்குப் பிடிக்காத ஒரு ஸ்மெல் வரலை?"

நரேஷ் எல்லாப் புலன்களையும் நாசிக்குக் கொண்டுவந்து மூச்சை இழுத்துப் பார்த்தான். லேசாய் நெற்றி சுருங்கி முகம் மாறினான்.

"இது... ஏதோ ஒரு மருந்து நெடி ஹம்ஸா...."

"இத்தனை நேரமாய் இந்த மருந்து நெடி இல்லையே.... இப்போ எப்படி திடீர்ன்னு...?"

"உன்னோட அம்மா ஏதாவது மருந்து சாப்பிட்டாங்களா?"

"இல்லையே...! அம்மா ஒரு மணி நேரமா அதே சோபாவில் அப்படியேதான் படுத்துக்கிட்டு இருக்காங்க.... அவங்க எந்த மருந்தும் சாப்பிடலை...."

ஹம்ஸா சொல்லிக் கொண்டிருக்கும் போதே மருந்தின் நெடி சற்று தூக்கலாய் எழுந்தது, நாசியை இம்சைப்படுத்த, நரேஷ் எழுந்தான்.

(தொடர்ந்து வரும்)

---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# தர்மயுத்தம் 26

## உணர்ச்சிகள்

பிறந்தநாள் விழா சென்னை மியூசிக் அகாடமியில் சிறப்பாக ஏற்பாடாகியிருந்தது. அன்று காலையில் எனக்கு வேறு ஒரு வேலை இருந்ததால், அந்த வேலையை முடித்துவிட்டு, மூன்று மணிக்கெல்லாம் மியூசிக் அகாடமி செல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன்.

சென்ற இடத்தில் சற்று தாமதம் ஆகிவிட்டதால், வேலையை முடித்துக் கொண்டு நான்கு மணியளவில் பரபரப்பாக வெளியில் வந்தேன். அங்கே என் உடன்பிறவாத் தம்பி அருள் எனக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன். "கமலின் அப்பா இறந்துவிட்டார்!" என்றார். "எப்போ?" என்றேன். "மத்தியானம் இறந்துருக்காரு. வீட்டுக்குப் போன் வந்தது!" என்றதும், கொஞ்ச நேரம் அப்படியே அசையாமல் நின்றேன். மகனின் பிறந்த நாளன்று தந்தை மறைந்திருக்கிறார்.



### 'அத்தி' என்ற டி.எஸ்

அவசர, அவசரமாக கமலின் வீட்டை நோக்கிக் கார் பறப்பட்டது. குடும்பத்தில் உள்ள அனைவராலும், நெருங்கிப் பழகிய ஒரு சிலராலும், 'அத்தி' என்று செல்லமாக அழைக்கப்பட்ட, பரமக்குடி மக்களின் பாசத்திற்கும், மரியாதைக்கும் உரிய காங்கிரஸ் தியாகி, அந்தப் பகுதியின் பிரபல வழக்கறிஞர், எல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறந்த கலா ரசிகர், வயது வித்தியாசம் பாராமல் நட்பணர்வோடு பழகிய, 'டி எஸ்' என்று செல்லப் பெயரோடு வாழ்ந்த பரமக்குடி டி.சீனிவாசன் என்ற அந்த மாமனிதரின் நினைவு என் மனதில் நிழலாடிக் கொண்டிருந்தது.

அவர்களுக்கு எனக்கும் கமலுக்கும் உள்ள உறவுதான் தெரியுமே தவிர, கமலுக்கும், சக்திக்கும் உள்ள உறவு என்னவென்று தெரியாது. அவர்கள் உடன் பிறவா சகோதரர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் சக்தியும் எனக்கு ஒரு மகன்தான். என் மகனுக்கு நடக்கிற பாராட்டு விழாவில் நான் எப்படித் தலைமை தாங்க முடியும்?"

என்னை மானசீகமாக மகனாக ஏற்றுக் கொண்ட அந்தத் தந்தையின் மரணம் என்னை வெகுவாகப் பாதித்தது.

கமலின் வீட்டிற்குச் சென்றேன். திரையுலகப் பிரமுகர்கள் நிறையக் கூடியிருந்தனர். என்னைப் பார்த்ததும் கமல் என் அருகே வந்து, என் தோளில் கைவைத்து அணைத்தபடி, அப்பாவின் உடல் அருகே அழைத்துச் சென்றார்.

"நான் சக்தி வந்துருக்கேன்!" என்று கத்தினேன். அதைக் கேட்கிற நிலையில் அத்தி இல்லை.

மறுநாள்.... உறவினர்களும், திரையுலகப் பிரமுகர்களும் திரளாகக் கூடியிருந்தனர். இறுதிச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. சந்தனக் கட்டைகளை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி, நெருங்கிய உறவினர்கள் ஒவ்வொருவராக அத்தியின் உடல் மீது வைத்துக் கொண்டிருந்தார்கள்.

### "சொந்தக் காரர்கள்"

உடல் அருகே நின்று கொண்டிருந்த கமல், கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த என்னை நோக்கி கையசைக்க, வேறு யாரையோ கூப்பிடுவதாக நினைத்து நானும், பாரதிராஜா, சந்தானபாரதி



என்னுடைய படங்களைப் பார்த்துவிட்டு, என்னைப் பாராட்டிய நிகழ்ச்சிகள், குறிப்பாக 'கூட்டுப்புழுக்கள்' படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்ததும், ஒரு தந்தைக்குரிய பெருமிதத்தோடு என்னை அருகில் அழைத்து, தட்டிக் கொடுத்து, "தமிழ் சினிமாவுல உன் பாதையே தனி. மத்தவங்களைப் பத்தி நீ கவலைப்படாதே. உன் காலிபரே வேற!" என்று என்னை உற்சாகப் படுத்திய அந்த தந்தையின் நினைவு என் நெஞ்சை அழுத்தியது.

பரமக்குடியில் உள்ள என் நண்பன் வேலு மூலமாக எனக்கு நடந்த மிகப் பெரிய பாராட்டு விழாவில் அவர் பேசும் போது, சொன்னது என் நினைவுக்கு வந்தது.

அவர் சொன்னார். "இந்த விழாவை ஏற்பாடு செய்தவர்கள், இந்த நிகழ்ச்சிக்கு நான்தான் தலைமை தாங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள். நான் மறுத்துவிட்டேன். அவர்களுக்குக் கொஞ்சம் வருத்தமாகக்கூட இருந்திருக்கக்கூடும். நான் மறுத்ததற்கான காரணம் அவர்களுக்குத் தெரியாது. அதை இப்போது சொல்கிறேன்.

நமது ஊரைச் சேர்ந்த ஒரு இயக்குநருக்குப் பாராட்டு விழா. அதனால் நமது ஊரைச் சேர்ந்த பிரபல நடிகர் கமலஹாசனின் தந்தை தலைமை தாங்க வேண்டும் என்பது அவர்களது எண்ணமாக இருக்கலாம்.

போன்றவர்களும் எங்களுக்குப் பின்னால் யார் நிற்கிறார்கள் என்று திரும்பிப் பார்த்தோம்.

மறுபடியும் என்னை நோக்கி, '"உங்களைத்தான், வாங்க!" என்று சொல்ல, பக்கத்திலே இருந்தவர்கள் "உங்களைத்தான் கூப்பிடுறாரு!" என்றார்கள்.

நான் அருகில் போனதும், என் கையில் ஒரு சில சந்தனக் கட்டைத் துண்டுகளைக் கொடுத்து, "வைங்க!" என்றார்.

நான் வைக்க முயற்சிக்கும் போது, சடங்குகள் நடத்திக் கொண்டிருந்த பிராமணர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. என்னைப் பார்த்தபடியே "சொந்தக்காரங்க மட்டும் வச்சா போதும்,!" என்றார்.

கமல் பல்லைக் கடித்தபடி, "அவரும் சொந்தக்காரர்தான். நீங்க வைங் கண்ணே" என்றார் ஆவேசமாக.

பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஆச்சரியம். என்னைப் பொறுத்தவரை இது இந்தப் பிறவியில் ஏற்பட்ட நட்பல்ல. பிறவிகளில் நம்பிக்கை இல்லாத கமலுக்கும் சேர்த்துச் சொல்லுகிறேன்... ஏற்கனவே இருந்த உறவின் தொடர்ச்சி; அது இந்தப் பிறவியிலும் முற்றுப் பெறப் போவதில்லை என்பதற்கு அத்தாட்சி.

(அனுபவங்கள் தொடரும்)

**ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்-1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.**

# வீரன் தான் பிரீன் 22

சிறையில் கொலை, களவு செய்த குற்றவாளியைப் போல் அவரை மிகவும் கேவலமாக நடத்தி வந்தனர். அவரை விடுதலை செய்து வெளியே கொண்டுவருவதற்காகத்தான் லூகாஸ் கைது செய்யப்பட்டார். லியாம் லிஞ்ச் லூகாஸைப் பிடித்து வைத்துக் கொண்டு தங்களுடைய அன்ரான பார்ட்டனை விடுதலை செய்தால்தான் அவரை விடுதலை செய்ய முடியும் என்று சர்க்காருக்கு அறிவிக்கலாம் என்று கருதியிருந்தார்.

லிஞ்ச் தம்முடைய கைதிகள் மூவரையும் அழைத்துக் கொண்டு செல்லும் பொழுது அவர்கள் அரபி பாஷையில் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் லிஞ்சையும் அவருடைய தொண்டர்களையும் திடீரென்று எதிர்த்துப் போராடித் தப்பிவிட வேண்டுமென்றே இரகசியமாகப் பேசிக் கொண்டனர்.

சில நிமிஷங்களுக்குள் அவர்கள் பேசியபடியே தொண்டர்கள் மீது பாய்ந்தனர். இரு கட்சியாருக்கும் போராட்டம் முற்றியது. கலனல்டான் போர்டுக்குக் காயம்பட்டது. தொண்டர்களே வெற்றி பெற்றனர். அதன் மேல் லிஞ்ச் காயமடைந்த கலனையும், டிரெல்லையும் கௌரவமாக விடுதலை செய்து, பெர்மாயிலிருந்த பட்டாளப்படை வீடுகளுக்குப் போகும்படி அவர்களை ஒரு காரில் அனுப்பி வைத்தார். லூகாஸை மட்டும் கைதியாக வைத்துக் கொண்டு பந்தோபஸ்தான ஓரிடத்தில் அவரையடைத்து வைக்கும்படி அனுப்பினார்.

இரு தளகர்த்தாக்களை விடுதலை செய்ததிலிருந்து லிஞ்சின் தாராள சிந்தையும் தொண்டர்களுடைய கண்ணியமும் விளங்குகின்றன. ஆனால் இந்த உதவிக்குப் பட்டாளத்தார் என்ன கைம்மாறு செய்தனர்? மறுநாள் இரவில் பெர்மாய் நகரையே தீவைத்து எரித்தனர்! லியாம் லிஞ்ச் வெற்றியடைந்து விட்டார் என்ற கோபமே இதற்கெல்லாம் காரணம்.

ஜெனரல் லூகாஸ் கண்ணியமான போர் வீரர். அவர் தொண்டர்களிடம் ஐந்து வாரம் கைதியாயிருந்தார். தொண்டர்கள் அவரை மிக்க மரியாதையாக நடத்தி வந்து வேண்டிய உணவு, உடை முதலிய சௌகரியங்களும் செய்து கொடுத்தனர். அவருடைய பந்துக்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதுவதற்கு வசதிகள் அளித்தனர். லூகாஸ் பின்னால் தப்பியோடிய காலத்திலும் தொண்டர்களுடைய உதவிகளை நன்றியறிதலுடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கடைசியாக அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்த இடம் கீழ் லிமெரிக்கிலிருந்த ஒரு வீடு. ஜூலை மாதம் முதல் இரவு அவர் மிகவும் சாமர்த்தியமாக அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இந்த விஷயம் முக்கியமான தொண்டர்களுக்கெல்லாம் பத்திரிகையைப் பார்த்த பின்பே தெரிய வந்தது.

ஜூலை மாதம் 30ம் திகதி ஸீன்டிரீஸி, தான் பிரீன் முதலானவர்கள் லிமெரிக் நகருக்கும் திப்பெரரிக்கும் மத்தியிலுள்ள ரஸ்தாவில் ஆயுதபாணிகளாகக் காத்துக் கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் தொண்டர்கள் சர்க்காருக்கு மிகுந்த தொந்தரவு கொடுத்து வந்தனர். ரயில்களையும் தபால்களைக் கொண்டு செல்லும் கார்களையும் அவர்கள் மறித்து நிறுத்தினார்கள். அவற்றிலிருந்த கடிதங்களையும், பட்டாளத்தாரின் இரகசிய தஸ்தாவேஜுகளையும் கைப்பற்றி வந்தனர். இதனால் அவர்களுக்கு எதிரிகளுடைய நடவடிக்கைகளை முன் கூட்டியே தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆங்காங்கேயிருந்த ஒற்றர்களில் எவர்கள் மிகவும் அயோக்கியர்கள் என்பதை அறிந்து கொண்டு அவர்களைத் தண்டிப்பதற்கும் அரசாங்கக் கடிதங்கள் உபயோகமாயிருந்தன. சர்க்கார் தொண்டர்களுடைய தொல்லை பொறுக்கமாட்டாமல் தபாலைக் கொண்டு செல்லும் கார்களுடன் பட்டாளங்களையும் பாதுகாப்புக்காக அனுப்பிவர ஆரம்பித்தது.

லிமெரிக் வீதியில் இத்தகைய பட்டாளம் ஒன்று தபால் பாதுகாப்புக்காக வந்து கொண்டிருந்ததால் அதை எதிர்த்துப் போராடவே தொண்டர்கள் மேலே கூறிய முறையில் மறைவாகக் காத்துக் கொண்டு நின்றனர். அவர்கள் நின்ற இடம் ஊலா கிராமத்திலிருந்து அரை மைல் தூரத்திலிருந்தது அங்கிருந்து திப்பெரரி ஆறு மைல்; லிமெரிக் பதினைந்து மைல்; ஸோலோஹெட்பக் நான்கு மைல். இவ்விடங்களைச் சுற்றிலும் சமவெளிகள் இருந்தமையால் தப்பியோடுவதற்குப் போதிய சௌகரியங்கள் இருந்தன.

இராணுவக் கார் காலை 10.30 மணிக்கு வரக்கூடும் என்று தொண்டர்கள் எதிர்பார்த்து, அதற்கு முன்னதாகவே சென்று ஒரு பெரியமரத்தை வெட்டி அதனால் ரஸ்தா வீதியை அடைந்து விட்டுப் புதர்களில் மறைந்திருந்தனர். ஊலாவில் ஒரு பீலர் படையும் அதற்கு இரண்டு மைலுக்கு அப்பால் லிமெரிக் சந்திப்பில் ஒரு பீலர் படையும் இருந்தன. ஆதலால் எந்த நிமிஷத்தில் என்ன நேருமென்று தெரியாமலிருந்தது.

குறித்த நேரத்தில் பட்டாளத்தாருடைய கார் மிக வேகமாக ஓடிவந்தது. தொண்டர்கள் அதைக் குறிவைத்துச் சுட்டனர். உடனே காருக்குள்ளேயிருந்த சிப்பாய்கள் அனைவரும் கீழே குதித்து மறைவாக நின்று கொண்டு பதிலுக்குச் சுட ஆரம்பித்தனர்.

அதுவரை அமைதியாயிருந்த அந்த நாட்டுப் புறத்தில் திடீரென்று குண்டுகள் இடி இடித் தது போல முழங்க ஆரம்பித்தன. முதல் நிமிடத்திலேயே இரண்டு ஆங்கிலேயர்கள் குண்டுபட்டுத் தங்கள் துப்பாக்கிகளை எறிந்து விட்டுக் கீழே சாய்ந்து மடிந்தனர்.

பட்டாளத்தார் தொண்டர்களுடைய குண்டு வந்த திசையைப் பார்த்துச் சுட்டுக் கொண்டேயிருந்தனர். தொண்டர்கள் மொத்தம் பத்துப் பேரேயிருந்தனர்; அவர்கள் ஒவ்வொருவரிடமும் பத்துமுறை சுடுவதற்குத்தான் மருந்து இருந்தது. அந்நிலையில் திடீரென்று லிமெரிக் பக்கத்திலிருந்து மற்றொரு இராணுவக் காரும் வந்துகொண்டிருந்ததை அவர்கள் கண்ணுற்றனர். இவ்வாறு ஏற்படுமென்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை தற்செயலாக எதிரிகளுக்கு உதவியாட்கள் வந்துவிட்டனர்! தொண்டர்கள் திகைத்தனர். அவர்கள் பின்வாங்கி மெதுவாக வேறிடத்திற்குச் சென்றுவிடத் தீர்மானித்துப் புறப்பட்டனர்.


தொண்டர் மறையும் பொழுதும் சிப்பாய்களைப் பார்த்துச் சுட்டுக் கொண்டே பின்வாங்கி வந்தனர். அந்தநேரத்தில் சிப்பாய்களுக்கு உதவியாக ஊலாவிலிருந்தும் ஆறு

**தமிழில் ப.ராமஸ்வாமி**

பீலர்கள் வந்து கொண்டிருந்தனர். தொண்டர்களிடமும் போதிய குண்டுகளிருந்திருந்தால் அவர்கள் ஊலா பொலிஸ் நிலையப் பக்கமாகச் சிலரை அனுப்பிச் சுடச்சொல்லியிருப்பார்கள். குண்டோசை கேட்டால் பீலர்களின் எவனும் சிப்பாய்களின் உதவிக்காக வெளியே வந்திருக்கமாட்டான். அதற்கும் வழியில்லாமற் போயிற்று.

எனவே அவர்கள் யாருக்கும் காயப்படாமலும் உயிர்ச் சேதமில்லாமலும் போராட்டத்தில் இருந்து விலகிச் சென்று மறைந்துவிட்டனர். எதிரிகளில் மூவர் இறந்தனர்; மற்றும் மூவர் காயமடைந்தனர்.

அங்கு போராடிய சிப்பாய்களுடன் ஜெனரல் லூகாஸும் நின்று கொண்டிருந்தார். இவ் விஷயம் தொண்டர்களுக்கு மறுநாள் காலையில் தான் தெரிய வந்தது. அவர் 29ம் திகதி இரவே தப்பியோடி பல வயல்களையும் மைதானங்களையும் தாண்டி தொண்டர்களுடைய கையில் சிக்காமல், மிக்க எச்சரிக்கையுடன் மறைவாக லிமெரிக் வீதிக்கு வந்து சேர்ந்தார். அதன் வழியே நடந்து செல்லுகையில் தற்செயலாய் அங்கு வந்துகொண்டிருந்த இராணுவக் கார் அவரைக் கண்டது. அதிலிருந்த சிப்பாய்கள் அவரைக் காரில் ஏற்றிக்கொண்டு வந்தனர்.



தொண்டர்கள் சண்டையின்போது அவரை அடையாளம் கண்டு பிடிக்கவில்லை, மறுநாள் பத்திரிகைகளில் 'ஜெனரலை மீண்டும் பிடிக்க முயற்சி' என்று பெரிய எழுத்துகளில் செய்தி வந்த பின்பே அவர்களுக்கு லூகாஸ் தப்பியோடிய விபரம் தெரியவந்தது. அவர்கள் சிப்பாய்களை வழி மறித்துப் போராடச் சென்றிருந்த போதிலும் பத்திரிகைகள் லூகாஸை மீண்டும் பிடிக்கவே அவர்கள் போராடியதாகக் கற்பனை செய்து எழுதின.

ஊலாச் சண்டை நடந்து சில தினங்களுக்குப் பின்பு தான் பிரீன் டப்ளினுக்குச் சென்று பாக்கியிருந்த பல சில்லறையான வேலைகளை முடித்து விட்டான். ரீயர்கிராஸ் படை வீடுகளைத் தாக்கிய பொழுது அவனுடைய உடம்பில் தைத்திருந்த வெடிகுண்டுகளின் கண்ணாடித் துண்டுகளையும் ஆணிகளையும் எடுத்தெறிந்து உடம்பைக் குணப்படுத்திக் கொள்வதற்கு அவனுக்குத் தக்க சந்தர்ப்பம் கிடைத்தால்; அவன் அதை உபயோகித்துக் கொண்டான்.

மேற்சொன்ன சம்பவங்கள் நடந்தது 1920 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில். அக் காலத்தில் தேசியப் போராட்டம் நாளுக்கு நாள் வலுத்து வந்தது. மக்கள் கடைசியி வரை போராடியே தீர வேண்டும் என்று உறுதி கொண்டனர். 'பிளாக் அண்டு டான்' பட்டாளத்தாருடைய கொடுமைகள் சகிக்க முடியாமல் இருந்தன. அவர்கள் வீடுகளையும். தெருக்களையும் பயிர்களையும் கொளுத்திப் பல உயிர்களையும் வதைத்து வந்தார்கள். அரசியல்வாதிகளைக் கைதுசெய்து கொண்டு போகும் பொழுது சுட்டுத்தள்ளி வந்தனர். நித்திரை செய்து கொண்டிருந்த மக்கள் துப்பாக்கிகளுக்குப் பலியாகி வந்தனர். யாருக்கும் உயிரும், சொத்தும் உரிமையாக இருக்கவில்லை.

ஆதலால் மக்கள் ஒன்றும் செய்யாமல் வீடுகளிலிருந்து மடிவதைக் காட்டிலும் புரட்சிப்படையிலே சேர்ந்து வீரமரணம் அடைவது மேலென்று கருதினார்கள் அவர்கள் தொண்டர்களுக்கு உணவும் உடையும் கொடுத்ததோடு அவசியமான செய்திகளையும் துப்புக்களையும் அறிந்து கூறி உதவி செய்து வந்தார்கள்.

ஆங்கிலப் பட்டாளத்தார் அயர்லாந்தில் எத்தனை கோடி பவுண் பெறுமானமுள்ள சொத்துக்களை அழித்தனர் என்பதையும் எத்தனை ஆயிரம் உயிர்களைப் பலிவாங்கினர் என்பதையும் பிற்காலச் சரித்திராசிரியர்களே கணக்கிட்டுக் கூற முடியும்.

இந்தக் கொடுமைகளைச் செய்து வந்த 'பிளாக் அன்டு டான்' பட்டாளத்தாரிற் பலர் பின்னால் தாங்கள் செய்த கொடுமைகளை மறக்க முடியாமற் பைத்தியம் பிடித்து அலைந்தனர். தற்கொலை செய்து கொண்டு மடிந்தனர் என்றால் ஐரீஷ் மக்கள் அந்தப் பாதகர்களிடம் எவ்வளவு துன்பப்பட்டிருப்பார்கள் என்பதை நாமே யூகித்துக் கொள்ளலாம்.

அதேசமயத்தில் தொண்டர்கள் படையும் வலிமையடைந்து தீரமான பட்டாளமாகி விட்டது.

(பயணம் ...தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 47**

# அரங்கம் அந்தரங்கம்

**கவியரசு கண்ணதாசன்**

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

"என்ன யோசிக்கிறீர்கள்...?" என்று கேட்டாள் லலிதா.

"ஒன்றுமில்லை...!" என்ற இந்திரகுமாரின் கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்தது.

"ஐயைய்யோ! அழாதீர்கள், நான் இருக்கிறேன்; அழாதீர்கள்!" என்று அவர் கண்ணீரை முந்தானையால் துடைத்துவிட்ட லலிதா, அவர் கன்னத்தோடு கன்னம் வைத்து, "ஏதாவது சொல்லலாம் என்றால் என்னிடம் சொல்லுங்கள்!" என்றாள்.

"வாழ்க்கையிலே நான் படுதோல்வி அடைந்தவன். புனிதமான என்னுடைய காதலும் தோல்வி; கல்யாணமும் தோல்வி. அதனால்தான் மலபார் ஹில்லுக்கு நான் அடிக்கடி வருவது. நல்ல குடும்பப் பெண்களைப் பார்க்கும் போதெல்லாம், நமக்கு இப்படி அமையவில்லையே என்ற ஆதங்கம் மிக அதிகம். அதனால் ஒவ்வொரு இரவும் ஒவ்வொரு வகையான பெண்ணை நான் சந்திக்கிறேன். ஆனால் யாரிடமும் உன்னிடம் ஏற்பட்டது போன்ற அன்பு ஏற்பட்டதில்லை!" என்றார் இந்திரகுமார்.

"நீங்கள் விரும்பினால் நான் உங்கள் கூடவே இருந்து விடுகிறேன்!" என்று உடனேயே சொல்லி விட்டாள் லலிதா.

சினிமா நடிகைகள் சினிமாவில் நடித்து முன்னேறிய பிறகுதான் முதல் கணவனைக் கைவிட்டு விட்டு இரண்டாவது கணவனோடு போவார்கள். லலிதாவோ புதுமுகமாக அறிமுகமாவதற்கு முன்னாலேயே அதற்குத் தயாராகி விட்டாள்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன்!" என இந்திரகுமாரும் பதில் சொன்னார்.

லலிதா அவர் மடியிலே சாய்ந்தாள்.

இப்போது அவள் தான் ஒரு பெரிய நடிகனோடு குடும்ப வாழ்க்கை நடத்தப் போவது பற்றிக் கற்பனை செய்யவில்லை. மாறாக ஸ்டூடியோ, அவுட்டோர், காதல் டூயட், பத்திரிகை பேட்டிகள் என்று அவளது சிந்தனை பறந்தது. அவள் மிகவும் நேசித்த குமாரசாமி அவள் கண்களுக்கு ஒரு தூசு போலத் தோன்றினான்.

அவள் தலையைக் கோதிக் கொடுத்தபடி குடித்துக் கொண்டே இருந்த இந்திரகுமார் மனைவியைப் போல் அவளை நடத்தத் தொடங்கினார்.

அந்த மயக்கத்தில் அவர்கள் இருவரும் கதவைத் தாள் போட மறந்து விட்டார்கள்.

"ஐயாம் சாரி!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தார் கமல்.

அவர் தெரியாமல் நுழைந்தவரல்ல; தெரிந்தே நுழைந்தவர்! இந்த மாதிரி நேரங்களில் நுழைந்தே பழக்கப்பட்டவர்!

"இந்த நேரத்தில் பிடித்தால்தான் இருவரும் தனக்கு எந்த நாளிலும் பயப்படுவார்கள்' என்று கருதித்தான் உள்ளே நுழைந்தார்.

லலிதாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "நாகரிகம் தெரியாத ஜென்மம்!" என்று கறுவிக் கொண்டாள்.

'ஹூ ஆர் யூ ராஸ்கல்!' என்று கத்தினார் இந்திரகுமார்.

"பிளீஸ் டோன்ட் யூஸ் தட் வேர்ட்! நான் வந்தது தப்புதான். என்னைப் பற்றி உங்களுக்கு லலிதா சொல்லவில்லை போலிருக்கிறது. நான் சென்னையில் ஒரு போலீஸ் அதிகாரி. லலிதாவின் மைத்துனர் நாராயணசாமி குடும்பத்திற்கு வேண்டியவன். சில விஷயங்களைக் கேள்விப்பட்டுத்தான் என்னை இங்கே அனுப்பினார்கள். குமாரசாமி எங்கே போனார் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் யார் என்பதும் எனக்குத் தெரியும். நான் வந்த வேலையை உடனே செய்யத் தொடங்கினால் நீங்கள் சிரமப்படுவீர்கள். உங்களைப் பார்த்த பிற்பாடு உங்களைப் பிரிக்க வேண்டாம் என்றுதான் நினைக்கிறேன்!" என்றார் கமல்.

அவர் பெரிய பெரிய விஷயங்களை எல்லாம் சொல்வதைப் பார்த்து, ஒரு பெரிய சதுரங்க விளையாட்டில் லலிதா சிக்கி இருப்பதுபோல் இந்திரகுமாருக்குத் தோன்றிற்று.

தன் வார்த்தைக்கு அவர் வருத்தம் தெரிவித்து கமலை உட்கார வைத்தார்.

லலிதாவால் பேச முடியவில்லை.

இவருக்குப் பதவி போய் விட்டதென்றோ, இவரை நாராயணசாமி அனுப்பி இருக்க முடியாதென்றோ, எதையும் சொல்ல முடியாதவளாக அவள் இருந்தாள்.

உடனே கமல், லலிதாவைப் புகழ ஆரம்பித்தார்.

"தமிழ்நாட்டிலேயே



இப்படி ஒரு பெண்ணை நீங்கள் பார்க்க முடியாது" என்று ஆரம்பித்துத் தன் கற்பனைத் திறன் முழுவதையும் அடுக்கினார்.

அதிலே லலிதாவும் பரவசப்பட்டுவிட்டாள்.

கமலுக்கும் அவள் விஸ்கி பரிமாற ஆரம்பித்தாள்.

இருவரையும் அவர் புகழவேண்டிய அளவுக்கு புகழ்ந்ததும், "நான் ஒரு யோசனை சொல்லட்டுமா...?" என்றார் இந்திரகுமார்.

"ஓ எஸ்!" என்றார் கமல்.

"இனிமேல் நீங்களும் உங்கள் மனைவியும்தான் லலிதாவுக்கு கார்டியன்" என்றார் இந்திரகுமார்.

"ஐயையோ! இதென்ன இவ்வளவு பெரிய பதவி...?" என்று கூச்சப்பட்டவர் போல் நடித்தார் கமல்.

"முடியவே முடியாது! உங்களுக்கு ஒரு தனிக் க்ார், தனி பங்களா..." என்று உளறியபடியே கமலின் காலைத் தொட்டு லலிதாவை வணங்கச் சொன்னார் இந்திரகுமார்.

"யசோதா!" என்று கூப்பிட்டார் கமல்.

அவளும் வந்தாள்.

இருவர் காலிலும் விழுந்தாள் லலிதா.

"எழுந்திரு மகளே!" என்று அவளை அன்போடு தூக்கினார் கமல்.

(அந்தரங்கம் வரும்)

# பொட்டு

மீண்டும் ஒரு தடவை கண்ணாடியைப் பார்த்துக் கொண்டேன். குழம்பியுள்ள மீசையை வாரிவிட்டேன். எனக்கு அழகை கொடுப்பதே மீசைதான் என்று முன்னர் ஒருத்தி சொன்ன ஞாபகம். இப்போ எல்லாம் சரி. அவசரமாக பஸ்தரிப்பை நோக்கி ஓடினேன். நேரம் காலை 7.15 நிமிடம். இப்போது அவள் வந்து இருப்பாள். நிறம் கொஞ்சம் குறைவானாலும் அவள் ஓர் அழகிதான். கொஞ்ச நாட்களாகவே பஸ்தரிப்பில் சந்தித்துக் கொள்வோம்.

நான் அவள் கண்களை நோக்கும்



போதெல்லாம் தன் பார்வையை வேறுபக்கம் திருப்பிக்கொள்வாள். நான் பார்க்காதபோது என்னைப்பார்ப்பாள். சிலவேளை இருவரின் பார்வையும் சந்தித்துக் கொள்ளும். அப்போதெல்லாம் என் உடலில் ஏதோ ஒரு வித இரசாயன மாற்றம் நிகழும், சுகமாக இருக்கும். அதேவேளை அவள் மனதில் அந்த மூன்றெழுத்து தோன்றி விட்டது? என்பதை அவள் கண்களே எனக்கு உணர்த்தியன. சரி இது இன்னும் எத்தனை நாளைக்கு? எப்படியாவது அவளோடு பேசி விட வேண்டும் என்று நினைத்ததில் இருந்து சில தினங்களாகவே அவளைப் பார்க்க முடியவில்லை. என்னுடைய நாட்கள் மாட்டு வண்டிவேகத்தில் நகர்ந்தன.

சிலதினங்களுக்கு பின்னர் அன்று பஸ்தரிப்பில் அவள் நின்றாள். எனக்கு தலைகால் புரியாத சந்தோசம். ஆனால் அது ஒருவினாடிதான். அப்போது தான் அவதானித்தேன் அவளின் அந்தமாற்றத்தை. அந்தக்கணத்தில் என் இதயம் ஒரு தடவை விட்டு, இயங்கி கொண்டது. உள்ளத்தில் ஒரு சோர்வு.

ஆம்! அவளின் நெற்றியில் இருந்த அந்த கறுத்தப் பொட்டு, சிவப்பாக மாறி இருந்தது. "சீ" முகத்தைத் திருப்பிக் கொண்டேன். இதைப்பற்றி கரணிடம் கூட கேட்டுப் பார்த்தேன். "திருமணம் முடித்தவர்கள் அல்லது நிச்சயிக்கப்பட்டவர்கள்தான் சிவப்புப் பொட்டு வைத்துக்கொள்ளுவார்கள். நீ இவளை விடு மச்சான். வேறை ஆளைப் பார்த்துக் கொள்!" என்றான். இதென்ன குதிரைபிடிக்கும் சமாசாரமா? அடிக்கடி மாற்றிக்கொள்ள? சீ எத்தனை நாள் தாமதத்துக்காக மனேஜரிடம் பேச்சுவாங்கி இருப்பேன். இந்தபெண்களையே நம்பக் கூடாது. முதல்லை கண்ணைக்காட்டி மூக்கை காட்டி எங்களை தூண்டிவிடுகினம். பிறகு ஆ- ஐயோ எனக்கொண்டும் தெரியாது என்று நழுவி விடுவினம்.' என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

ஆனால் இதன் பிறகு கூட அவள் என்னைப் பார்த்து சிரிப்பதற்கு தவறுவதே இல்லை. எனக்கு கோபமாக இருந்தது. என்னுடைய அந்த மாற்றத்தை அவள் புரிந்து இருக்க வேண்டும். என்னை நோக்கி வந்தாள். என்பெயரை, என் மனதை, என் வரலாற்றையே சொன்னாள். அதோடு தன்னைப் பற்றி சொன்னா. "உங்களை நான் விரும்புகிறேன்!" என்றாள். எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. என் உள்ளங்கையை கிள்ளிப் பார்த்தேன். எதுவுமே எனக்குப் புரியவில்லை. மேல் நெற்றியைப்பார்த்தேன். சிவத்தப் பொட்டு! அவளுக்கு என் சந்தேகம் புரிந்து இருக்க வேண்டும். "ஓ நீங்கள் பொட்டைப் பற்றியா யோசிக்கிறீங்கள்?" சிரித்தாள். "இதெல்லாம் சில பாதுகாப்பு கெடுபிடிகளை தவிர்க்கிறதற்காகவும், ஒரு சுய பாதுகாப்புக்காகவும் தான்; சிலர் பொட்டே வைக்கிறேல்லை. வேறை சிலர் கலரை மாற்றி வைைக் கினம். அவ்வளவுதான். இதைப் பெரிசாக எடுத்திட்டியள் போலை! சரி உங்களுக்காக வேணும் எண்டால் நான் கறுத்தப் பொட்டை போடட்டுமா?" என கேட்டாள். நான் "வேண்டாம்!" என தலை அசைத்தேன். என்கால்கள் நிலத்தில் இல்லை. காற்றிலேயே அலுவலகம் போய் சேர்ந்தேன்.

"அட கடவுளே! கலாசாரத்துக்காக பொட்டு என்ற நிலை போய், இப்பெல்லாம் பாதுகாப்புக்காக என்ற நிலைமைக்கு வந்திட்டமே! எங்கடை நிலையை யோசிக்க சிரிப்பாய் இருக்கு. எனி மேல் பொட்டுன்ரை கலரைப் பார்த்து ஏமாறகூடாது என நினைத்துக் கொண்டேன்.

**இனுவில் உத்திரன்**

# மாற்றம்

அடிமனசின் ஆழத்திலிருந்து இதனை எழுதுகிறேன். ஒரு சுகமான நாளுக்காய் சுற்றித் திரியும் வாலிபத்தின் நினைவிது. எத்தனை கோடி ரூபாய்கள் மடியிலிருந்தாலும் மனசில் சுகமில்லை என்றால் பணம் பந்திக்கு மட்டுமே சரிப்பட்டு வரும்.

சரி இனி கதைக்கு வருகிறேன். இது ஒரு காதல் கதைதான். அரைக் கிணறு தாண்டும்போது லேசாய் கயிறு அறப் பாக்குமே! அப்படிப்பட்ட கதை.

மனசுகளால் மட்டும் காதலித்து காதலெனும் வீதியிலே கைகோர்க்கத் துடிக்கும் இதயங்களின் கதை.

சிவா கிராமத்திலிருந்து வந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. கொழும்பு வாழ்க்கை அவ்வளவாகப் பிடித்துவிடவில்லை. ஆனாலும் தொழில் நிமித்தம் இருந்தே ஆக வேண்டும். அவனது குணத்துக்கும், படிப்புக்கும் ஏற்றது போலவே தொழிலும் அமைந்திருந்தது.

என்னால் உண்மையாகவே நம்ப முடியவில்லை, சிவாவிற்கும் ரோஷினிக்கும் எவ்வாறு காதல் மலர்ந்ததென்று. நான்கு வருட புனிதமான காதல். எந்த மாசும் படிந்திடாமல் மலர்ந்திருப்பது அன்புக் குரியதுதான். ஆனால் இன்று ஏற்பட்டுள்ள மன இடைஞ்சல்களால் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் ஏக்கம் என்னைத் தவிர வேறு யாருக்குத் தெரியாது.

வெள்ளவத்தை காலி வீதியால் நாங்களிருவரும் நடந்து வந்து கொண்டிருந்தோம். ஞாயிற்றுக்கிழமை நாளில் எங்கேயாவது சுற்றுவது வழக்கம். அந்த அந்திநேர மென்மஞ்சள் வெயில் லேசாய் எமதுடல்களில் பட்டு இதமளித்தது.

அது ஆராதனைக்குரிய நேரமாக இருக்கலாம். எங்களைக் கடந்து ஆடம்பரமான ஏசி வாகனம் கிறிஸ்தவ கோயிலுக்குள் செல்ல வாசலுக்குள் வரும்போது தெய்வாதீனமாக நான்தான் உள்ளுக்குள் இருப்போரை எட்டிப் பார்த்தேன். உள்ளே ரோஷினி இருந்து கொண்டிருந்தாள். எங்களைக் கண்டு கொண்டதுதான் தாமதம் முகத்தை கண்டும் காணாததுபோல் மறுப் பக்கத்துக்கு திருப்பிக் கொண்டாள். சிவாவிற்கு அப்போது ஏற்பட்டிருக்கும் கோபத்தையும் கவலையையும் என்னாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை. வாகனம் உள்ளே சென்றது. நாங்கள் வாசலிலேயே நின்றோம். பிச்சைக்காரர்கள்கூட ஒரு மாதிரியாகப் பார்க்கத் தொடங்கினர்.

சிவா தன்னுடைய செல்லிட தொலைபேசியில் அவசரமாய் அவளுடைய இலக்கத்துக்கு தொடர்பை ஏற்படுத்த முயற்சிக்கும்போதே, சடாரென பறித்தெடுத்த நான் அவனை சமாதானப்படுத்தி அவனது விடுதிக்கு அழைத்துச் சென்றேன்.

என்னுடைய மனத்தையே யாரோ கிழித்து விட்டு தைப்பதுபோல் மன உழைச்சல் காணும்போது, என் அருமை நண்பனின் நிலை எப்படி இருக்கும்? என்பதை நினைக்கையில் என்னாலேயே என்னை சமாதானமாக்கி கொள்ள முடியவில்லை. மதம் என்ற வேறுபாடு இருந்தாலும் இருவர் உள்ளங்களும் இணைந்தாலும் சிவா முன்னர் தன்னுடைய காதலைப் பற்றி எனக்கு சொல்லுகின்ற போதெல்லாம் அவனது நிறுவனத்தின் முதலாளியின் மகளின் காதல் எப்படி கைகூடுமோ என பல தடவைகள் சிந்தித்ததுண்டு. அவர்களுக்கான காதலென்னும் ஆராதனைப் பயணத்தில் இவர்களின் ஆசனமும் அசைந்து விழுந்து விடுமோ எனவும், காலால் நடந்து திரியும் காதல் ஊன்றுகோல் தூக்க வைக்குமோ என்றெல்லாம் நான் சிந்தித்ததுண்டு.

இப்பொழுது என் சந்தேகம் மெய்ப்பட்டு விடக்கூடாதென பிரார்த்திக்கிறேன். நாங்களிருவரும் வெற்றுடல்போல் கட்டிலில் கிடந்தோம். வேதனை மனசுக்குள் புழுங்கி கொண்டிருந்தது. சில நாட்களுக்கு முதல் ரோஷினியின் செயற்பாடுகளில் மாற்றமும், வெறுப்பும் தெரிவதாகவும் இப்பொழுது பார்ப்பதும் இல்லை. நிறுவன வேலைகளைக்கூட மேற்கொள்வதற்கு வராமல் இருந்துவிட்டாள். திடீர் என்று இந்த மாற்றத்தால் தான் ஆடியே போய்விட்டதாய் சிவா முன்னர் சொன்னது எனக்குள் ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும் இந்த



மாதிரி வெறுப்புக்கு காரணம் என்னவென்பதுதான், எனக்கும் புரியாமல் இருந்தது.

எங்களுக்குள்ளே இருக்கும் மௌனத்தை முறித்து "வா சாப்பிடுவோம்!" என்றேன். "வேண்டாம் எனக்குப் பசியில்லை. நீ போய் சாப்பிட்டு விட்டு எனக்கு இரண்டு தலைவலி மாத்திரை வாங்கிக் கொண்டு வா!" என்றான். 'ஒரே சாப்பாட்டுப் பார்சலெடுத்துத் தானேடா இத்தனை வருடமாய் வயிறு நிரப்பினோம்!' அது அவனுக்கு எப்போதும் மறக்காதுதான். என் மனசுக்குள் எழுவதையும் அவனுக்கு சொல்லவும் முடியவில்லை.

சில நிமிட நேரம் மீண்டும் மௌனமாகவே இருந்துவிட்டு, அந்த அழகிய நாட்குறிப் பேட்டுக்குள்ளிருந்து ஒரு கடிதத்தை தூக்கி என் பக்கம் வீசினான். பிரிக்கும் முதலே தெரிந்தது அது அவனது எழுத்துக்கள்தான் என்று.

இரண்டு பக்க கடிதத்தை மெல்லப் பிரித்தேன்! அது ரோஷினிக்கு சிவா எழுதிய கடைசிக் கடிதமாக இருக்க வேண்டுமென உடனேயே சிந்திக்க முடிந்தது. அதை வாசிக்கின்றேன்.

*அன்புள்ள ரோஷினிக்கு!*

*சாத்தி வைத்துள்ள நம் இதயக் கதவுகளை நமது பெற்றோர் மூடிவிடுவார்களோ என அஞ்சுகிறேன். விடலைக் காலத்து துள்ளல்கள் கொண்டு விளையாடித் திரிந்த என்னை உன் அன்பென்னும் செய்கையினால் கால் கட்டுப் போட்டவள் நீ.*

*ரோஷினி! பட்டுத் தெறிக்கும் பணக்கார வாழ்வை விட்டு இந்த ஏழையின் வாசல் வர ஆயத்தமாக இரு! மற்றும் ஆடம்பரமில்லாத வாழ்வுக்கு நல்லதோர் அடித்தளமிட உன் தந்தைக்கு நம் காதல் தெரியவர ஏதாவது செய். அல்லது நானே நேரடியாக உன்னை பெண் கேட்கிறேன். அப்போது உன் தந்தை அதாவது என் முதலாளி பழைய சோறுகூட கிடைக்காமல் போகலாம் என்று சொல்லி அதட்டினாலும் நீ அசைந்து விடாதே. மதம் எங்களை ஆசீர்வதிக்க பிரார்த்தித்துக் கொள். ரோஷினி வா இந்த ஏழை மழையில் நனைவோம், ஒரு செம்புத் தண்ணீரை என் உதடுவரை உன் கைகளால் தூக்கித் தரும் நாளுக்காய் காத்திருக்கிறேன். வா! வண்ணம் மிகுந்த உள்ளத்தை வானம் போல் ஆக்கிக் கொள்வோம்.* இப்படியே இரண்டு பக்கத்திலும் கொட்டை எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. (இது கடிதத்தின் சுருக்கம்)

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட ரோஷினியின் பதிலும் அந்த கடித அடியிலேயே இருந்தது.

**உவைஸ்கனி**

அந்த வாசகம் இதுதான்...

"நான் வரச் சம்மதந்தான். நீதான் ஏமாற்றிவிட்டாய்!" என்று இருந்தது.

நான் வாயடைத்துப் போனேன். இவளின் பதிலுக்கு என்ன காரணம் என்பதை அறிய சிவாவின் செல்லிட பேசியில் ரோஷினியின் தனிப்பட்ட இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தினேன். அவளே கதைத்தாள்.

நண்பனுக்காக காரணம் கேட்டேன். சொன்னாள் இப்படி: "சென்ற திங்கள் பின்னேரம் எனது நண்பி சிவாவையும் ஓர் இளம் பெண்ணையும் நேரடியாகக் கண்டிருக்கிறாள். ஏன் இந்த இரட்டை வேடம்? என் பணம்தானே சிவாவிற்கு வேணும் எழுதித்தாறேன். பணத்துக்கு மட்டுமா நான் பாசமானேன்?" தொடர்ந்து கொண்டே போனாள் ரோஷினி.

விசயத்தை கூறி "இதற்கு காரணம் கூறடா?" என்றேன். கொஞ்ச நேரமாய் இருவரும் புதிதாய் காதலிப்பவர்கள் போல் ஏதோவெல்லாம் கதைத்தார்கள். இப்போது ஒரு பயங்கரமான சிரிப்போடு தொலைபேசி உரையாடலை நிறுத்தினான் சிவா.

நேர்முகப் பரீட்சைக்கு ஊரிலிருந்து வந்த தங்கையை, பஸ்ஸில் அன்று அழைத்துச் சென்றது இப்போதுதான் எனக்கும் தெரிய வந்தது.

நானும் சிவாவும் இப்பொழுது சாப்பாட்டு கடையை நோக்கி நடக்கிறோம் செல்லிடபேசி மீண்டும் சிணுங்கியது ரோஷினியோடு என்ன கதைக்கிறான் என்று எனக்குத் தெரியாது. ஆனால் முன்னால் சென்று கொண்டிருக்கும் என்னை தெரு விளக்கு வெளிச்சத்தில் கை காட்டி நிற்கச் சொல்வது மட்டும் நன்றாய் தெரிந்தது.

சிவாவிற்கு தலைவலி நின்றிருந்தாலும் தங்கையையும் தம்பியையும் ஏன் எங்கள் விடுதிப்பக்கமே கூட்டிவரவில்லை என்பது தான் எனக்கும் விளங்காமலிருந்தது?

# தலை எழுத்து

தூக்கம் கலைந்தபோது, துர்க்காவுக்கு உடலெங்கும் வலித்தது. படுக்கையை விட்டு எழும்ப மனமில்லாமல் போர்வையுள் தன்னைப் புதைத்துக் கிடந்தாள். இருபத்திமூன்று வயதிலேயே அவளுக்கு வாழ்க்கையில் வெறுப்புத் தட்டியது.

'பெண்ணாகப் பிறப்பதற்குப் பெரும் மாதவஞ் செய்ய வேண்டு'மென்று சொன்ன கவிஞன்மீது துர்க்காவுக்கு எரிச்சல் மூண்டது. எவ்வளவுதான் ஒரு பெண்ணுக்குப் புகழாரம் சூட்டினாலும், அவள் சுமை தாங்கிதான். சிலுவை சுமப்பவள்தான். 'பொண்ணாகப் பொறந்ததைவிட ஆணாப் பொறந்திருக்கலாம்.' துர்க்காவால் இப்படித்தான் நினைக்க முடிந்தது.

"துர்க்கா இன்னும் தூக்கமா? வேளா வேளைக்குச் சாப்பிடாட்டி உடம்பு என்னத் துக்காகும்? எழும்பி குளிச்சிட்டுச் சாப்பிடு. நேரத்தோட சந்தைக்குப் போனாத்தான் ஒணக்குப் புடிச்ச மீனா வாங்கலாம்!"

அம்மாவின் குரல் கேட்டதும், துர்க்கா போர்வையை உதைத்துத் தள்ளி விட்டு ஓடி வந்து கூடத்தில் நின்றாள்.

அவள் அம்மா நீராடி நெற்றியிலே திருநீறு பூசி, மெல்லிய வெளிர் நிறத்தில் சேலை கட்டிப் புறப்படத் தயாராக நின்றாள்.

"நீ எவ்வளவு அழகும்மா!" துர்க்கா சொன்னதைக் கேட்டதும் அம்மாவின் முகம் நாணத்தால் சிவந்தது.

"போடி பைத்தியம். நீ சீக்கிரம் குளிச்சிட்டுச் சாப்பிடு. உப்புமா பண்ணி வச்சிருக்கேன்!" சொல்லிவிட்டு வெளியேறினாள் அம்மா.

தன் அம்மா போகும் அழகை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் துர்க்கா. அம்மாவுக்கு அப்பா முற்றிலும் பொருத்தமேயில்லை.

'இப்பிடியொரு கறுப்பைக் கட்டிக்க எப்பிடி அம்மாவுக்கு மனசு வந்தது? முரட்டுத்தனமான கணவனுடன் முரண்டு பண்ணாமல் குடும்பம் நடத்த எப்பிடி அம்மாவால் முடிந்தது? இப்படி இருந்தும் அம்மாவுக்கு 'வாழாவெட்டி' என்ற பட்டம் ஏன் கிடைச்சது?' துர்க்காவின் மனசுக்குள் எத்தனையோ வினாக்கள் போராடின.

தனக்கு விபரந் தெரிந்த நாளில் இருந்து அப்பா அம்மாவோடு வாக்குவாதப்படுவதையும் சண்டை பிடிப்பதையும் கண்டிருக்கிறாள் துர்க்கா.

அம்மா பேசாமல் இருந்தால் ஏச்சு. பேசினால் அடி. அப்பா எதற்கு எப்போ கோபிப்பார் என்பது அந்தக் கடவுளுக்கே வெளிச்சம். அம்மா ஒரு பட்டதாரி. ஆனாலும் அம்மாவைப் போல அடக்கமும் பொறுமையும் உள்ள ஒருபெண்ணைக் காண்பதரிது. துர்க்கா வியந்தாள்.

அம்மா வங்கி ஒன்றில் வேலை பார்த்து வந்தாள். அப்பாவுக்குத் தனியார் கம்பனி ஒன்றில் குமாஸ்தா வேலை. அம்மா வங்கிக்குப் புறப்படுமுன், சமையல் முதல் மற்றும் வேலைகள் முடித்து என்னையும் பாடசாலையில் சேர்த்து விடுவாள்.

வேலை விட்டு வந்து இரவு உணவு எல்லாம் தயார் பண்ணிவிட்டு அப்பாவுக்காகக் காத்திருப்பாள் அன்போடு.

"ஏண்டி இன்னிக்கி வங்கியில் எவனோட கொண்டாட்டம்?" அப்பாவை எதிர்கொள்ளக் காத்திருக்கும் அம்மாவிடம் அப்பாவின் ஏளனம். அம்மாவின் மௌனம்..

"ஏண்டி நா கேட்டா பேச்சு வரல. அப்போ என்னமோ விஷயம் இருக்கு"?



அம்மாவின் மௌனம் கலைகிறது.

"என்னங்க. சின்னப்பிள்ள மாதிரி? துர்க்கா வளர்ந்த பொண்ணு. அவ காதில விழறாப்பல அசிங்கமாப் பேசாதீங்க பிளீஸ். என் மனசில உங்களத் தவிர வேறு யாருமில்ல. எனக்குத் தெரிஞ்ச உலகம் நீங்களும் துர்க்காவுந்தான்."

"உன்னோட அழகில மயங்கியிருப்பானுகளே!"

"அழகில என்னங்க இருக்கு? இது நிரந்தரமானதா? நாம பழகுற விதத்திலதான்..."

அம்மா வசனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமுன் அப்பாவின் கை ஓங்கி இருக்க வேண்டும். அம்மாவின் விம்மல் மெல்லிதாய்க் கேட்டு ஓய்ந்தது.

மீண்டும் புன்னகையுடன் நடமாடும் அம்மாவைப் பார்க்க துர்க்காவுக்கு ஆச்சரியமாயிருந்தது.

ஒருநாள் ஞாயிறு...

அப்பா, அம்மா நான் மூவரும் வீட்டில் தேனீர் அருந்திக் கொண்டிருந்த சமயம்.. வாசல் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அப்பா விரைந்து சென்று கதவைத் திறந்தார்.

"மிஸிஸ் ஜானகி ராமனைக் காண வேணும்!"

"நீங்க யாரு?"

"நான் அவங்களோட வேலை பார்க்கிற சுந்தர். முக்கியமான ஒரு செய்தி பேசணும். உள்ள வரலாமா?"

"அந்த முக்கியமான செய்தியை நான் தெரிஞ்சுக்கலாமா?

"இல்ல சார். இது வங்கி விஷயம்?" சுந்தர் மெதுவாகச் சொன்னான்.

அப்பா அம்மாவின் காதில் கிசு கிசுத்தார். "ஒண்ணோட லவ்வர்-அதுதான் காதலன். அவனுக்கு உன்னப் பாக்கணுமாம். சீக்கிரம் போ, முக்கியமான செய்தியாம்!"

அம்மா வாசலை நோக்கிச் சென்ற போது, சுந்தர் வெளியே நின்று கொண்டிருந்தான்.

**ரூபராணி**

"சுந்தர் ஏன் வெளியே நிற்கிறியள். உள்ளே வரக் கூடாதா?" சுந்தர் புன்னகைத்தபடி வந்து உட்கார்ந்தான். இருவரும் உரையாடியபின் சுந்தர் சென்று விட்டான்.

அப்பா அம்மாவிடம் போர்த்தொடுத்தார். சுந்தருக்கும் அம்மாவுக்கும் முடிச்சுப் போட்டுத் தகாத வார்த்தைகளால் திட்டினார். அம்மா எவ்வளவோ சொல்லியும் அப்பா அதைக் கேட்கத் தயாரில்லை. எனக்குள் ஓர் எரிமலை வெடித்தது. அப்பாவை எதிர்த்துப் பேசிய முதல்நாள் அதுதான்.

"எதுக்காக அம்மாவைத் தினசரி திட்றீங்க? அவங்க அழகாயிருக்கிறது உங்களுக்குப் பொறுக்கலியா? இல்லாட்டி அம்மா மேல உங்களுக்குச் சந்தேகமா? உங்கள எனக்குப்பிடிக்கல".

அம்மா கத்தினாள் "துர்க்கா உள்ளபோயிடு! அப்பாவை எதிர்த்துப் பேசாத...!"

'ஒரு பெண் இப்படித்தான் இருக்க வேண்டுமோ?'

அம்மாவை நினைக்க ஒரு பக்கம் ஆத்திரமாகவும் மறுபக்கம் பரிதாபமாகவும் இருந்தது.

மறுநாள்...

அம்மாவின் சுறுசுறுப்பு எங்கோ ஓடி ஒளிந்து விட்டது. அவளின் திட்டமிட்ட வேலைகளில் திடீர்மாற்றம்.

"அம்மா நீ வேலைக்குப் போகல்லியா?"

"இல்ல துர்க்கா. நான் வேலைய ராஜினாமாப் பண்ண யோசிக்கிறன்."

அம்மாவின் குரல் தொய்ந்தது.

"ஏம்மா?" அதிர்ச்சியில் நான் உறைந்து போனேன்.

"உன் அப்பாவுக்குப் புடிக்காத எதையும் செய்து எனக்குப் பழக்கமில்லை." நறுக்கென்று பதில் சொன்னாள் அம்மா.

"பொண்டாட்டி, புருஷன்ர சொல் கேட்டு, அவன் மனங்கோணாம, நடப்பது தான் வாழ்க்கை எண்டு அம்மாவுக்குப் பாட்டி சொன்னாளே! ஆனால்... அதையும் மீறி ஏதோ ஒண்ணு இருக்கே. நான் வேதனையில் குழம்பியபோது, தொலைபேசி அலறியது.

அப்பாதான் பேசினார்.

"உன்ர அம்மாவுக்கு விடுதலை. அவ இஷ்டப்படி இஷ்டப்பட்டவனோடு வாழச் சொல் குட்பை!"

துர்க்கா சுய நினைவுக்கு வந்தபோது அம்மா சந்தையிலிருந்து சுமை சுமந்து வருகிறாள்.

# யார் தவறு?

## இலக்கிய நயம்

உலையின் மூடியைத் தள்ளி வெளியேறக் குமிழ்கள் துடிப்பதுபோல இதயம் பொங்கிப் பிரவகித்து, உடலெங்கும் சூடான இரத்தத்தைக் கொட்டிவிடுவதற்கான கொதிப்பில் இருந்தது.

வசந்தனுக்கு முடியவில்லை. மூச்சுக் காற்றினூடாக வெளியேறி வெப்பம் அவன் உடற் சூட்டைத் தணிக்கப் போதுமானதாக இருக்கவில்லை. மூளைக்குள் நெளிந்த புழுவின் சூடான ஸ்பரிசமும் மண்டையோட்டுக்குத் தெரிந்தது.

இந்த இராப்பிச்சைக்காரன் பகலிலேயே உள்ள வந்து கூவுவதின் இம்சையைப் பொறுக்கமாட்டாமல் எழுந்து நடந்தான். காற்று மேனியில் பட உலவினான்.

வாசமலர்க் கூந்தல் மருங்கசைவில் கவிதை பாட, அடங்காக் குழற்சுருள் ஒன்றிரண்டு பிரிந்தசைந்து நெஞ்சைப் பிளந்தெடுக்க, கைவளையும் 'கல கல'வும் கடலருகே இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய, பின்புறமெல்லாம் மனதில் பித்தேற்ற, திரும்பினால் குத்தீட்டிகள் நெஞ்சைக் குற்றுயிராக்கிவிட....

கால் பட்ட மணலிலும், கண்பட்ட மனதிலும் பல சுவடு பதித்து... இவன் பட்டதுயர், படும் துயர் கொஞ்சமும் அறியாமல் குதித்தோடும் பல கும்பல்!

துருப்பிடித்த இதயத்தைத் துடைக்க வந்த இடத்தில் மீண்டும் துருவேற்றிவிடும் சூடகத் தளிர்க்கைம் மாதர்!

நதியின் முணுமுணுப்பாய் நகைகளின் மென்னோலியும், அவற்றை அசைத்தொலித்த அங்கங்களும், சிரிப்பொலியும், அது தந்த இதழ்களும், வீணையை விழுங்கிய பேச்சொலியும் தெறித்து வளைந்து சுருண்டு சுழன்று சுழியிட்டு வந்து, உந்திச் சுழிக்குத் தீமிட்டு, முதுகுத் தண்டை எரியவிட்டு, மூளைக்குள் கொதிரசம் ஊற்றி, உடலே சூளையாகும். உயிர் தகிக்கும் சூட்டால்.

எதிலாவது மோதி மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டும்; சிதறித் தெறித்துவிட வேண்டும் என்கிற இம்சை வெறி எழுந்தது.

இது என்ன மூர்க்கத்தனம்? வசந்தனுக்கு வேதனையாக இருந்தது. இருவேறு உடல்களின் தகிப்பு! பெண் எனும் மென்மைக்குள் புதைந்து அந்த உடலுடன் ஒன்றாகி விட வேண்டும் என்ற தாபம்!

சொல்லொணா இனிமையுடன் உடலெங்கும் பரவுகிறது வலி!

மோகமுள்ளின் பாய்ச்சல்.... நரக இன்பம்.....

எதிர்ப்பால் உடல்களுக்குள் ஏன் இத்தனை காந்த விசை?

தெருவின் தூரத்து முனையில் நடந்துசென்றுகொண்டிருந்த ஒரு பாவாடையின் அசைவு அத்தனை வெய்யிலையும் மேவிய அனலாகக் கண்களை வந்து தாக்கியது.

எரிக்கும் வெயிலதனில் துடிக்கும் என்பிலதாய் இப்படியும் அப்படியும் தவிதவித்து மயங்கி உலகத்துப் பெண்ணெல்லாம் அணங்காகி வெறியூட்ட... தசைகளினுள் பேய்க்காற்று சீறியது.

கட்டில் பஞ்சணையில் போய் விழுந்தான். விழிகளின் வெப்பம் தலையணையைச் சுட்டது. நரம்புகளினுள்ளே சுடுநீரோட்டம். எழுந்து அறையைப் பூட்டிக்கொண்டு நடந்தான்.

பசித்த நாயின் நடை.

கடற்கரை வந்து சேர்ந்தான். கடற்காற்றிலும் கனலேற்றிவிட, காரிகையர் கும்பல்!

விதவிதமாய் அசைவுகள் அலைகளுக்கு ஒளியூட்டும் குதிகால்கள், வான் நீலப் பின்னணியில் வாழ்வின் அபாய வளைவுகள்.



வாலைக்கிளப்பி தசைகள் முறுக்கி, கொம்பால் முட்டி, குளம்பால் கீறும் இந்த மிருகம் ஆண்மனதுக்குள் இருந்து திமிற பெண்தானே காரணம்......

உயிரை உழுது செல்லும் அவளின் அழகு! உள்ளத்தில் இன்பம் துள்ளும். கவிதைக் கனி பிழிந்த சாற்றினிலே பண், கூத்து என்பவற்றின் சாரமெல்லாம் ஏற்றி, அதனோடு இன்னமுதைக் கலந்து காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால் செய்தது தானா பெண்ணின் மேனி?

அந்தக் கண்கள்!

ஓ! நஞ்சை நடுவே வைத்துச் சுற்றிலும் அமுதம் பூசிச் செய்யப்பட்டவை!

பாதி மூடிய இமைகளினூடே பார்த்தால் வருவது பாசக்கயிறல்லவா?

மலர்களினால் உருவான இவள் எப்படி ஆடவர் உயிருண்ணும் ஆயுதசாலையானாள்?

தன் கிங்கரர்களால் முடியாத ஒன்றைச் சாதிப்பதற்காக எமன்தான் பெண்ணுரு எடுத்துவந்து உலவுகிறானா?

உலகத்து அழகுகளையெல்லாம்

**தருவது**
**முழடில்யன்**

ஒன்று சேர்த்துச் சமைத்ததா இந்த உடல்?

இருவேறு உடல்களின் பொறாமை!

...... நல்லார் உறுப்பெலாங் கொண்டு இயற்றி யாள்கொல் வெறுப்பினால் வேண்டுருவம் கொண்டதோர் கூடற்றம் கொல்....!

ஒரு முறுவலுக்கே உயிருண்ணும் ஆற்றல் வருவது எங்ஙனம்?

'பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம் ஆண்மையில் திரிந்து தன் அருந்தொழில் திரியாது, நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப் பண்மொழி நரம்பின் திவவுயாழ் மிழற்றிப் பெண்மையில் திரியும் பெற்றியு முண்டென'ப் பாடுகிறானே இளங்கோ..... எமன் தான் தனது ஆணுருவம் மாறி, கொடுவேல் நெடுங் கண்ணோடும் குறுஞ்சிரிப்போடும் ஆழகுப் புயல்களாக உலவித் திரிகிறானா?

இந்தப் பெண்களைப் பெற்றவர்கள் இவர்களால் ஆண்கள் பெறும் வாதை அறியமாட்டார்களா? கோமகளுரு வாய்க் கூற்றம் தான் வந்திருப்பதை உணராதவர்களா?

உடலின் ஒவ்வொரு அணுவிலும் ஆயுதங்கள் பூட்டி, அவை செய்யும் கொலைகளின் எண்ணிக்கையை அறியாது, கண்களைப் பேசவிட்டு வாயை மூடிச் செல்லும் பெண்ணே! நீ அல்ல குற்றவாளி; நீ செய்யும் கொலைத் தொழில் அறிந்து உன்னை வீட்டிற்குள் பூட்டி வைக்காமல், உயிர் கொல்லும் வாகனமாய் வெளியே உலவவிட்ட உன் சுற்றத்தாரும் குற்றவாளிகல்ல.

மதம் கொண்ட யானையை நீரருந்தவோ நீராட்டவோ குளத்திற்குக் கூட்டிச் செல்ல வேண்டுமானால்.

முதலில் என்ன செய்ய வேண்டும்?

அந்த யானையால் மக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டுவிடாதிருக்க, யானை செல்லும் வழியிலிருந்து எல்லோரையும் விலகிவிடச் சொல்ல வேண்டுமன்றோ?

அவ்வாறு ஆபத்தை விளைவிக்கும் யானை செல்லும் வழியை முன்கூட்டியே முரசறைந்து ஊராருக்குத் தெரிவித்துவிடுதல் போல,

பெண்ணே, நீ செல்லும் பாதையையும் முன்கூட்டியே பறையறைந்து ஊருக்குச் சொல்லிவிட்டுத்தான் உன்னைப் போகவிட வேண்டும் என்று ஆணையிடாத அரசே தவறுடையதாகும்.

**மயிர்வார்ந்த வரிமுன்கை**
**மடநல்லாய் நிற்கண்டார்**
**உயிர் வாங்கும் என்பதை**
**உணர்தியோ உணராயோ;**
**எனவாங்கு,**
**பேதுற்றாய் போலப்**
**பிறர் எவ்வம் நீ அறியாய்**
**யாதொன்றும் வாய்வாளாது**
**இறந்து ஈவாய் கேள் இனி**
**நீயும் தவறில்லை**
**நின்னைப் புறங்கடைப்**
**போதர விட்ட நுமரும் தவறிலர்**
**நிறை அழி கொல்யானை**
**நீர்க்கு விட்டாங்குப்**
**பறை அறைந் தல்லது**
**செல்லற்க என்னா**
**இறையே தவறுடை யான்.**

*(கலித்தொகை - 20:25-34)*

## சிந்தியா பதில்கள்

**❀ இந்திய அணிக்கு அஸாருதீன், ஜடேஜா, இருவரும் மீண்டும் தேவை என நான் நினைக்கின்றேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

எம்.எம்.இமாம் ஹஸன், ஹெம்மாதகம.

இந்திய அணியின் தேவை திறமையான ஆட்டக்காரர்களல்ல. மற்றெந்த நாட்டு அணிகளையும் விட, முதல்தரமான பல ஆட்டக்காரர்களைக் (அஸார், ஜடேஜா உட்பட) கொண்டிருக்கும் அணி அது. தேவை - அணியொற்றுமை.

❒◆



**❀ பாகிஸ்தான் டெஸ்ட்டில் அரவிந்த், அர்ஜுன எப்படி?**

வி.சுதாகரன், கொழும்பு-13.

துவக்க காலத்திலேயே, 'இந்த இடதுகை ஆட்டக்காரர் உலகையே கலக்கப்போகிறார்' என்று மேற்கிந்திய சோபர்ஸினால் கணிக்கப்பட்ட அர்ஜுன.... இலங்கை அணியின் இக்கட்டான கட்டங்களையெல்லாம் தன் துடுப்பாட்டத்தால் நிமிர்த்திய அரவிந்த்... இருவரின் திறமை குறித்தும் தேவை குறித்தும் யாருக்கும் கேள்வி இருக்க முடியாது.

ஆனால் சனத் தலைமையில் சாதனைகள் புரியும் இளைய அணிக்கு, இவர்கள் குந்தகமாக இல்லாமலும் நடந்துகொள்ள வேண்டும்.

❒◆

**❀ பொங்கலன்று 'முகம்' பார்த்தீர்களா, மனதைப் பிசைகின்றதல்லவா?**

ஜெயக்குமார் மாலதி, கொழும்பு-05.

எப்போது பார்த்தாலும் சங்கடமாய்த்தானிருக்கிறது. நல்ல நாள் பெருநாட்களிலாவது கண்ணாடியை உள்ளே எடுத்துவைத்துவிட வேண்டும்... என்று தான் பதிலெழுத நினைத்தேன். பிறகுதான். நீங்கள் பொங்கலன்று ஒளிபரப்பான அருந்ததியின் 'முகம்' தொலைக்காட்சிப் படம்பற்றி கேட்கிறீர்கள் என்று புரிந்தது. மறதி... நாளாகிவிட்டதல்லவா.... ம்.. 'முகம்....' வெளிநாடுகளில் ஒரு பகுதி நம்மவர்களின் நிலைமையை இங்கு பலர் அறிந்து கொள்ள உதவியது.

❒◆

**❀ இந்த வார கடி ஜோக் ஒன்று கூறுங்கள்?**

எஸ்.எச்.எம்.றிபாய், கல்முனை-08.

இந்த வாரக் கடி தெரியாது. கடந்த மாதக்கடி ஒன்றைச்சொல்லலாமா- என் நண்பர் 'கடித்தது'

"வருசத்தில் எந்த மாதத்துக்கு 28 நாட்கள்?"

"இது தெரியாதா.... பெப்ரவரிக்குத் தான்...."

"ம்ஹூம்.... எல்லாமாதத்துக்கும் 28 நாட்கள் வரும்...."

❒◆

**❀ ஏற்றிவிட்ட ஏணியையே எட்டி உதைப்பவர்கள் பற்றி?**

எஸ்.பத்மாவதி, கொழும்பு-10.

பிறந்து வந்த பாதையையே திட்டுவதற்கு உபயோகப்படுத்தும் ஜென்மங்கள் நாம்.

❒◆

**❀ தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதியாக விடுதலைப் புலிகளை அங்கீகரித்துப் பேச்சு நடத்த வேண்டும் என்கிறார்களே?**

மா.ஜெயவரதன், வவுனியா.

மூட்டை முடிச்சுக்களைத் தூக்கிக் கொண்டு முல்லைத்தீவுக்குப் போய்விட வேண்டியதுதானே, கொழும்பில் அரசாங்கப் பாதுகாப்பை வலியுறுத்திப் பெற்று வைத்துக் கொண்டு அரசியல் செய்யும் படி அவர்களா சொன்னார்கள்?

❒◆

**❀ ஒரு சாண் வயிற்றுக்கே மனிதன் இந்த ததிங்கிணதோம் போடுகிறான். ஒரு முழமாக இருந்தால்...?**

எஸ்.பி.கணேஷ், தாண்டியடி.

நெஞ்சும் வயிறாகிவிடும். ததிங்கிணதோமில் வெட்கமிருக்காது.

❒◆

**❀ 'படைப்பதனால் நானும் இறைவன்' என்றாரே கண்ணதாசன்.... கவிஞர்களைக் கடவுள் என்று சொல்லலாமா?**

எம்.நந்தினி, தலவாக்கலை.

எல்லோருக்குள்ளும் இறைவன் இருக்கிறான் என்று இந்துமதம் சொல்வதால், உங்களையும் கடவுள் என்று சொல்லிக் கொள்ளலாம். அழிப்பவனுக்கு இறைவன் என்பதால் போர்வீரர்களும் கடவுளாகிவிடுவர். ஆனால் தாகூரோ வேறுவிதமாகச் சொல்கிறார். "என்னைப்போல பாமரனும் கவிதை படைக்க முடியும். ஆனால் ஒரு பூச்செடியை ஆண்டவன் தான் படைக்க முடியும்!"

❒◆

**❀ 'திருநெல்வேலி' பார்த்தீர்களா? தந்தையை ஞாபகமூட்டும் பிரபுவின் நடிப்பு எப்படி?**

கனக.முகுந்தன், யாழ்ப்பாணம்.

பிரபுவை விடுங்கள். நகைச்சுவை அரசராக விவேக் உயர்ந்து வருகிறார் என்பதற்குச் சாட்சி அந்தப்படம். "நூறு பெரியார் வந்தாலும் உங்களைத் திருத்த முடியாதப்பா..." என்று அவர் சலித்துக் கொள்வது. மணிவண்ணனிடமிருந்த எம்.ஆர். ராதாவை இவர் தூக்கிக் கொண்டு விட்டார் என்று காட்டுகிறது.

❒◆

**❀ பத்திரிகைகளில் வருகின்ற கேள்வி-பதில் பகுதிகளில் பதில் சொல்பவருக்கு இருக்க வேண்டிய தகுதி என்ன?**

இரா.சுந்தர், கம்பளை.

உங்களை மாதிரிக் கேள்வி கேட்பவர்கள் வாழ்கின்ற சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டிருத்தல்.

❒◆

**❀ மார்ச் 8?**

எஸ்.விஜயகுமாரி, ஹற்றன்.

எங்களைச் சக்தி என்று தொழவும் வேண்டாம் புழுப் போல் மிதிக்கவும் வேண்டாம்.

❒◆



'திருநெல்வேலி' படத்தில் பிரபு-ரோஜா

**❀ சிந்தியாவைப் பொறுத்தவரை ஆபாசம் என்பது என்ன?**

எம்.எம்.பஷீர், பேருவளை.

எல்லா இடங்களிலும் காணமுடிகின்றது. நம்மில் பலரது மனங்கள் ஆபாசக் கூடைகளாகவே உள்ளன. தெருவில் போகும் பெண்ணை திருட்டுத்தனமாய் உரித்துப் பார்த்த அனுபவத்தில், வீட்டில் குழந்தைகள் பத்திரிகைப் படங்களைப் பார்த்துக் கெட்டுப் போகிறது என்று ஆசிரியருக்குக் கடிதம் எழுதுபவரிடத்திலும் ஆபாசம்தான் கொட்டிக் கிடக்கிறது.

(செக்ஸ் சாமியார் என்று தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட ரஜனீஸ் கூறிய குட்டிக்கதை ஒன்றைத் தருகிறேன்.)

ஒரு பேராசிரியர் உடற்கூறியல் வகுப்பில், "உணர்வுகளின் தூண்டுதலிலே பத்து மடங்கு பெரிதாகும் மனித உறுப்பு எது?" என்று, ஒரு மாணவியைக் கேட்டார்.

அந்தப் பெண் நாணத்துடன், "இதற்கு நான் பதில் கூறமாட்டேன்!" என்றாள்.

பேராசிரியர் அருகில் இருந்த மாணவனைக் கேட்டார். அவன் "கண்ணின் கருவிழி!" என்று கூறினான்.

பேராசிரியர் மாணவியைப் பார்த்துக் கூறினார்:

"உனது குழப்பம் மூன்று விஷயங்களைக் காட்டுகிறது. ஒன்று, நீ பாடங்களை சரியாகப் படிப்பதில்லை. இரண்டு, உனது மனம் அழுக்கானது, மூன்று, நீ மிகவும் ஏமாற்றத்திற்குள்ளாவாய்." ○

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 38

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரான், உயிர்த்தெழுந்து தமது சீடர்கள் முன் பல தடவைகள் தோன்றினார். சீடர்களில் பலருடன் அவர் உரையாடியபோதும், சில சந்தர்ப்பங்களில் தங்களுடைய கண்களால் அவர்கள் கண்டது இயேசுபிரான்தானா என்பதைத் திட்டவட்டமாக அவர்களால் அறிய முடியவில்லை.

எருசலேமிலிருந்து எம்மாவுக்குச் சென்ற இரு சீடர்களுடன் சென்ற இயேசுபிரான், இரவு உணவுக்குப் பின்னர் அவர்கள் மத்தியிலிருந்து மறைந்து விட்டார். இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் அடுத்தநாள் எருசலேம் திரும்பினார்கள். சீடர்கள் தங்கியிருந்த முகாமைச் சென்றடைந்தார்கள். அங்கு சீடர்கள் பதினொருபேரும் வேறுபலரும் இருந்தார்கள். அவர்கள் அப்போதும் இயேசுபிரானின் உயிர்த்தெழுந்த கதையையே பேசிக் கொண்டிருந்தனர்.

"இயேசுபிரான் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டுவிட்டார். அவர் சீமோனுக்குக் காட்சி கொடுத்துள்ளார்," என்று கூறினார்கள். அவ்விருவரும், இயேசுபிரான் எருசலேமிலிருந்து எம்மா என்ற ஊர்வரை தங்களுடன் உரையாடிய வண்ணம் வந்ததையும், இரவு உணவின் பின்னர் மறைந்து விட்டதையும் சொன்னார்கள்.

இயேசுபிரானையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

உணவினை உட்கொண்ட பின், இயேசுபிரான் சீடர்களைப் பார்த்து, "மோசேயின் சட்டத்திலும் இறைவாக்கினர் நூல்களிலும் திருப்பாடல்களிலும் என்னைப் பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேற வேண்டும் என்று நான் உங்களோடு இருந்தபோதே உங்களுக்குச் சொல்லியிருந்தேனே!" என்றார். அப்போது மறைநூலைப் புரிந்துகொள்ளுமாறு அவர்களுடைய மனக் கண்களைத் திறந்தார். அவர் அவர்களிடம், "மெசியா துன்புற்று இறந்த மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்றும், 'பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்!' என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவருடைய பெயரால் பறைசாற்றப்பட வேண்டும் என்றும் எழுதியுள்ளது. இவற்றுக்கு நீங்கள் சாட்சிகள். இதோ, என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்" என்றார்.

இவ்வாறு கூறியபின் இயேசுபிரான் அங்கிருந்து மறைந்தார். இயேசுபிரான் தமது சீடர்களுக்குக் காட்சி கொடுக்கும்போது, கான முகாமில் இருந்தனர். இம்முகாமின் கதவுகளை நன்கு மூடியே வைத்திருப்பார்கள். இயேசுபெருமானை ஒழித்துக் கட்டி விட்டால், அவர் கூறிய கருத்துக்களால் மேற்கொண்டு மனம் திரும்புவதற்கு எவரும் விரும்பமாட்டார்கள் என்றே தலைமைக் குருக்களும் அவர்தம் அடிவருடிகளும் நம்பினர். இவ்வேளையில் இயேசுவின் சீடர்கள் பகிரங்கமாக நடமாடினால், அவர்களையும் பிடித்து ஒழித்துக் கட்டிவிட குருக்களும் குழுவினரும் தயங்க மாட்டார்கள். தவிர சீடர்களையும் தேடிப்பிடித்து விடவும் ஒற்றர்களையும் குருக்களும் குழுவினரும் ஏவியிருந்தனர்.

ரோம அரசின் காவலர்களைக் காணவும் சீடர்கள் பயந்தார்கள். ஆகவே இவர்கள் வெளியில் நடமாடுவதைக் கூடுமான வரை தவிர்த்தே வந்தார்கள். இதனால்தான் அவர்கள் தங்கியிருந்த முகாமின் கதவுகளையும் நன்றாகப் பூட்டிவிட்டு உள்ளேயே தங்கியிருந்தனர்.

### காயத் தழும்புகள்

சீடர்கள் இருந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்றோர் குரல் எழுந்தது. அவர்கள் மத்தியில் இயேசுபிரான் தத்ரூபமாக நின்றிருந்தார். முதலில் தோமாவின் பக்கம் திரும்பி, "இதோ என் கைகள். என் கால்களையும் எனது விலாவையும் பாருங்கள். தோமா, உன் விரலை இந்தக் காயத் தழும்புகளுள் விட்டுப் பார். உன் ஐயத்தை இப்போதாவது தவிர்த்துக் கொள்7" என்றார்.

## ஆண்டவரின் அற்புதங்கள்



சீடர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்த போது அவர்கள் மத்தியில் ஒருருவம் திடீரென்று தோன்றியது.

அவ்வாறு தோன்றியது இயேசு பெருமானே என்பதை சீடர்கள் கண்டு கொண்டனர். அனைவரும் ஆண்டவரை நோக்கிக் கைகூப்பித்தொழுதனர்.

"உங்களுக்கு அமைதி உண்டாகட்டும்!" என்று ஆசிவழங்கி வாழ்த்தினார். இருப்பினும் சில சீடர்கள் அச்சம் கொண்டனர். ஏதோ ஓர் ஆவியின் விளையாட்டாக இருக்கலாமோ என்றும் ஐயுற்றனர். இதை அவதானித்த இயேசுபிரான்,

### கலங்க வேண்டாம்

"நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்? ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்ளுகிறீர்கள்? என் கைகளையும் கால்களையும் தொட்டுப்பாருங்கள். நானே தான். நன்றாகத் தொட்டுப்பாருங்கள். எனக்கு எலும்பும் தசையும் இருப்பதைக் காண்கிறீர்களே! இவை ஆவிக்குக் கிடையதே!" என்று சீடர்களிடம் எடுத்துரைத்தார். அத்துடன் தன் கைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். இதன் பிறகு அவர்கள் ஐயத்துக்கிடமின்றி, தங்களுடன் நின்று உரையாடுபவர் இயேசுபிரானே என்ற உண்மையை உணர்ந்து கொண்டனர்.

இயேசுபிரான் மேலும் அவர்களிடம் ஐயம் எனும் அச்சம் ஒட்டிக் கொண்டிராதவாறு அவர்களுடைய மனத்தைத் தூய்மைப் படுத்தக் கருதியவராய், "உண்பதற்கு உங்களிடம் ஏதாவது உணவு இருக்கிறதா?" என்று கேட்டார். வேகவைத்த மீன் ஒன்றை அவர்கள் இயேசு பெருமானுக்குக் கொடுத்தனர். அதனை உவப்போடு ஏற்று உண்ணத் தலைப்பட்டார். சீடர்களுக்கு அளவிட முடியாத ஆனந்தம் மேலிட்டது. பெருவியப்புடன் அவருடைய பன்னிரு சீடர்களுள் ஒருவரான திதிம் என்றழைக்கப்படும் தோமா அங்கிருக்கவில்லை. அவர் பின்னர் சீடர்களிடம் வந்ததும், இயேசுபிரான் அவர்களுக்குக் காட்சி கொடுத்ததையும் உரையாடியதையுமிட்டுக் கூறினார்கள். அவர்களுடைய கூற்றை தோமா ஏற்றுக் கொள்ளவில்லை. "நீங்கள் பார்த்துப் பேசியவர் உண்மையில் எமது ஆண்டவரான இயேசுபிரானாக விருந்தால், அவருடைய கைகளைப் பார்த்தீர்களா? அவரைச் சிலுவையில் அறைந்தபோது கைகளிலும் கால்களிலும் அந்தக் கொடியவர்கள் கூரான ஆணிகளால்

## இராஜகுமாரன்

அடித்தார்களே! அந்த ஆணிகள் ஏற்படுத்திய காயத் தழும்பைப் பார்த்தீர்களா?" என்று வினவினார்.

### தோமாவின் கேள்வி

சீடர்களே, இயேசு பிரானைத் தங்கள் மத்தியில். கண்டதும் முதலில் தயங்கினாலும் 'உண்மையில் இயேசுபிரானேதான்!' என்பதனை உணர்ந்து கொண்டனர். அப்போது அவர்களுக்கு ஏற்பட்ட வியப்பினாலும் உணர்ச்சிப் பெருக்கினாலும் வேறு எந்த எண்ணமும் அப்போது ஏற்படவில்லை. இயேசுபிரானின் கைகளிலும் கால்களிலும் சிலுவையில் அறையப்பட்டபோது ஏற்பட்ட காயங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராயும் மனப்பான்மை இருக்கவில்லை. ஆகவே தோமா எழுப்பிய ஐயப்பாட்டுக்கான பதிலைக் கூற அவர்களால் முடியவில்லை.

இச்சம்பவம் நடைபெற்று எட்டு நாட்கள் கடந்த பின்னர் சீடர்கள் அனைவரும் தங்களுக்

தோமாவின் உடல் நடுங்கியது. "ஆண்டவரே! என் அறியாமையை மன்னியுங்கள். நீங்களே எமது ஆண்டவர் நீங்களே எங்கள் கடவுள்!" என்று தழுதழுத்த குரலில் கூறியவாறு முழங்காலில் அமர்ந்து இரு கைகளையும் கூப்பி வணங்கினார்.

ஆண்டவரான இயேசுபிரான் தோமாவை ஆசிர்வதித்து எழுந்திருக்கும்படி சொன்னார், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய், ஆனால் காணாமலே நம்புவோர் பேறு பெற்றவர்7" என்றார்.

இதே போன்று தமது சீடர்களுக்கு மட்டுமல்ல, அவர் மீது பற்று வைத்திருந்த விசுவாசிகள் பலருக்கும் கூட இயேசுபிரான் பல தடவைகள் காட்சி கொடுத்தார். பல அற்புதங்களையும் செய்தார். தீராத நோயால் துன்புற்ற பலருடைய துன்ப துயரங் களையும் நீக்கினார்.

இயேசுபெருமானின் சீடர்களில் சிலர் திபெரிக் கடலில் மீன் பிடிப்பதற்காக வலை வீசிக் கொண்டிருந்தார்கள். இவர்களில் திதிம் எனப்படும் தோமா, சீமோன் பேதுரு, கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நத்தனியேல், செபதேயுவின் மக்கள் ஆகியோரும் இருந்தனர். பல தடவைகள் வலையை வீசியும் எதுவித மீனும் பிடிபடவில்லை. இரவு கடந்து பொழுது புலரும் நேரமாகியும் மீன் கிடைக்காமையினால் உடலும் மனமும் சோர்வடைந்தவர்களாகக் கரை திரும்புவதற்கு எண்ணினார்கள்.

அப்போது கரையில் ஒருருவம் நின்று அவர்களையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்களைப் பார்த்து, "பிள்ளைகளே! மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" என்று அவ்வுருவம் வினவியது. அவர்கள், "இல்லை" என்றார்கள். "படகின் வலப்பக்கமாக வலையை வீசுங்கள். மீன் கிடைக்கும்7" என்ற குரல் எழுந்தது. அதன்படி வலப்பக்கமாக வலையை வீசியதும் வலை கொள்ளும் அளவை விட மிகவும் அதிகமான மீன்கிடைத்தது.

அத்தனைபேர் சேர்ந்தும் இழுக்க முடியாத அளவு பெருந்தொகை மீன் வலையில் பிடிபட்டிருந்தது. இப்புதுமையைக் கண்டதும்தான் சீடர்களுக்கு உண்மை புலப்பட்டது. கரையில் நின்றவண்ணம் அவர்களுக்கு கட்டளையிட்டவர் இயேசுபிரானே என்பதை அறிந்து குதூகலம் அடைந்தனர்.

சீமோன் பேதுரு கடலில் குதித்து வலையை மேலே உயர்த்துவதற்கு உதவினார். ஏனையோரும் பெரும்பாடுபட்டு மீன்களுடன் வலையை இழுத்து மீன்களை படகுக்குள் கொட்டிய பின்னர் கரையை நோக்கிச் சென்றார்கள்.

படகை விட்டு இறங்கியதும் மற்றுமொரு அதிசயம் அவர்களைக் காத்திருந்தது. கரையில் தீ மூட்டப்பட்டிருந்தது. அடுப்பின் மீது மீன் வேக வைக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் அப்பமும் அங்கு காணப்பட்டது. இயேசுபிரானும் அங்கு நின்றிருந்தார். சீடர்களைப் பார்த்து "உணவருந்த வாருங்கள்!" என்றார். இரவு முழுவதும் கண் விழித்து, உணவும் உட்கொள்ளாமல் பசியுடனும் களைப்புடனும்இருந்த சீடர்கள் ஆண்டவரான இயேசுபிரானின் கருணையை வியந்தவர்களாக உணவருந்தச் சென்றார்கள்.

(அடுத்த இதழில் நிறைவு பெறும்)

**திருமறை [பு.ஆ] 36 விடை: யோசேப்பு**

**பரிசு பெறுவோர்:**

1. **வே. சிவலிங்கம்,** குருக்கள்மடம்.
2. **சி. சர்மினி,** தோணிக்கல், வவுனியா.
3. **எஸ். இராஜாராம்,** பாம்காடின், இரத்தினபுரி.
4. **எம். ஜெசிந்தா,** 88/1, புகையிரத வீதி, அப்புத்தளை.
5. **எஸ். திலகேஸ்வரன்,** அம்பாந்தோட்டை, கெங்கல்ல.

**திருமறை [பு.ஆ] 38 வினா :- ஆண்டவர் சீடர்கள் மத்தியில் தோன்றியதை நம்பாதவர் யார்?**

மார்ச் 11 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை – பு.ஆ.38 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**











அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

Accredited by National Gem & Jewellery Authority

அருள் ARUL JEWELLERS

3, Sea Street, Colombo - 11. Tel: 436331

Branch: 105, Galle Road, Colombo 6. Tel: 580230



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்



SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

323657

# மேலதிக வண்ணப்பூச்சு



உள்ளரங்க பனிச்சறுக்குப் போட்டிகளில் 'கிராண்ட் சிலாம்' விருதுகளை உலகனாயிவர்திவில் இருமுறை வென்றவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவரான கதரினா விற் என்பவர்.

1984ல் ஒலிம்பிக் விருதினையும் அதே ஆண்டில் ஐரோப்பிய விருதினையும் விற் வென்றெடுத்தார்.


இத்தகைய விருதுகளை ஆஸ்திரியாவைச் சேர்ந்த காள் ஸ்காஃபர் 1932 லும், நோர்வேயைச் சேர்ந்த சொஞ்சாஹெனி 1936லும் வென்றெடுத்தனர்.

உள்ளரங்கில் பாரிய தொட்டி ஒன்றை அமைத்து, அதில் தண்ணீரை நிரப்பிய பின்னர் அத் தண்ணீரை உறைய வைத்து, அந்த உறை பனியின் மீது சறுக்கிச் சாகசச் செயல்களைச் செய்து காட்டுவார்கள். பனிச் சறுக்கல் நடைபெறும்போது பின்னணி இசையுடன் நடன நிகழ்ச்சியாகவே நடைபெறும்.

நெதர்லாந்து ரொட்டர்டாமில் 1998 நவம்பரில் ஒரு விசித்திரமான போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'உயிருடன் உலவும் பாலங்கள்' என்ற கொண்டாட்டத்தின் போது, தங்கள் உடல்களின் மீது மிக அதிகமான பாகங்களையும் வண்ணப்பூச்சினால் பூச வேண்டும் என்பதுதான் போட்டி.

இப்போட்டியில் மொத்தம் 110 பேர் பங்கெடுத்தனர். இவர்களில் இரு பெண்கள் இங்கு காட்சி தருகின்றனர்.

இப்போட்டியில் பங்கு பற்றிய இந்த இரு நங்கையரும் குதூகலமாக இங்கு காட்சி தருகின்றனர். எனினும் இது உயிராபாயமான ஒரு செயல். ஜேம்ஸ் பொண்ட் ஆங்கிலப் படம் ஒன்றில் தோன்றிய ஒரு நடிகை தன் உடல் முழுவதும் தங்கவர்ணத்தைப் பூசி நடித்தார். அதுவே அவருடைய உயிருக்கு உலைவைத்துவிட்டது.



# மலை உச்சிகளைத் தொட்டவர்

உலகிலுள்ள எட்டாயிரம் அடிகளுக்கு மேலுள்ள 14 சிகரங்களைத் தொட்டவர் இங்கு கரடியுடன் காணப்படும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ரெயின்ஹோல்ட் மெஸ்னர். இத்தனை சிகரங்களையும் எட்டுவதற்கு இவர் பிரத்தியேகமாக பிராணவாயுக் கலங்கள் எதனையும் எடுத்துச் செல்லவில்லை.

இமயமலையுடன் இணைந்திருக்கும் கஞ்சன்சங்கா சிகரத்தை இவர் 1982ல் எட்டினார். அத்துடன் உலகில் அதியுயரமான இமாலய மலைச்சிகரத்தையும் கே-2 என்ற சிகரத்தையும் தொட்டார். 1980ம் ஆண்டில் இமய மலைச்சிகரத்தை மெஸ்னர் தனியாகவே எட்டித் தொட்டுச் சாதனையை நிலைநாட்டினார்.

பெரும்பாலான மலையேற்றங்களில் இவர் பிராணவாயு கொண்டுசெல்லாமலே சாதனை புரிந்துள்ளார்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



செல்ஷியா கருணாகரன் 09.03.2000

[illegible]



[illegible]